



# தமிழ்நாடு இபேப்பர்.காம்

www. tamilnaduepaper.com

CHENNAI | Volume- 3 | Issue:251 | 27-03-2026 | வெள்ளிக்கிழமை | Free E- Paper | ● சென்னை ● மதுரை ● கோவை ● திருச்சி





## இன்றைய பஞ்சாங்கம்

27.03.2026 பங்குனி 13
வெள்ளிக்கிழமை

சூரிய உதயம் 6.15

**திதி:**
இன்று பிற்பகல் 12.51 வரை நவமி பின்பு தசமி.

**நட்சத்திரம்:**
இன்று மாலை 5.48 வரை புனர்பூசம் பின்பு பூசம்.

**யோகம் :**
இன்று அதிகாலை 2.56 வரை சோபனம் பின்பு அதிகண்டம்.

**கரணம்**
இன்று அதிகாலை 1.54 வரை பாலவம் பின்பு பிற்பகல் 12.52 வரை கௌலவம் பின்பு தைதுலம்.

**அமிர்தாதி யோகம் :**
இன்று காலை 6.14 வரை அமிர்த யோகம் பின்பு மாலை 5.48 வரை சித்த யோகம் பின்பு யோகம் சரியில்லை.

**சந்திராஷ்டமம் :**
இன்று மாலை 5.48 வரை கேட்டை பின்பு மூலம்.

**நல்ல நேரம்**
காலை 9.30 – 10.30.
மாலை 4.30 – 5.30.

**இராகு காலம்**
காலை 10.30 – 12.00.

**எமகண்டம்**
பிற்பகல் 3.00 – 4.30.

**குளிகை**
காலை 7.30 – 9.00.

இன்று ராமநவமி

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
இராமமூர்த்தி
செல்: 8189908040

# ஏப்ரல் 2ம்தேதி முதல் பிரசாரத்தை தொடங்குகிறார் மு.க.ஸ்டாலின்



**சென்னை, மார்ச் 27:**

தமிழக சட்டசபை தேர்தல் ஏப்ரல் மாதம் 23-ந் தேதி நடைபெற உள்ளதை முன்னிட்டு, அதற்கான வேட்புமனு தாக்கல் வரும் 30-ந் தேதி தொடங்க இருக்கிறது. சட்டசபை தேர்தலுக்கான வாக்கு எண்ணிக்கை மே 4ம் தேதி நடைபெற்று, அதே நாளில் தேர்தல் முடிவுகளும் அறிவிக்கப்பட உள்ளது.

இந்த நிலையில் தி.மு.க., அ.தி.மு.க., நா.த.க. த.வெ.க. உள்பட அனைத்து கட்சிகளும் தங்களுடைய தேர்தல் பணிகளை தீவிரப்படுத்தி வருகின்றனர். குறிப்பாக கூட்டணி பேச்சுவார்த்தை, தொகுதி பங்கீடு விவகாரம், தேர்தல் பிரச்சாரம், தேர்தல் வாக்குறுதிகள் உள்ளிட்டவற்றில் அனைத்து கட்சிகளும் தீவிரமாக செயல்பட்டு வருகின்றன.

இதனிடையே தேர்தலில் தி.மு.க. கூட்டணியில் காங்கிரஸ், தேமுதிக, மதிமுக, விடுதலை சிறுத்தைகள், கம்யூனிஸ்டு உள்பட பல்வேறு கட்சிகள் இடம்பெற்றுள்ளன.கூட்டணியில் உள்ள பெரும்பாலான கட்சிகளுக்கு தொகுதி பங்கீடு நிறைவடைந்துள்ளது.

அதன்படி திமுக - 165*, காங்கிரஸ் - 28, தே.மு.தி.க. - 10, விடுதலை சிறுத்தைகள் கட்சி - 8, இந்திய கம்யூனிஸ்டு கட்சி - 5, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி - 5, ம.தி.மு.க. - 4, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் - 2, மனிதநேய மக்கள் கட்சி - 2, கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி - 2, மனிதநேய ஜனநாயக கட்சி - 1, எஸ்.டி.பி.ஐ. -1, முக்குலத்தோர் புலிப்படை - 1 என தொகுதிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதில் தி.மு.க. எந்தெந்த தொகுதிகளில் போட்டியிடுவது.. கூட்டணி கட்சிகளுக்கு எந்த தொகுதிகளை கொடுப்பது என்ற பட்டியல் இன்றைக்குள் முடிவு செய்யப்பட்டுவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதன் பிறகு சனி அல்லது ஞாயிற்றுக்கிழமைகளில் தி.மு.க. வேட்பாளர் பட்டியல் மற்றும் தேர்தல் அறிக்கைகளை முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிடுவார் என்று கூறப்படுகிறது.

இதனைத்தொடர்ந்து முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் தி.மு.க. கூட்டணி கட்சி வேட்பாளர்களை ஆதரித்து தமிழகம் முழுவதும் சென்று பிரசாரம் செய்ய இருக்கிறார்.

இதன்படி திருவாரூரில் ஏப்ரல் 2ம் தேதி தேர்தல் பிரசாரத்தை முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்க உள்ளார். மாநிலம் முழுவதும் பயணம் மேற்கொள்ளும் அவர், ஏப்ரல் 21ம் தேதி கொளத்தூரில் தனது பிரசாரத்தை நிறைவு செய்கிறார்.

# மணிப்பூரில் இந்திய ராணுவ முகாமின் மீது குகி தீவிரவாதிகள் துப்பாக்கிச் சூடு!



**மணிப்பூர், மார்ச் 27:**

மணிப்பூரின் பௌகாக்சாவ் அவாங் லெய்காயில் அமைந்துள்ள இந்திய ராணுவ முகாமைக் குறிவைத்து குகி தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

இந்தச் சம்பவம் புதன்கிழமை நள்ளிரவு நடைபெற்றது. பௌல்ஜாங் மற்றும் கோத்தோல் பகுதிகளுக்கு அருகே சந்தேகத்திற்குரிய ஆயுதமேந்திய குகி தீவிரவாதிகள் துப்பாக்கிச் சூடு நடத்தியதாக மணிப்பூர் காவல்துறை தெரிவித்தனர்.

மணிப்பூர் காவல்துறை எக்ஸ் தளத்தில் பகிரப்பட்ட பதிவில், 2026 மார்ச் 25 அன்று இரவு சுமார் 11.40 மணியளவில் சந்தேகத்திற்குரிய ஆயுதமேந்திய குகி தீவிரவாதிகள் ஃபௌல்ஜாங்/கோத்தோல் பொதுப் பகுதியில் துப்பாக்கிச் சூடு நடத்தினர். இந்தத் தாக்குதல் இந்திய ராணுவ முகாம் நோக்கி நடத்தப்பட்டது.

இந்தச் சம்பவத்திற்கு இந்திய ராணுவம் மற்றும் மத்திய ரிசர்வ் காவல் படையின் 58-வது பட்டாலியன் ஆகியவை தாக்குதல் நடத்திவந்த திசையை நோக்கித் திருப்பிச் சுடுவதன் மூலம் உடனடியாகப் பதிலடி கொடுக்கப்பட்டன. சுமார் 30 நிமிடங்கள் இந்த துப்பாக்கிச் சண்டை நீடித்தது.


இன்று அதிகாலை முதல் துப்பாக்கிச் சூடு நடைபெற்ற பொதுப் பகுதியிலும், அதனை ஒட்டியுள்ள மலைப் பகுதிகளிலும் இந்திய ராணுவம், சிஆர்பிஎஃப், மணிப்பூர் காவல்துறை மற்றும் இந்திய ரிசர்வ் பட்டாலியன் ஆகியவை இணைந்து ஒரு கூட்டு நடவடிக்கையைத் தொடங்கின.

நிலைமையைத் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருவதாகவும், மலைப் பகுதியைச் சுற்றிப் பாதுகாப்புப் படைகள் நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகின்றனர். அதேசமயம் பொதுமக்கள் எச்சரிக்கையுடன் இருக்குமாறும், வதந்திகளைப் பரப்புவதைத் தவிர்க்குமாறும் அதிகாரிகள் கேட்டுக்கொண்டனர்.

முன்னதாக, மணிப்பூரில் உள்ள பாதுகாப்புப் படைகள், பாட்சோய் காவல் நிலைய எல்லைக்குள்பட்ட ஐக்கிய தேசிய விடுதலை முன்னணியின் (பம்பே தலைமையிலான பிரிவு) செயல்பாட்டாளரைக் கைது செய்தன. மேலும், இம்பால் மேற்கு மாவட்டத்தில் 6 சட்டவிரோத பதுங்கு குழிகள் அழிக்கப்பட்டன.

சம்பவ இடத்தில் பாதுகாப்புப் படையினர் தொடர்ந்து விழிப்புடன் இருந்து வருகின்றனர். அப்பகுதியில் வன்முறை மேலும் தீவிரமடைவதைத் தடுக்கும் வகையில் பாதுகாப்புப் படைகள் நிலைநிறுத்தப்பட்டுள்ளன. இவ்வாறு அவர் பதிவிட்டுள்ளார்.

# ரயிலில் ரூ.4 கோடி பணம் பறிமுதல் விவகாரம்: நயினார் மீது வழக்குப் பதியக் கோரி திமுக மனு



**சென்னை, மார்ச் 27:**

2024-ம் ஆண்டு மக்களவை தேர்தலின் போது நெல்லை விரைவு ரயிலில் ரூ.4 கோடி பணம் கைப்பற்றப்பட்டது தொடர்பாக பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் மீது வழக்குப் பதிவு செய்ய அமலாக்கத் துறைக்கு உத்தரவிடக்கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் திமுக சார்பில் மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கடந்த 2024ம் ஆண்டு மக்களவை தேர்தலின் போது நெல்லை விரைவு ரயிலில் ரூ.4 கோடி பணம் கைப்பற்றப்பட்டது. தாம்பரத்தில் பணம் கைப்பற்றப்பட்ட நிலையில் திருநெல்வேலி தொகுதியில் போட்டியிட்ட நயினார் நாகேந்திரன், அவரது தொகுதி வாக்காளர்களுக்கு கொடுப்பதற்காக இந்த பணம் கொண்டு செல்லப்பட்டதாக கூறப்பட்டது.

இந்நிலையில், இந்த விவாகரம் தொடர்பாக பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன், தமிழக பாஜகவின் முன்னாள் அமைப்பு பொதுச்செயலாளர் கேசவ விநாயகம் ஆகியோர் மீது வழக்குப் பதிவு செய்ய அமலாக்கத் துறைக்கு உத்தரவிடக்கோரி மாநிலங்களவை திமுக உறுப்பினர் கிரி ராஜன் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்துள்ளார்.

அதில், இந்த விவகாரம் தொடர்பாக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன், முன்னாள் அமைப்பு பொதுச்செயலாளர் கேசவ விநாயகம் ஆகியோர் மீது சிபிசிஐடி வழக்குப் பதிவு செய்துள்ளதாக கூறியுள்ளார்.

மேலும், இந்த விவகாரத்தில் சட்டவிரோத பணப் பரிமாற்றம் நடந்துள்ளதாகவும் இது தொடர்பாக மூல வழக்குப் பதிவு செய்தும் இந்த விவகாரத்தில் அமலாக்கத் துறை வழக்குப் பதிவு செய்யவில்லை என்று மனுவில் தெரிவிக்கப் பட்டுள்ளது. இந்த விவகாரத்தில் ஆரம்பகட்ட விசாரணை நடத்துவது கட்டாயமானது என்பதால் வழக்குப் பதிவு செய்ய அமலாக்கத் துறைக்கு உத்தரவிட வேண்டும் என மனுவில் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது.

நயினார் நாகேந்திரனும், கேசவ விநாயகமும் பாஜகவை சேர்ந்தவர்களாக இருப்பதால் இந்த விவகாரத்தில் அமலாக்கத்துறை நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் மனுவில் குற்றம்சாட்டப்பட்டுள்ளது. இந்த மனு விரைவில் விசாரணைக்கு வரவுள்ளது.

# வெய்யில் படிப்படியாக அதிகரிக்கும்



**சென்னை, மார்ச் 27:**

தென் தமிழக கடலோர மாவட்டங்கள் மற்றும் மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில் மார்ச் 31, ஏப்ரல் 01 ஆகிய தேதிகளில் ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும். ஏனைய தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும்.

தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் மார்ச் 26ல் அதிகபட்ச வெப்பநிலையில் குறிப்பிடத்தக்க மாற்றதிற்கான வாய்ப்பு குறைவு. மார்ச் 27 முதல் 30 வரை தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை ஓரிரு இடங்களில் 2-3° செல்சியஸ் வரை படிப்படியாக உயரக்கூடும்.




# ரூ. 115 கோடி வங்கி மோசடி ரிலையன்ஸ் டெலிகாம் முன்னாள் இயக்குநர்கள் மீது சிபிஐ வழக்கு!

**புதுடெல்லி, மார்ச் 27:**

மோசடி மற்றும் குற்றவியல் முறைகேடு குற்றச்சாட்டுகள் தொடர்பாக, ரிலையன்ஸ் டெலிகாம் லிமிடெட்டின் முன்னாள் இயக்குநர்களான சதீஷ் சேத் மற்றும் கௌதம் பி தோஷி மீது மத்திய புலனாய்வுப் பிரிவு (சிபிஐ) வழக்குப் பதிவு செய்துள்ளது. பாரத ஸ்டேட் வங்கி அளித்த புகாரின் அடிப்படையில், இந்த வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. புகாரில், அந்த நிறுவனம் வங்கியை ஏமாற்றி, ரூ. 114. 98 கோடி போலியான இழப்பை ஏற்படுத்தியதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழ் குற்றச் சதி மற்றும் மோசடிக் குற்றச்சாட்டுகளின் பேரிலும், 1988 ஆம் ஆண்டு ஊழல் தடுப்புச் சட்டத்தின் கீழ் குற்றவியல் முறைகேடு மற்றும் அதிகார துஷ்பிரயோகம் ஆகிய குற்றச்சாட்டுகளின் பேரிலும் சிபிஐ குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீது வழக்குப்பதிவு செய்துள்ளது.

இதனைத் தொடர்ந்து, மும்பையிலுள்ள சதீஷ் சேத் மற்றும் கௌதம் பி தோஷி ஆகியோரின் இல்லங்களிலும், ரிலையன்ஸ் டெலிகாம் லிமிடெட் நிறுவனத்தின் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்திலும் சிபிஐ சோதனைகளை நடத்தியது.

இந்தச் சோதனைகளின் போது, கடன் பரிவர்த்தனைகள் தொடர்பான பல்வேறு ஆவணங்கள் மீட்கப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ரிலையன்ஸ் டெலிகாம் லிமிடெட் நிறுவனத்திற்கு மொத்தம் ரூ. 735 கோடி தவணைக் கடன் வசதியை வழங்கிய 11 வங்கிகள் அடங்கிய கூட்டமைப்பில் எஸ்பிஐ உறுப்பினராக இருந்தது குறிப்பிடத்தக்கது.

# ஆந்திராவில் டிப்பர் லாரி மோதி தனியார் பேருந்து தீப்பிடித்து எரிந்தது: 13 பேர் உயிரிழப்பு



**மார்கபுரம், மார்ச் 27:**

ஆந்திரப் பிரதேச மாநிலத்தின் மார்க்கபுரம் மாவட்டத்தின் ராயவரம் பகுதியில், இன்று (மார்ச் 26) அதிகாலையில் பேருந்து மீது லாரி மோதிய விபத்தில் 13 பேர் உயிரிழந்தனர், 25 பேர் காயமடைந்தனர்.

இந்த விபத்து குறித்துப் பேசிய மார்க்கபுரம் மாவட்டப் பொறுப்பு ஆட்சியர் பி. ராஜா பாபு, "பேருந்தில் பயணித்த 41 பயணிகளில், 13 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்; அவர்களது உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. காயமடைந்து மார்க்கபுரத்தில் உள்ள அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள 25 பேரில், 10 பேர் பலத்த காயங்களுடன் சிகிச்சை பெற்று வருகின்றனர். மேலும், இதில் 5 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. கவலைக்கிடமான நிலையில் உள்ள அந்த 5 பேரும் குண்டூர் அரசுப் பொது மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளனர்" என்று தெரிவித்தார்.

காவல்துறை அதிகாரிகளின் தகவலின்படி, காலை 5:30 மணி முதல் 6:00 மணிக்குள், ஒரு வளைவுப் பாதையில் இந்த விபத்து நிகழ்ந்துள்ளது. அப்போது, கனி கிரியிலிருந்து சரளைக் கற்களை ஏற்றிக்கொண்டு வந்த ஒரு டிப்பர் லாரி மீது, தனியார் சுற்றுலாப் பேருந்து மீது நேருக்கு நேர் மோதியது. விபத்துக்குள்ளான அந்தப் பேருந்து ஹரிகிருஷ்ணா டிராவல்ஸ் நிறுவனத்திற்குச் சொந்தமானது. இந்தப் பேருந்து தெலங்கானாவின் நிர்மல் பகுதியிலிருந்து ஆந்திராவின் நெல்லூர் மாவட்டத்தில் உள்ள விஞ்சமூருக்குப் பயணித்துக் கொண்டிருந்தது.

விபத்து குறித்து குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு வெளியிட்ட இரங்கல் செய்தியில், "ஆந்திர பிரதேச பஸ் விபத்து பற்றி அறிந்து ஆழ்ந்த கவலையடைந்தேன். பாதிக்கப்பட்டோரின் குடும்பத்திற்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்து கொள்கிறேன். காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைந்து திரும்ப வேண்டி கொள்கிறேன்." என்று தெரிவித்துள்ளார்.

அதேபோல், நிவாரண உதவிகளை அறிவித்த பிரதமர் மோடி, விபத்தில் உயிரிழந்த ஒவ்வொருவரின் குடும்பத்துக்கும் தலா ரூ.2 லட்சம் நிவாரணத் தொகையாக வழங்கப்படும் என்றும், காயமடைந்தவர்களுக்கு ரூ.50,000 வழங்கப்படும் என்றும் தெரிவித்தார்.

இந்த விபத்து குறித்து தகவல்களை அறிய மார்க்கபுரம் மற்றும் நெல்லூர் மாவட்ட நிர்வாகங்கள் சார்பில் கட்டுப்பாட்டு அறைகள் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றின் தொடர்பு எண்கள்: 6304285613, 9985733999, 7989537285, 9703578434 (மார்க்கபுரம்); 7995575699 மற்றும் 08612331261 (நெல்லூர்).



# திருக்குறள் குறள்-571

**கண்ணோட்டம் என்னுங் கழிபெருங் காரிகை
உண்மையான் உண்டிவ் வுலகு**



கண்ணோட்டம் என்று சொல்லப்படுகின்ற மிகச் சிறந்த அழகு இருக்கும் காரணத்தால் தான், இந்த உலகம் அழியாமல் இருக்கின்றது.

## சிந்திக்க ஒரு நொடி



சிரிக்கும்போது நான்கு பேர்
உன்னுடன் சேர்ந்து
சிரிப்பார்கள்
ஏனென்றால்....
உலகம் ஜாலியானது
அதே அழும்போது
தனியாகத்தான் அழுவாய்.
ஏனென்றால் உலகம்
போலியானது....

**உஷா முத்துராமன்**

## திருப்புல்லாணி பிரம்மோற்சவம்



மூன்றாம் நாள் காலை திருப்புல்லாணி பிரம்மோற்சவம்

**ஸ்ரீஆண்டாள் சந்திர பிரபை வாகனத்தில் புறப்பாடு**



ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் திருக்கல்யாண உற்சவத்தை முன்னிட்டு இரண்டாம் நாள் இரவு ஸ்ரீஆண்டாள் சந்திர பிரபை வாகனத்தில் புறப்பாடு.

## இராஜமன்னார்குடி ஸ்ரீ வித்யா இராஜகோபால ஸ்வாமி திருக்கோயில்



பங்குனி ப்ரும்மோத்ஸவ பதினெட்டாம் திருநாள் ஸப்தாவர்ணம், த்வாதஸாராதனம், புஷ்பயாகம், த்வஜா அவரோஹணம், ஸ்ரீ பெருமாள் மாட வீதி புறப்பாடு.

கமலா சரணாம் போஜ கௌஸ்து பாங்கித வக்ஷஸே கல்யாண குணபூர்ணாய சம்பகேசாய மங்களம் நித்ய ஸ்ரீ நித்ய மங்களம் !

# இன்று ஸ்ரீராம நவமி வைபவம் (2026)





சித்திரை மாதத்து வளர்பிறை நவமியில் ஸ்ரீராமச்சந்திர மூர்த்தி அவதரித்தார். ஆனால் சில ஆண்டுகளில் இந்த விழா, இன்றுபோல பங்குனி மாதத்திலும் வரும்.

ஸ்ரீராமநவமி உற்சவம் இருவிதமாகக் கொண்டாடப் படுகிறது. ஒன்று, ஜனன உற்சவம் மற்றொன்று கர்ப்ப உற்சவம்.

**கர்ப்ப உற்சவம்:**

ராம நவமிக்கு ஒன்பது நாட்களுக்கு முன்னாலேயே இந்த உற்சவம் தொடங்கப்படும். தினமும் ராமர் படத்துக்கு அர்ச்சனை செய்து, ராம நாமத்தை உச்சரித்தும், விரதமிருந்தும் வழிபடுவார்கள். சர்க்கரைப் பொங்கல், புளியோதரை, வெண்பொங்கல் போன்ற பிரசாதங்களை நிவேதனம் செய்து பக்தர்களுக்கு விநியோகிப்பார்கள்.

ஸ்ரீராமநவமி அன்று பானகமும் நீர்மோரும் கட்டாயம் நிவேதனம் செய்வார்கள். காரணம், கானகத்தில் விஸ்வாமித்திர முனிவரோடு வாழ்ந்த போது அவர்கள் தாகத்துக்கு நீர்மோரும், பானகமும் பருகினார்கள்.

**ஜனன உற்சவம்:**

இந்த உற்சவம் ஸ்ரீராமநவமி அன்று தொடங்கி பத்து நாட்கள் நடத்தப்படும். பத்தாம் நாள் சீதா கல்யாணமும், பட்டாபிஷேகமும் மிகச் சிறப்பாக நடைபெறும். இந்தப் பத்து நாட்களிலும் பஜனை, ராமாயண பிரசங்கம் என கோலாகலமாகக் கொண்டாடுவார்கள் பக்தர்கள்.

பானகம், நீர்மோரோடு ஆரம்பிக்கும் நிவேதனம் பத்தாம் நாள் கல்யாண ஆராதனையாக நிறைவு பெறும்.

மானிடத் திருமணத்துக்குச் செய்வது போலவே பலவகையான பதார்த்தங்கள் செய்து அன்னதானமும் நடைபெறும். இந்தக் கல்யாண விருந்தை உண்டால் மனச்சோர்வு, கவலை ஆகியவை நீங்கும். ஆரோக்யம் உண்டாகும். ஸ்ரீராமர் பிறந்தபோது புனர்பூசநட்சத்திரம் 4-ம் பாதத்தில் ஐந்து கிரகங்கள் உச்சத்தில் இருந்தனவாம்.

ராம நாமமானது அஷ்டாட்சரமான 'ஓம் நமோ நாராயணாய' என்பதில் உள்ள 'ரா' என்ற எழுத்தையும், பஞ்சாட்சரமான 'நமச்சிவாய' என்ற எழுத்தில் 'ம' என்ற எழுத்தையும் சேர்த்து 'ராம' என்றானது.

நவமி திதியில் புனர்பூச நட்சத்திரத்தில் கடக ராசி மற்றும் லக்னத்தில் ஜென்ம ராசியில் பிறந்தவர். லக்னத்தில் குரு உச்சம் பெற்று ஸ்ரீ ராமர் தெய்வீகத்தன்மையோடும், சாஸ்திரம் பிறழாமலும் வாழ காரணமாகி நின்றார்.

ராமன் பிறந்த நட்சத்திரம் புனர்பூசம், லக்கினம் கர்க்கடகம். வேய் என்றால் வில் என்று ஒரு பொருள். அதாவது புனர்பூச நட்சத்திரம் வில்லைப் போன்று தோற்றமளிக்குமாம். ஸ்ரீராமன் பிறந்தபோது பூமியின் துன்பம் தீர்ந்தது என்று புவிமகளும், விண்ணில் உள்ள தேவர்களும் மகிழ்ந்தனராம்.




இன்று ஸ்ரீராமசந்திர மூர்த்தியை பட்டாபிஷேக கோலத்திலே வணங்க வேண்டிய நாள்.

இன்று ஸ்ரீராமநாமம் சொல்லி மகிழ்வோம்...!

அவன் அருளை பெறுவோம்...!!

ஆன்மீக தொகுப்பு: பா.சீனிவாசன் வந்தவாசி.

# ஸ்ரீராம நவமி உற்சவம்



புஷ்கர் ஸ்ரீ ராம வைகுண்டநாத சன்னதி ஸ்ரீராம நவமி உற்சவம் முதல் நாள் புறப்பாடு திவ்ய சேவை.

## கூடலழகர் வசந்த உத்ஸவம்



மதுரை கூடலழகர் வசந்த உத்ஸவம் இரண்டாம் திருநாள்.

## ஸ்ரீராமநவமி உத்சவம்



ஸ்ரீராமஸ்வாமி கோவில் கும்பகோணம். ஸ்ரீராமநவமி உத்சவம் 8ம் திருநாள் காலை தங்க பல்லாக்கு வெண்ணைதாழி கண்ணன் சேவை.

# மாணவர்களுக்கு ஓவியப்போட்டி, கவிதைப் போட்டி







**தஞ்சாவூர், மார்ச் 27:** தஞ்சாவூர் மாவட்டம், செங்கிப்பட்டி அருகில் உள்ள ஆர்.வி.எஸ். வேளாண்மைக் கல்லூரியில் மாவட்ட ஆட்சியரின் அறிவுறுத்தலின் அடிப்படையில், மாவட்ட சமூக நலத்துறை சார்பாக தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் 100% வாக்களிப்பின் முக்கியத்துவத்தை உணர்த்தும் விதமாக ஓவியப்போட்டி, கவிதைப் போட்டி மாணவர்களுக்கு நடைபெற்றது. மேலும் தஞ்சாவூர் தேர்தல் தூதுவர்களான மெய்யன், மெய்யாள் ஓவியம் வரையப்பட்டு அதனை சுற்றி 100% வடிவத்தில் நின்று விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. மாணவர்கள் ஆசிரியர்கள் அனைவரும் வாக்காளர் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். இந்த நிகழ்வில் கல்லூரி இயக்குநர் முனைவர் பெ. பாண்டியராஜன், முதல்வர் எஸ். வி. கிருஷ்ணமூர்த்தி, மாவட்ட சமூக நலத்துறை, மாவட்ட ஒருங்கிணைப்பாளர் G. திருமுருகன், கல்லூரி பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர். இந்நிகழ்வை உதவிப் பேராசிரியர் ச. லோகநாதன் மற்றும் உதவிப் பேராசிரியர் கரிமனிஷா ஆகியோர் ஒருங்கிணைத்தனர். நாள். 26.03.2026

## ஸ்ரீராம நவமி விழா



ஸ்ரீ அலர்மேல் மங்கை தாயார் சமேத ஸ்ரீபிரஸன்ன வெங்கட நரசிம்ம பெருமாள் கோவில், ராகுந்தபுரம் (மேற்கு சைத்தாப்பேட்டை)

ஸ்ரீ ராமர் யானை வாகனம் உள்-புறப்பாடு நாள் 6 ஸ்ரீராம நவமி விழா.

## ஸ்ரீசத்குரு சாய்பாபா தியான ஆலயத்தில் சிறப்பு அலங்காரம்



மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி தென்பாதியில் அமைந்துள்ள ஸ்ரீசத்குரு சாய்பாபா தியான ஆலயத்தில் வியாழக்கிழமை சிறப்பு ஆரத்தி மற்றும் அலங்காரம் நடைபெற்றது.

## காட்பாடி ரெட் கிராஸ், கல்வி நிறுவனத்துடன் இணைந்து 100% வாக்களிப்பை வலியுறுத்தி விழிப்புணர்வு பேரணி!





**வேலூர், மார்ச் 27:** காட்பாடி ரெட் கிராஸ், கல்வி நிறுவனம் தேர்தல் ஆணையத்துடன் இணைந்து 100 சதவீதம் வாக்களிப்பை வலியுறுத்தி விழிப்புணர்வு பேரணிநடந்தது.

இந்திய தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதலின்படி, 23.04.2026 ல் நடைபெற உள்ள சட்டமன்ற பொதுத் தேர்தலில் 100 சதவீதம் வாக்காளர்கள் வாக்களிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி விழிப்புணர்வு பேரணியானது இந்தியன் ரெட் கிராஸ் சங்கம், ஆர். ஐ. சி. டி.,கல்வி நிறுவனம், வேலூர் மாவட்ட இந்திய தேர்தல் ஆணையத்துடன் இணைந்து பேரணி நடைபெற்றது. இந்த பேரணியை சமூக பாதுகாப்பு திட்ட தனி துணை ஆட்சியர் மற்றும் காட்பாடி தேர்தல் நடத்தும் அலுவலர் சி.மாறன் தொடங்கி வைத்து பேசினார்.

உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் ஆர். பாலச்சந்தர் முன்னிலை வகித்தார். பேரணியானது 26.03.2026 காலை 10 மணி அளவில் டி. கே. எம். கல்யாண மண்டபம் அருகில் இருந்து புறப்பட்டு சில்க் மில் சந்திப்பு, காங்கேயநல்லூர் சாலை வழியாக மீண்டும் கல்யாண மண்டபம் அருகில் வந்து நிறைவு பெற்றது. காட்பாடி ரெட் கிராஸ் சங்க அவைத்தலைவர் முனைவர் செ.நா.ஜனார்த்தனன் தலைமை தாங்கினார். ஆர்.ஐ.சி.டி.கல்வி நிறுவன இயக்குனர் கே. எஸ். அஷ்ரப் வரவேற்றார். துணை வட்டாட்சியர் முருகன், இந்தியன் ரெட் கிராஸ் சங்கத்தின் மாவட்ட செயற்குழு உறுப்பினர் ஆர்.ஸ்ரீநிவாசன், காட்பாடி கிளை அவை துணைத் தலைவர் ஆர். விஜயகுமாரி, செயலாளர் எஸ். எஸ்.சிவவடிவு, பொருளாளர் வி.பழனி, மேலாண்மை குழு உறுப்பினர்கள்டாக்டர். வி.தீனபந்து, எஸ்.ரமேஷ்குமார் ஜெயின், பி.என்.ராமச்சந்திரன், தணிகை ஜி. செல்வம், ஜெ.குமரவேல், திருமகள் செல்வமணி, ஞானவேல், சோமசுந்தரம் கல்வி நிறுவன ஆசிரியர்கள் ரீட்டா, என். பிரசாந்த், ராஜசிம்மன், ஆனந்தகுமார் ஆர்.ஐ.சி.டி.பாரா-மெடிக்கல் கல்வி நிறுவன கல்லூரி மாணவர்கள் திரளாக பங்கேற்றனர்.

# வல்லநாட்டில் 100% வாக்குப்பதிவு வலியுறுத்தி பேரணி





தமிழக சட்டமன்ற தேர்தல் வரும் 23ஆம் தேதி நடைபெறுவதையொட்டி தூத்துக்குடி மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் மாவட்ட சுகாதார அலுவலர் யாழினி உத்தரவின்படி 100% வாக்களிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி வாக்காளர் விழிப்புணர்வு பேரணி நடத்தப்பட்டு வருகிறது.

அதன் ஒரு பகுதியாக கருங்குளம் வட்டாரத்திற்குட்பட்ட வல்லநாடு அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு உட்பட்ட பகுதியில் வாக்காளர் உரிமை விழிப்புணர்வு பேரணி நடந்தது.

இந்தப் பேரணியில் கிள்ளிகுளம் அரசு வேளாண்மை கல்லூரி மாணவர்கள் கலந்து கொண்டனர். கருங்குளம் வட்டார சுகாதார மேற்பார்வையாளர் முத்துக்குமரன் வெங்கடேசன் அவர்கள் தலைமை வகித்தனர். சுகாதார ஆய்வாளர்கள் கனகராஜ், பால கண்ணன், ஜெபஸ்டின், நித்திஷ், கார்த்திக் ராஜா, ஜெயராஜ் மற்றும் வேளாண்மை கல்லூரி பேராசிரியர் கண்ணன் கலந்து கொண்டனர். பேரணி வல்லநாடு பஸ் நிலையத்திலிருந்து புறப்பட்டு பஜார் வரை சென்றது. பேரணியில் கல்லூரி மாணவ, மாணவிகள் உங்கள் ஓட்டு, உங்கள் உரிமை, உங்கள் எதிர்காலம் தவறாமல் வாக்களிப்போம் ஜனநாயகத்தை காப்போம். வாக்களிப்பது நமது உரிமை மட்டுமல்ல கடமையும் 100% வாக்களிப்போம் இதுவே நமது இலக்கு காசுக்கு ஓட்டு போடாதே நாட்டை விலை பேசாதே 18 வயது நிரம்பிய அனைவரும் கட்டாயம் வாக்களிப்போம் வாக்களிப்பது ஜனநாயக கடமை வாக்களிப்பது நமது வாழ்வுரிமை மற்றவர்கள் சொல்வதைக் கேட்காதே மனசாட்சிப்படி வாக்களிப்போம் நல்லாட்சியை தேர்ந்தெடுப்போம் நமது முதல் கடமை சுதந்திரமாக வாக்களிப்பது என் பொது மக்களுக்கு விழிப்புணர்வு அளிக்கப்பட்டது.

# 2026 தேர்தல் கொண்டாட்டம்



## இவர்கள் கூறுவதென்ன?

### தேமுதிக தொகுதிகளை இறுதிசெய்ய சுதீஷ் தலைமையில் 6 பேர் குழு

திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியில் கூட்டணிக் கட்சிகளுக்கான தொகுதிகளின் எண்ணிக்கை நேற்று முன்தினம் முடிவு செய்யப்பட்டது. கூட்டணியில் கடைசியாக இணைந்த தேமுதிக-வுக்கு 10 தொதிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இந்நிலையில், திமுக கூட்டணியில் தேமுதிக போட்டியிடும் தொகுதிகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்துவதற்கு 6 பேர் கொண்ட குழுவை சுதீஷ் தலைமையில் தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதா அறிவித்துள்ளார்.

இதில் இளங்கோவன், பார்த்தசாரதி, அழகாபுரம் மோகன்ராஜ், எம்.ஆர்.பன்னீர்செல்வம் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். விருகம்பாக்கம், ரிஷிவந்தியம், விருதுநகர், சாத்தூர், பண்ருட்டி, விருதாச்சலம், சேலம் மேற்கு, ஆம்பூர் உள்ளிட்ட 25 தொகுதிகளை தேமுதிக தனது விருப்பப் பட்டியலாக திமுக-விடம் தந்திருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

### பாமக வேட்பாளர் பட்டியல்: முதல்கட்டமாக 3 தொகுதிகளுக்கு அறிவித்தார் அன்புமணி

அதிமுக கூட்டணியில் பாமக-வுக்கு 18 தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ள நிலையில், முதல்கட்டமாக நேற்று 3 தொகுதிகளுக்கான வேட்பாளர்களை பாமக தலைவர் அன்புமணி அறிவித்தார்.

அதிமுக கூட்டணியில் இடம்பெற்றுள்ள பாமக-வுக்கு சேலம் (மேற்கு), தருமபுரி, பென்னாகரம், விக்கிரவாண்டி, சோளிங்கர், மயிலாடுதுறை, திருப்போரூர், உத்திரமேரூர், ஜெயங்கொண்டம், போளூர், செஞ்சி, விருத்தாசலம், ரிஷிவந்தியம், காட்டுமன்னார்கோவில் (தனி), கீழ்வேளூர், பெரம்பூர், சேலம் (வடக்கு), அம்பத்தூர் ஆகிய 18 தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், பாமக முதல் கட்ட வேட்பாளர் பட்டியலை பாமக தலைவர் அன்புமணி நேற்று அறிவித்தார். அதன்படி, கீழ்வேளூர் - ச.வடிவேல் ராவணன் (பாமக பொதுச் செயலாளர்), அம்பத்தூர் - என்.சேகர் (மாநில துணைத் தலைவர் - முன்னாள் நகர் மன்றத் தலைவர்), செஞ்சி - அ.கணேஷ் குமார் (இளைஞரணி தலைவர் - முன்னாள் எம்எல்ஏ) ஆகியோர் வேட்பாளர்களாக போட்டியிட உள்ளனர்.

### திமுகவை நம்பியவர்கள் நடுரோட்டில் நிற்பார்கள்: பிரச்சாரத்தில் பழனிசாமி ஆவேசம்

அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி தேர்தல் அறிவிப்புக்குப் பிறகான தனது தேர்தல் பிரச்சாரத்தை, வளர்பிறை முகூர்த்த நாளான நேற்று மயிலாப்பூர் கபாலீஸ்வரர் கோயிலில் வழிபாடு செய்து, மயிலாப்பூர் தொகுதிக்கு உட்பட்ட மந்தைவெளி புனித மேரி சாலையில் திரண்டிருந்த மக்கள் மத்தியில் மேற்கொண்டார். அப்போது அவர் பேசியதாவது:

நான் ஏற்கெனவே 193 தொகுதிகளில் மக்களை சந்தித்து வாக்குகளை சேகரித்தேன். அது மிகப்பெரிய வெற்றியைக் கொடுத்தது. இறைவன் அருளால் அதிமுக தலைமையிலான தே.ஜ.கூட்டணி 210 இடங்களில் வென்று, அதிமுக அறுதிப்பெரும்பான்மையுடன் ஆட்சியமைக்கும். திமுக-வின் நிலை இன்று பரிதாபமாக உள்ளது. திமுக கூட்டணி அமைப்பதற்கு 20 நாட்களாகப் போராடினார்கள். ஒவ்வொரு கட்சியும் பதறிக்கொண்டிருக்கிறது. அவர்கள் போராடியே தொகுதி பெறும் அவல நிலை உள்ளது. திமுக கூட்டணிக் கட்சிகள் அடிமையாக உள்ளனர். ஆனால், அதிமுக கூட்டணித் தலைவர்கள் சுதந்திரமாக உள்ளனர்.

விசிக-வும் எவ்வளவோ போராடி 8 இடங்களை மட்டுமே பெற்றனர். அங்கீகாரம் இல்லாத கட்சிகளுக்கு அதிகம் இடம்; அங்கீகரிக்கப்பட்ட விசிக-வுக்கு குறைந்த தொகுதி. இனியாவது உணர்ந்துகொள்ளுங்கள், திமுக-வை நம்பியவர்கள் நடுரோட்டில் நிற்பார்கள். அதிமுக கூட்டணியில் கட்சிகளுக்கு உரிய மரியாதை கிடைக்கிறது என்றார்.

### 'டார்ச்'சுக்கு அனுமதிப்பீர்!" - ஸ்டாலினுக்கு திருமாவளவன் கோரிக்கை

மதவாத -திரிபுவாத-வலதுசாரி கும்பலை வீழ்த்த வேண்டிய இந்த அறப்போரில், மக்கள் நீதி மய்யம் கட்சியும் நம்மைப் போலவே தேர்தலில் போட்டியிடும் ஒரு பங்கேற்பாளராக நம்மோடு கைகோர்த்துக் களமாட வேண்டும். அதாவது கமல்ஹாசனும் தங்கள் தலைமையில் கொள்கை பகை வீழ்த்த கருத்தியல் வாளேந்த வேண்டும். மக்கள் நீதி மய்யம் இத்தேர்தலில் போட்டியிடாது என முடிவெடுப்பது அவரது பெருந்தன்மையாக இருக்கட்டும். மதவெறி எதிர்ப்பில் உறுதியாக நிற்கும் கருத்தியல் வலிமையும், நான்கு சதவீத அளவில் உறுதிப்படுத்தப்பட்ட 'வாக்கு வங்கி வலிமையும்', தமிழ்ச் சமூகத்தில் பெரும் செல்வாக்குஎன்னும் உயரிய 'நன்மதிப்பு வலிமையும்'கொண்ட கமல்ஹாசன், 'அவ்வாறு விட்டு விடமாட்டோம்' என அவரை அரவணைத்துக்கொள்ள வேண்டியது தங்களின் உயரிய மாண்பாக அமையட்டும்.

தொகுதிகளின் எண்ணிக்கை எதுவானாலும் அவர்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ள 'டார்ச்' சின்னத்தில்' போட்டியிட அனுமதித்து, கூட்டணியின் மீதான நன்மதிப்பையும் தங்களின் மீதான பெருமதிப்பையும் மென்மேலும் உயர்த்திட வேண்டும் கேட்டுக் கொள்கிறேன் என விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திருமாவளவன் வேண்டுகோள் விடுத்துள்ளார்

## "நிதிஷ் குமாருக்கு ஏற்பட்ட நிலைதான் பழனிசாமிக்கும் வரும்" - அமைச்சர்

"பிஹாரில் நிதிஷ் குமாருக்கு ஏற்பட்ட நிலைதான் அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமிக்கும் வரும்" என்று தமிழக போக்குவரத்து துறை அமைச்சர் சிவசங்கர் விமர்சித்துள்ளார்.

சென்னையில் நேற்று (வியாழக்கிழமை) செய்தியாளர்களை சந்தித்த அமைச்சர் சிவசங்கர் திமுக கூட்டணியின் பலம், அதிமுக தலைமையிலான என்டிஏ கூட்டணியின் பலவீனம் என்று பட்டியலிட்டுப் பேசி, மக்கள் ஏன் மீண்டும் திமுக ஆட்சியை ஆதரிக்க வேண்டும் என்று விளக்கினார்.

அமைச்சர் சிவசங்கர் பேசியதாவது: எடப்பாடி பழனிசாமி கட்சிக்குள் தனக்கிருக்கும் சிக்கல்களை மறைப்பதற்காக மீண்டும் மீண்டும் திமுக மீது தவறான விமர்சனங்களை முன்வைக்கிறார். ஒரு காலத்தில் வட இந்திய கட்சிகள் அதிமுக தலைவர் வீட்டு வாசலில் காத்திருந்ததுபோய்,





இன்றைக்கு ஒவ்வொரு முடிவையும் டெல்லிக்கு பறந்து சென்று எடுத்துவருகிறார் எடப்பாடி பழனிசாமி. அப்படிப்பட்டவர் திமுக கூட்டணியையும், அரசையும், முதல்வரையும் தேவையில்லாமல் விமர்சித்து வருகிறார்.

ஒவ்வொரு முறையும் டெல்லி சென்றுவந்த பின்னர் ஒவ்வொரு கட்சிக்கும் எத்தனை இடங்கள் என்பதை அறிவிக்கும் சூழலில்தான் அவர் இருக்கிறார். அது தமிழ்நாட்டு மக்களுக்குத் தெளிவாகத் தெரியும். அவர் மட்டுமல்ல, அவருடைய கூட்டணியில் உள்ள அமமுக, பாமக உள்ளிட்ட கட்சித் தலைவர்களும் கூட டெல்லிக்கு போய்வந்த பின்னர் தான் தங்களின் பிரச்சினைகள் தீர்ந்தது என்று வெளிப்படையாகச் சொன்னார்கள். விதத்தில் அவருடைய கூட்டணியில் இருப்பவர்களே, கூட்டணிக்கு தலைமை பாஜக, தலைவர் அமித் ஷா என்று உணர்த்தி வருகின்றனர். அப்படியிருக்க அவர் திமுக-வை அடிமைக் கூட்டணி என்பது தேவையற்ற விமர்சனம், அதுவும் குறிப்பாக அவர் விடுதலை சிறுத்தைகள் கட்சியை விமர்சித்து வருகிறார். அக்கட்சி படிப்படியாக தேர்தல் களத்தில் சவால்களை சந்தித்து வளர்ந்த கட்சி. அதன் தலைவர் திருமாவளவன் ஒவ்வொரு முறையும் தேர்தல் களத்தில் வெற்றியை நிரூபித்து வருகிறார்.

நல்லுறவோடு உள்ள எங்களின் திமுக கூட்டணியை பழனிசாமி விமர்சிக்கிறார். ஆனால், அவர் கூட்டணியில் பாஜகவுக்கு கூடுதல் இடங்கள் கொடுத்ததோடு, இந்தமுறை கூட்டணிக் கட்சிகள் தாமரைச் சின்னத்தில் போட்டியிடவும் வழிவகுத்துள்ளார். பாஜக, தமாகா மட்டுமல்லாது ஜான்பாண்டியனின் கட்சி, புதிய நீதிக் கட்சியும் கூட தாமரைச் சின்னத்தில் போட்டியிடுகின்ற நிலை வந்துள்ளது. தமிழகத்தில் நோட்டாவுக்கு கீழே வைக்கப்பட்டிருந்த தாமரைக்கு பழனிசாமி மிகப்பெரிய இடத்தைக் கொடுத்திருக்கிறார்.

எதிர்காலத்தில் பிஹாரில் நிதிஷ் குமாருக்கு ஏற்பட்ட நிலை, மகாராஷ்டிராவில் சிவ சேனா, சரத் பவார் கட்சிகள், கோவாவில் மாநிலக் கட்சிகள் சந்தித்த நிலைதான் பழனிசாமிக்கும், அதிமுகவுக்கும் ஏற்படப்போகிறது. இப்படிப்பட்டச் சூழலில் அதிமுக தொண்டர்களின் சுய மரியாதையை காப்பதுதான் திராவிடக் கட்சி என்று சொல்லும் அக்கட்சி எடுக்கும் சரியான நடவடிக்கையாக இருக்கும். இபிஎஸ் என்னதான் மேக் அப் போட்டு மறைத்தாலும் அவருடைய ஒவ்வொரு முடிவுக்குப் பின்னாலும் அமித் ஷா தான் இருக்கிறார் என்பது கிராமங்கள் வரைக்கும் தெரியும். அதிமுக என்பதை அடிமை திமுக என்ற நிலைக்கு கொண்டு சென்றுவிட்டார் என்பதுதான் கட்சியினரே சொல்வதாக உள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

## சென்னையில் வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு மார்ச் 28-ல் முதல்கட்ட பயிற்சி: தேர்தல் அலுவலர்

சென்னை மாவட்டத்துக்கு உட்பட்ட 16 சட்டப்பேரவைத் தொகுதிகளில் வாக்குச்சாவடி அலுவலர்களுக்கான முதல்கட்ட பயிற்சி வகுப்பு 28-ம் தேதி நடைபெற உள்ளது.

இதுகுறித்து மாவட்டத் தேர்தல் அலுவலரும், சென்னை மாநகராட்சி ஆணையருமான ஜெ.குமரகுருபரன் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது: தமிழக சட்டப்பேரவை பொதுத் தேர்தல் ஏப்.23-ம் தேதி நடைபெற உள்ளது.

சென்னை மாவட்டத்துக்கு உட்பட்ட 16 சட்டப்பேரவைத் தொகுதிகளில் 978 இடங்களில் மொத்தம் 4,079 வாக்குச்சாவடிகள் உள்ளன. வாக்குச்சாவடி மையங்களில் பணிபுரிய உள்ள 19,594 வாக்குச்சாவடி அலுவலர்களுக்கான முதல்கட்ட பயிற்சி வகுப்பு 16 மையங்களில் மார்ச் 28-ம் தேதி காலை 9 மணிக்கு நடைபெற உள்ளது.

குறுஞ்செய்தி வாயிலாக..

பெரம்பூர் தொகுதிக்கு வியாசர்பாடியில் உள்ள டாக்டர் அம்பேத்கர் அரசு கலைக் கல்லூரியிலும், கொளத்தூர் தொகுதிக்கு பந்தர் கார்டன் சென்னை உயர்நிலைப் பள்ளியிலும், ராயபுரம் தொகுதிக்கு மேற்கு மாதா சர்ச் சாலையில் உள்ள புனித பீட்டர் உயர்நிலைப் பள்ளியிலும் பயிற்சி வகுப்பு நடைபெறும்.

அனைத்து தொகுதிகளின் வாக்குச் சாவடி அலுவலர்களுக்கும் பயிற்சி வகுப்புக்கான ஆணைகள் நேரடியாகவும், குறுஞ்செய்தி வாயிலாகவும் அனுப்பப்பட்டு வருகிறது.

இந்த பயிற்சி வகுப்பில் அவர்கள் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும். இதில் கலந்து கொள்ளாத வாக்குச்சாவடி அலுவலர்கள் மீது தேர்தல் நடத்தை விதிகளின்படி, நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## தொகுதிப் பங்கீட்டில் திருப்தி இல்லை என்றாலும் ஏற்றுக் கொண்டோம்: மார்க்சிஸ்ட் செயலாளர் பெ.சண்முகம் ஆதங்கம்

"தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டுவிட்ட நிலையில் கூட்டணி ஒற்றுமை கருதியும், தேர்தல் பணிகள் பாதிக்கப்படக் கூடாது என்கிற முறையிலும் தொகுதிப் பங்கீட்டில் எங்களுக்குத் திருப்தி இல்லை என்றாலும் அதை ஏற்றுக்கொண்டோம்" என மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மாநிலச் செயலாளர் பெ.சண்முகம் தெரிவித்தார்.



சாதிய படுகொலைகளைத் தடுக்க தனிச்சட்டம் இயற்றுவது தொடர்பாக தமிழக அரசால் நீதிபதி கே.என்.பாட்ஷா தலைமையில் ஆணையம் அமைக்கப்பட்டது. அதில் இடம்பெற வேண்டிய பல்வேறு அம்சங்களை பட்டியலிட்டு, ஆணையத்திடம் நீதிபதி பாட்ஷா முன்னிலையில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர் நேற்று வழங்கினர்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அக்கட்சியின் மாநிலச் செயலாளர் பெ.சண்முகம் கூறியதாவது: தேர்தல் நேரத்தில் அரசியல் கட்சிகள் வாக்குறுதிகளை வழங்குவது என்பது வழக்கமானது. ஆனால், தமிழகத்தில் நடைமுறைக்கு சாத்தியமா இல்லையா என்பதை பற்றியெல்லாம் கவலைப்படாமல், எப்படியாவது தேர்தலில் வெற்றிபெற வேண்டும் என்ற நோக்கத்தோடு, அபரிமிதமான வாக்குறுதிகளை வழங்குவதை பல அரசியல் கட்சிகள் வழக்கமாக வைத்துள்ளன. இதன் காரணமாக, அதில் பலவற்றை நிறைவேற்ற முடியாத நிலை ஏற்படுகிறது.

கூட்டணியில் எந்தெந்த கட்சிக்கு எத்தனை தொகுதிகளை வழங்குவது என்பதை தீர்மானிக்கும் உரிமை கூட்டணிக்கு தலைமை தாங்கும் திமுக-வுக்கு இருக்கிறது. தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டுவிட்ட நிலையில் கூட்டணி ஒற்றுமை கருதியும், தேர்தல் பணிகள் பாதிக்கப்படக் கூடாது என்கிற முறையிலும் தொகுதிப் பங்கீட்டில் எங்களுக்குத் திருப்தி இல்லை என்றாலும் அதை ஏற்றுக் கொண்டோம். எங்களுக்கு கூடுதல் தொகுதி கிடைக்கவில்லை என்பது தான் எங்களுக்கு அதிருப்தி. மற்ற கட்சிகளுக்கு கூடுதல் தொகுதிகளை கொடுப்பது பற்றி எங்களுக்கு கவலையில்லை.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## நான் இந்தத் தேர்தலில் போட்டியிடவில்லை: தவாக தலைவர் வேல்முருகன் அறிவிப்பு

"வரும் சட்டப்பேரவைத் தேர்தலில் நான் போட்டியிடப் போவதில்லை" என்று தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் தலைவர் தி.வேல்முருகன் தெரிவித்தார்.



கடந்த 2019 மக்களவைத் தேர்தல் முதல் திமுக கூட்டணியில் தமிழக வாழ்வுரிமைக் கட்சி தொடர்ந்து பயணித்து வந்தது. 2026 சட்டப்பேரவை தேர்தலில் போட்டியிட கூடுதல் தொகுதிகளை வழங்கவும், 10 பிரதான கோரிக்கைகளை நிறைவேற்றவும் அக்கட்சி திமுக-விடம் வலியுறுத்தியது.

ஆனால், திமுக தரப்பில் ஒரு இடம் மட்டும் ஒதுக்குவதாக தெரிவிக்கப்பட்டது.

மேலும், கோரிக்கைகள் தொடர்பாக எந்த வாக்குறுதியும் அளிக்கவில்லை. இதையடுத்து, திமுக கூட்டணியில் இருந்து தவாக விலகுவதாக அக்கட்சியின் தலைவர் தி.வேல்முருகன் அறிவித்தார்.

எனினும், தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இணையப் போவதில்லை என்றும் அவர் தெரிவித்திருந்தார். இதன் தொடர்ச்சியாக சிறிய கட்சிகள், அமைப்பு களுடன் இணைந்து 234 தொகுதிகளிலும் போட்டியிடுவதற்கான ஆலோசனையிலும் அவர் ஈடுபட்டு வந்தார்.

இந்நிலையில், வரும் சட்டப்பேரவை தேர்தலில், தான் போட்டியிடப் போவதில்லை என்று தி.வேல்முருகன் நேற்று அறிவித்தார். இது குறித்து அவர் வெளியிட்ட வீடியா பதிவில், "நான் பண்ருட்டி தொகுதியில் நிற்கப் போவதில்லை என்று நிர்வாகிகளை அழைத்து தெரிவித்தேன். பண்ருட்டி மட்டுமல்லாமல் தமிழக சட்டப்பேரவை தேர்தலில் இந்தமுறை நான் போட்டியிடப் போவதில்லை. கட்சியின் மூத்த நிர்வாகிகளுக்கு வாய்ப்பு வழங்கி, மாநிலம் முழுவதும் பிரச்சாரம் செய்வேன்.

ஒருவேளை மீண்டும் நமக்கு பண்ருட்டி தொகுதியில் இடம் கொடுத்தால்கூட கட்சியின் முன்னணி தலைவர்களைத் தான் நிறுத்துவேன்.

வேறு தொகுதியில் வாய்ப்புக் கிடைத்தாலும் அவர்களைத்தான் நிறுத்துவேன். நான் தமிழகம் முழுவதும் பயணித்து கட்சிப் பணிகளை மேற்கொள்ள இருக்கிறேன். இதற்காக, நீங்கள் அனைவரும் பொறுத்துக் கொள்ள வேண்டும்" என்று உருக்கமாகத் தெரிவித்துள்ளார்.

## புதுச்சேரியில் கை சின்னத்துக்கு வாக்கு சேகரிக்கும் காங்கிரஸாரால் குழப்பம்

புதுவை சட்டப்பேரவைத் தேர்தலில் காங்கிரஸ், திமுக, இடதுசாரிகள், விடுதலை சிறுத்தைகள், தேமுதிக, மதிமுக உள்ளிட்ட கட்சிகள் இண்டியா கூட்டணியை அமைத்துள்ளது.

ஆனால் இண்டியா கூட்டணியில் இடம்பெற்றிருந்த கட்சிகள், கூட்டணி ஒப்பந்தத்தை மீறி அவரவர் விரும்பிய தொகுதிகளில் மனு தாக்கல் செய்துள்ளனர். வேட்புமனு தாக்கலுக்கு பிறகும் தொகுதி பங்கீட்டு குழப்பம் நீடிக்கிறது. காங்கிரஸ் 16 தொகுதிகளில் போட்டியிடுகிறது. மீதமுள்ள 14 தொகுதிகள் திமுக வசம் அளிக்கப்பட்டது. அக்கட்சி, உள்ஒதுக்கீடாக விசிகவுக்கு உழவர்கரை தொகுதியை ஒதுக்குவதாக தெரிவித்தது. ஆனால், விடுதலை சிறுத்தைகள் கட்சி ஊசுடு, நெட்டப்பாக்கம், உழவர்கரை ஆகிய 3 தொகுதிகளிலும் மனு தாக்கல் செய்துள்ளது.

இதற்கிடையே, இண்டியா கூட்டணியில் சேராமல் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் முத்தியால்பேட்டை, பாகூர், திருபுவனை, லாஸ்பேட்டை ஆகிய 4 தொகுதிகளிலும் மனு தாக்கல் செய்துள்ளது. இண்டியா கூட்டணியில் தொடர்வதாக தெரிவித்து வரும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தட்டாஞ்சாவடி, உழவர்கரை ஆகிய இரு தொகுதிகளில் மனு தாக்கல் செய்துள்ளது.



காங்கிரஸ் தொகுதிகளில் மனுதாக்கல் செய்த தங்கள் கட்சி வேட்பாளர்களுக்கு கட்சியில் இருந்து வழங்க வேண்டிய ஏ, பி படிவங்களை திமுக தலைமை வழங்கவில்லை.

இதனால் அவர்களின் மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டன. ஆனால், காங்கிரஸ் சார்பில் மனு தாக்கல் செய்த அனைவருக்கும் அக்கட்சி ஏ, பி படிவங்களை வழங்கியுள்ளது. இதனால் அவர்கள் அனைவரும் காங்கிரஸ் வேட்பாளர்களாக அங்கீகரிக்கப்பட்டு மனுக்கள் ஏற்கப்பட்டுள்ளன.

இதனால் திமுகவுக்கு ஒதுக்கப்பட்ட காலாப்பட்டு, ராஜ்பவன், நெல்லித்தோப்பு, மங்கலம், திருபுவனை ஆகிய தொகுதிகளில் காங்கிரஸ் வேட்பாளர்களும் களத்தில் உள்ளனர். இவர்களை வாபஸ் பெறும்படி காங்கிரஸ் தலைமை அறிவுறுத்தியுள்ளது. ஆனால், கட்சியின் அறிவுறுத்தலை கருத்தில் கொள்ளாமல் காலாப்பட்டு தொகுதியில் முன்னாள் அமைச்சர் ஷாஜகான், ராஜ்பவன் தொகுதியில் வழக்கறிஞர் குமரன், மங்கலத்தில் ரகுபதி, திருபுவனையில் வேலு ஆகியோர் வாக்கு சேகரிக்கும் பணியை தொடங்கி விட்டனர்.

நெல்லித்தோப்பு தொகுதியில் மட்டும் இளைஞர் காங்கிரஸ் தலைவர் ஆனந்தபாபு, "கட்சி தலைமை உத்தரவை ஏற்று மனுவை வாபஸ் பெறுவேன்" என்று அறிவித்துள்ளார்.

மற்ற 4 தொகுதிகளில் கூட்டணி ஒப்பந்தத்தை மீறி மனு தாக்கல் செய்த காங்கிரஸ் வேட்பாளர்கள் கடைசி நாளான இன்று மனுவை வாபஸ் பெற வேண்டும். இல்லாவிட்டால் இந்த 4 தொகுதிகளிலும் திமுக, காங்கிரஸ் போட்டியிடும் நிலை ஏற்படும்.

# திமுக கூட்டணிக்கு ‘இம்மானுவேல் சேகரனார் மிஷன்’ ஆதரவு

**சென்னை, மார்ச் 27:**

நடைபெறவிருக்கும் 2026 சட்டப்பேரவை பொதுத்தேர்தலில் திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு, ‘இம்மானுவேல் சேகரனார் மிஷன்’ ஆதரவு தெரிவித்துள்ளது.

இது குறித்து திமுக சார்பில் வெளியிடப்பட்டிருக்கும் அறிக்கையில், “ராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி, ஒட்டப்பாலம் ‘இம்மானுவேல் சேகரனார் மிஷனின்’ கவுரவத் தலைவரும் – தியாகி இம்மானுவேல் சேகரனாரின் முதல் பேரனுமான ரமேஷ் தேவேந்திரர், இன்று காலை, சென்னை அண்ணா அறிவாலயத்தில் திமுக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதியை நேரில் சந்தித்தார்.

அப்போது அவர், நடைபெறவிருக்கும் சட்டப்பேரவைத் பொதுத் தேர்தலில் திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு ஆதரவு அளிப்பதாக தெரிவித்தார்.

மேலும், திமுக மற்றும் அதன் கூட்டணி கட்சிகளின் வேட்பாளர்கள் வெற்றி பெற ‘இம்மானுவேல் சேகரனார் மிஷன்’ நிர்வாகிகள் பாடுபடுவார்கள் என உறுதி அளித்தார்,” இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# விஜய் பிரசாரத்திற்கு அனுமதி வழங்குவது தொடர்பாக போலீசார் தீவிர ஆலோசனை



சென்னை பெரம்பூரில் நாளை தேர்தல் பிரசாரத்தை விஜய் தொடங்க திட்டமிட்டுள்ளார். சென்னை பெரம்பூர் எம்.கேபி நகரில் தொடங்கி கொளத்தூர், வில்லிவாக்கம், அண்ணா நகர், விருகம்பாக்கம் ஆகிய 5 தொகுதிகளில் விஜய் பிரசாரம் செய்ய முடிவுசெய்துள்ளார். வேனில் இருந்த படி விஜய் பிரசாரத்தில் ஈடுபட இருப்பதாக தகவல் வெளியானது. பிரசாரத்தை தொடங்க இருக்கும் விஜய்க்கு எவ்வாறு பாதுகாப்பு வழங்குவது என்பது தொடர்பாக போலீசார் ஆலோசனை மேற்கொண்டுள்ளனர். விஜய் பிரசாரம் செய்ய உள்ள இடங்களில் 3 ஆயிரம் பேர் கூடுவார்கள் என்று கூறி தவெக சார்பில் கடிதம் கொடுக்கப்பட்டு இருப்பதாகவும், ஆனால் விஜய்யை பார்க்க கட்டுக்கடங்காமல் கூட்டம் வந்தால் அதை எவ்வாறு சமாளிப்பது என்பது தொடர்பாக ஆலோசனை மேற்கொள்ளப்பட்ட்டு வருவதாகவும் சொல்லப்படுகிறது. இதனால் விஜய் பிரசாரத்திற்கு அனுமதி கிடைக்குமா? என்ற எதிர்பார்ப்பு தவெகவினர் மத்தியில் ஏற்பட்டுள்ளது.

# பழநி முருகன் கோயிலில் பங்குனி உத்திரத் திருவிழா தொடக்கம்: ஏப்.1-ல் தேரோட்டம்

**பழநி மார்ச் 27:**



திண்டுக்கல் மாவட்டம், பழநி முருகன் கோயிலில் பங்குனி உத்திரத் திருவிழா கொடியேற்றத்துடன் இன்று (வியாழக்கிழமை) காலை தொடங்கியது. விழாவின் முக்கிய நிகழ்வான தேரோட்டம் ஏப்.1-ம் தேதி நடைபெற உள்ளது.

அறுபடை வீடுகளில் 3-ம் படை வீடான பழநி திருஆவினன்குடி குழந்தை வேலாயுதசுவாமி கோயிலில் பங்குனி உத்திரத் திருவிழா வியாழக்கிழமை (இன்று) காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் தொடங்கியது. சேவல், மயில், வேல், பாம்பு, சூரியன், சந்திரன் படங்கள் பொறிக்கப்பட்ட கொடிக்கு பூஜை செய்யப்பட்டு கொடியேற்றம் நடைபெற்றது. மூலவர், உற்சவர், விநாயகர், மயில், துவார பாலகர்களுக்கு காப்பு கட்டப்பட்டது. தொடர்ந்து, மூலவர், முத்துக்குமாரசுவாமி, வள்ளி, தெய்வானைக்கு சிறப்பு அபிஷேகம், அலங்காரம் மற்றும் தீபாராதனை நடைபெற்றது.

இதையடுத்து, வள்ளி, தெய்வானை சமேத முத்துக்குமாரசுவாமி பட்டக்காரர் மடத்திற்கு எழுந்தருளல் நிகழ்ச்சி நடைபெற்றது. கொடியேற்ற நிகழ்ச்சியில், கோயில் இணை ஆணையர் மாரிமுத்து, அறங்காவலர்கள் தனசேகர், பாலசுப்பிரமணி, பாலசுப்பிரமணியம், அன்னபூரணி மற்றும் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

பங்குனி உத்திர திருவிழாவை முன்னிட்டு ஈரோடு மாவட்டம் கொடுமுடி காவிரி ஆற்றில் இருந்து தீர்த்தம் எடுத்து வந்து, பக்தர்கள் பழநி மலைக்கோயிலில் தண்டாயுதபாணி சுவாமிக்கு அபிஷேகம் செய்து வழிபடுவது வழக்கம். அதன்படி, திரளான பக்தர்கள் இன்று அதிகாலை முதலே தீர்த்த காவடி எடுத்து வந்து தங்கள் நேர்த்திக்கடனை செலுத்தினர்.

10 நாட்கள் நடைபெறும் திருவிழாவில் காமதேனு, ஆட்டுக்கிடா, வெள்ளி யானை, தங்க குதிரை உள்ளிட்ட வாகனங்களில் சுவாமி வீதியுலா வந்து பக்தர்களுக்கு அருள்பாலிப்பார். விழாவின் ஆறாம் நாளான மார்ச் 31-ம் தேதி இரவு 7 மணிக்கு மேல் திருக்கல்யாணமும், இரவு 9 மணிக்கு மேல் சுவாமி மணக்கோலத்தில் வெள்ளித்தேரில் உலா வருவார். விழாவின் முக்கிய நிகழ்வாக ஏப்.1-ம் தேதி பங்குனி உத்திரத்தன்று, நண்பகல் 12 மணிக்கு தேரேற்றம், மாலை 4.30 மணிக்கு மேல் கிரிவலப்பாதையில் தேரோட்டம் நடைபெறுகிறது. ஏப்.4-ம் கொடியிறக்குதலுடன் விழா நிறைவடைகிறது.

# மயிலை கபாலீஸ்வரர் கோயில் பங்குனிப் பெருவிழாவில் அதிகார நந்தி வாகனத்தில் சுவாமி வீதி உலா

**சென்னை, மார்ச் 27:**



மயிலாப்பூர் கபாலீஸ்வரர் கோயிலில் அதிகார நந்தி வாகனத்தில் சுவாமி வீதி உலா விமரிசையாக நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் சுவாமி தரிசனம் செய்தனர்.

மயிலாப்பூர் கபாலீஸ்வரர் கோயிலில் இந்த ஆண்டுக்கான பங்குனிப் பெருவிழா கடந்த 23-ம் தேதி கொடியேற்றத் துடன் தொடங்கியது. நேற்று முன்தினம் சூரிய வட்டம், சந்திர வட்டம், கிளி, அன்ன வாகனங்களில் சுவாமி வீதி உலா நடைபெற்றது.

இந்நிலையில், அதிகார நந்தி சேவை நேற்று காலை 6 மணிக்கு நடைபெற்றது. அதிகார நந்தி வாகனத்தில் கற்பகாம்பிகை உடனுறை கபாலீஸ்வரர் சர்வ அலங்காரத்தில் நான்கு மாட வீதிகளில் வீதி உலா வந்தார்.

தொடர்ந்து, கந்தருவன், கந்தருவி, மூஷிகம், வெள்விடை வாகனங்களில் பரிவார தேவதைகள் உலா வந்தனர். தொடர்ந்து, திருஞானசம்பந்தர் திருமுலைப் பால் விழா நடைபெற்றது. இந்த நிகழ்வில் ஏராளமான பக்தர்கள் பங்கேற்று சுவாமி தரிசனம் செய்தனர்.

30-ல் அறுபத்து மூவர் விழாபங்குனிப் பெருவிழாவின் முக்கிய நிகழ்வுகளான தேரோட்டம் 29-ம் தேதியும், அறுபத்து மூவர் விழா 30-ம் தேதியும் நடைபெற உள்ளன.

இதில் ஏராளமான பக்தர்கள் பங்கேற்பார்கள் என்பதால், அதற்கேற்ப அடிப்படை வசதிகளை செய்யும் பணிகளில் கோயில் நிர்வாகத்தினர் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

# மார்ச் 29-ல் திருவாரூர் தியாகராஜர் கோயில் ஆழித் தேரோட்டம்

**திருவாரூர், மார்ச் 27:**

திருவாரூர் தியாகராஜர் கோயில் ஆழித் தேரோட்டம் மார்ச் 29-ம் தேதி நடைபெற உள்ளது. விழாவையொட்டி தேர் கட்டுமானப் பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன.

திருவாரூர் தியாகராஜர் கோயில் சைவ சமயத்தின் தலைமையிடமாக திகழ்கிறது. பஞ்சபூதங்களில் பூமிக்குரியதும், பிறந்தாலும், பெயர் சொன்னாலும் முக்தி அளிக்கிற தலமாகவும், சர்வதோஷ பரிகார தலமாகவும் விளங்குகிறது. பல்வேறு சிறப்பு மிக்க இக்கோயிலின் ஆழித்தேர் ஆசியாவிலேயே மிகப்பெரிய தேர் என்ற பெருமைமிக்கது.

இங்கு ஒவ்வொரு ஆண்டும் பங்குனி உத்திர திருவிழாவின் முக்கிய நிகழ்வாக ஆழித்தேரோட்ட விழா நடைபெறும். இதில், பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் திரண்டு வடம் பிடித்து தேர் இழுப்பது வழக்கம். இந்நிலையில், நிகழ் ஆண்டுக்கான ஆழித்தேரோட்டம் மார்ச் 29-ம் தேதி ஆயில்ய நட்சத்திரத்தில் நடைபெற உள்ளது. இதையடுத்து, தேர் கட்டுமானப் பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன. தேர் கட்டுமானம், அலங்கரிப்பதற்காக 2,200 புதிய மூங்கில்கள் கொண்டுவரப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன.

இந்த ஆண்டு தேர் சீலை, தொம்பைகள், 6 கிராதிகள், 2 பெரிய துவார பாலகர் சிலை உள்ளிட்டவை ரூ.21 லட்சத்துக்கு புதிதாக வாங்கப்பட்டு, அவற்றை தேரில் பொருத்தும் பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன. அலங்கரிக்கப்படாத ஆழித்தேர் உயரம் மற்றும் அகலம் 30 அடியாகும். 96 அடி உயரத்தில் மிகப் பிரம்மாண்டமாக இந்தத் தேர் கட்டப்பட்டு, தேரை சீராக இயக்க திருச்சி பெல் நிறுவனம் மூலம் இரும்பு அச்சு மற்றும் 4 இரும்பு சக்கரங்கள் பொருத்தப்பட்டு இயக்கப்படுகிறது.




வறுமை, நோய், அறியாமை மூன்றும் முற்றிலும் நீங்கும்
போர் என்னும் பொல்லா அரக்கனை பூமியில் இல்லாமல் ஆக்கினால்...!
தொடர்புக்கு: 9791667528



## நலம் தரும் மருத்துவம்

# ஒரு நாளைக்கு ஒரு முட்டை ok... அதற்கு மேல் சாப்பிட்டால் என்ன ஆகும்?

‘முட்டை சாப்பிடுவது நல்லதா? கெட்டதா? தினமும் சாப்பிடலாமா? கூடாதா? அது உடல் நலனை பாதிக்குமா? கொலஸ்ட்ராலை அதிகரித்து இதய நோயை வரவழைக்குமா?’ என்று பலருக்கும் குழப்பமாக இருக்கும். இந்தப் பதிவில் ஒருவர் தினமும் எத்தனை முட்டை சாப்பிடலாம்.

முட்டையில் உள்ள நன்மைகள் என்ன என்பதைப் பற்றி பார்க்கலாம்.

முட்டையின்(EGGS) வெள்ளை கரு: ஒரு முட்டையின் எடையில் சுமார் 60 சதவீதம் வெள்ளை கருவும், 30 சதவீதம் மஞ்சள் கருவும் உள்ளன. வெள்ளை கருவில் 90 சதவீதம் தண்ணீர்தான் இருக்கிறது. 10 சதவீதம் மட்டுமே புரதம் இருக்கிறது. கொழுப்பும் சுத்தமாக இல்லை. கார்போஹைட்ரேட் சத்தும் மிகக்குறைவு. கார்போஹைட்ரேட் 1.12 கிராம், கொழுப்பு 10.6 கிராம், கொலஸ்ட்ரால் 373 மி.கி. உள்ளன.

மஞ்சள் கரு: மஞ்சள் கருவில் 100 சதவீதம் கொழுப்பு உள்ளது. இதில் எலும்புகளுக்கும், பற்களுக்கும் வலு தரக்கூடிய வைட்டமின் டி உள்ளது.

இந்த மஞ்சள் கருவிலிருக்கும் அதிகபட்ச கொழுப்பால், ஹார்ட் அட்டாக் வரும் என்கிறார்கள்.

ஆனால், அதற்குப் பிறகு நடத்தப்பட்ட ஆராய்ச்சிகளில், ஆபத்து எதுவும் கிடையாது என்று தெரிவித்துள்ளனர்.

அதுமட்டுமல்ல, வாரம் 6 முட்டைகளை சாப்பிடுபவர்களின் இரத்த அளவு ஒரே நிலையில்தான் இருக்கும் என்பதும் கண்டறியப்பட்டுள்ளது.

வேக வைத்த முட்டையை சாப்பிட்டு வருவதால் மூளை வேகமாக செயல்படும். படிக்கும் மாணவர்களுக்கு ஞாபக சக்தி அதிகரிக்க வாய்ப்புள்ளது. முட்டையில் இருக்கக்கூடிய OMEGA 3, FATTY ACID உடல் மற்றும் இதயத்திற்கு மிகவும் பாதுகாப்பு அளிக்கக்கூடிய ஒன்றாகும். புற்றுநோயை தடுக்கக்கூடிய செல்கள் உடலில் அதிகமாக உருவாகிறது. பெண்களுக்கு ஏற்படும் மார்பக புற்றுநோயை தடுக்கிறது.

எத்தனை முட்டை எடுத்து கொள்ளலாம்? பொதுவாக, முட்டையின் வெள்ளைக்கரு மட்டும் சாப்பிடுவதாக இருந்தால் 3 அல்லது 4 முட்டை வரை சாப்பிடலாம். கணினி முன்பு அமர்ந்து வேலை செய்பவர்கள் ஒரு நாளைக்கு ஒரு முட்டை எடுத்துக் கொண்டாலே போதும்.

உடல் உழைப்பு அதிகமுள்ள வேலைகளில் இருப்பவர்கள் ஒரு நாளைக்கு ஒரு முட்டைக்கு மேல் சாப்பிடலாம். உடல் பருமன் அதிகமாக கொண்டவர்கள் மற்றும் முதியவர்கள் முட்டையின் வெள்ளைக்கருவினை மட்டுமே சாப்பிடுவது நல்லது..

# சூரியன் மறைந்தாலும் மின்சாரம் தயாரிக்கும் ‘டன்ஹுவாங்’!

பொதுவாக சூரிய மின்சக்தி நிலையங்கள் பகல் நேரத்தில் மட்டுமே மின்சாரத்தை உற்பத்தி செய்யும்.

ஆனால், சீனாவின் வடமேற்கில் உள்ள டன்ஹுவாங் பாலைவனத்தில் அமைந்துள்ள 100 மெகாவாட் திறன் கொண்ட சூரிய மின் நிலையம், சூரியன் மறைந்த பிறகும் மின்சாரத்தைத் தயாரித்து உலகையே வியக்க வைத்துள்ளது. இந்த மின் நிலையத்தில் வழக்கமான சோலார் பேனல்கள் கிடையாது. அதற்குப் பதிலாக, 12,000 பிரம்மாண்டக் கண்ணாடிகள் பயன்படுத்தப்படுகின்றன. இவை ‘ஹீலியோஸ்டாட்ஸ்’ (HELIOSTATS) என்றழைக்கப்படுகின்றன.



இந்தக் கண்ணாடிகள் சூரியன் நகரும் திசைக்கு ஏற்பத் தங்களைத் தாமே மாற்றிக்கொண்டு, சூரிய ஒளியைத் துல்லியமாகப் பிரதிபலித்து ஒரு உயரமான கோபுரத்தின் உச்சிக்கு அனுப்புகின்றன. கோபுரத்தின் உச்சியில் குவியும் இந்தச் சூரியக் கதிர்கள் அங்கிருக்கும் திரவத்தை மிகக் கடுமையான வெப்பத்திற்கு உள்ளாக்குகின்றன. இந்த வெப்பமே மின்சாரத்தை உருவாக்கும் ஜெனரேட்டர்களை இயக்கப் பயன்படுகிறது.

இரவிலும் மின்சாரம் தயாரிப்பது எப்படி?

இந்த மின் நிலையத்தின் மிகப்பெரிய ரகசியமே அதன் வெப்பத்தைச் சேமித்து வைக்கும் தொழில்நுட்பம்தான். கோபுரத்தின் உச்சியில் குவியும் வெப்பம், ஒரு சிறப்பு வகை உப்பை உருக்குகிறது.

இந்த ‘உருகிய உப்பு’ ஒரு பேட்டரியைப் போல வெப்பத்தைத் தன்னுள் சேமித்து வைத்துக் கொள்கிறது.

சூரியன் மறைந்த பிறகும், இந்த உப்பில் உள்ள வெப்பத்தை பயன்படுத்தித் தண்ணீரை நீராவியாக (STEAM) மாற்றி, டர்பைன்களை (TURBINES) இயக்குகிறார்கள். இதன் மூலம் 24 மணி நேரமும் தடையின்றி மின்சாரம் கிடைக்கிறது.

சூரிய மின்சக்தியில் உள்ள மிகப்பெரிய குறையே அது சூரியனை மட்டுமே நம்பியிருப்பதுதான்.



மேகமூட்டமான நேரத்திலோ அல்லது இரவிலோ மின்சாரம் தயாரிப்பது சவாலாக இருந்தது. ஆனால், இந்தத் தொழில்நுட்பம் அந்தப் பிரச்சனைக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளது.

இதன் முக்கியப் பயன்கள், 24/7 தடையில்லா புதுப்பிக்கத்தக்க எரிசக்தி கிடைக்கிறது. நிலக்கரிபோன்ற படிம எரிபொருட்களின் பயன்பாட்டைக் குறைக்கிறது. மின்சாரத் தேவையை ஒழுங்குபடுத்தவும், மின் விநியோகக் கட்டமைப்பை (GRID) சீராக வைத்திருக்கவும் இது உதவுகிறது. பரந்த நிலப்பரப்பும், அதிகப்படியான சூரிய வெளிச்சமும் கொண்ட டன்ஹுவாங் பாலைவனம், இத்தகைய பிரம்மாண்ட திட்டங்களுக்கு சொர்க்கமாகத் திகழ்கிறது. புதுப்பிக்கத்தக்க ஆற்றலைச் சேமித்து வைத்துப் பயன்படுத்துவதில் இது மிகப்பெரிய அறிவியல் மைல்கல்லாகும்.

# அவள் பறந்து போனாளே!




வீடே நிசப்தமாக இருந்தது. பின் ட்ராப் சைலன்ஸ் என்று கூறலாம். அபர்ணா ?வின் காரியங்கள் முடிந்து, அதற்காக வந்திருந்த உறவினர்கள் எல்லாரும் புறப்பட்டுச் சென்று விட்டனர்.

அபர்ணா முரளியின் மனைவி. திரும ணம் முடிந்து மூன்று வருடங்களே வாழ் ந்தாள். அதற்கு அத்தாட்சியாக இறப்ப தற்கு சில நாள் முன்பு கருவுற்றிருந் தாள். நாள் கழித்து உண்டான அபர் ணாவை தன் உள்ளங் கையில் தாங்கி னான் முரளி. ஆனால் விதி அபர்ணாவை இரண்டு நாள் அடித்த காய்ச்சலில் பலி கொண் டது. தாயும் சேயும் சேர்ந்து மரித்தனர்.

அழுது அழுது ஓய்ந்து போயிருந்தான் முரளி. அருகில் நிழலாட தலை தூக்கிப் பார்த் தான் . அம்மா செண்பகம் தன் கையில் பெட்டியுடன் நின்று கொண்டிருந்தாள்.

“ நீ எங்கம்மா கிளம்பிட்டே ?” கேள்வி கேட்ட மகனைப் பார்த்து வேதனை யோடு சிரித்தாள் செண்பகம்.

“ இதென்னப்பா கேள்வி ? நான் எங்கி ருந்து வந்தேனோ அங்கேதான் போக றேன்.”
“ உன்னை ஹோமுக்குப் போகச் சொன்னவளே போய்ச் சேர்ந்துட்டா. அப்புறம் நீ எதுக்குப் போகணும் ?”
“ பைத்தியக்காரா ! நான் கடைசி வரை ஹோமுலதான் இருக்கணும்னு தீர்த்துச் சொல்லிட்டா உன் பெண்டாட்டி . நீயும் தானே கூட இருந்தே ... மறந்துட்டியா? அதை மீறி நான் எப்படி இங்க இருக்க முடியும் சொல்லு ?”
“ அவளோட கடைசி காலம் வரைன்னு எடுத்துக்கோயேன். ஸோ அவளோட காலம் முடிஞ்சுது. உனக்கும் விடியல் கெடைச்சாச்சு. பேசாம பெட்டியைக்கொ ண்டு போய் உள்ளே வச்சுட்டு ஆக வேண்டியதப் பாரும்மா !”

“ முரளி, உனக்கேற்றார் போல பேசாதே. கடைசி காலம் வரை நான் ஹோமுல இருக்கணும்ங்குறதுதான் உன் பெண் டாட்டி யோட ஆசை. அதை நான் மீற முடியாது. கிளம்பறேன்.”

முரளி திரு திருவென்று விழித்தான். கண்களில் நீர் சுரக்க ஆரம்பித்தது.

செண்பகம் மெல்ல திரும்பி நடந் தாள். முரளிக்கு மீண்டும் அழுகை பொத்துக் கொண்டு வந்தது.
“ அத்தை, போகாதீர்கள். நான் செஞ்சது மகாப் பெரிய தப்புதான் ! என்னை மன்னித்துவிடுங்கள். பழசையெல்லாம் மறந்து உங்கள் பிள்ளையோடு இருங் கள். கையெடுத்து கும்பிடறேன்..” அருவமாக இருந்த அபர்ணாவின் கெஞ்சல் வெளி யேக் கேட்கவில்லை.
திரும்பிப் பார்க்காமல் சென்று கொண்டிருந்த செண்பகத்தின் தோளைத் தொட முயன்ற அவளின் கை காற் றோடு கலந்தது !
“ அத்தை.. ப்ளீஸ்.. போகாதீர்கள். .....அத்தை... அத்தை ” அபர்ணாவின் ஆவி கதறியது. ம்ஹூம் ! காற்றின் சப்தம்தான் ஒலித்தது !

தொடர்ந்து நடந்து சென்ற செண்பகம் கை தட்டி ஒரு ஆட்டோவை நிறுத்தி னாள். கடைசியாக ஒரு தடவை தன் வீட்டை ஆசை தீரப் பார்த்துவிட்டு அந்த ஆட் டோவில் ஏறினாள். ஆட்டோ பறந்தது.



- வி.கே.லக்ஷ்மிநாராயணன்
ராமகிருஷ்ணா நகர்
போரூர், சென்னை- 600 116

# "பாடங்களே தடங்கள்"



ரகு... சொந்த ஊரில் இருந்த போது அவனைப் பார்த்தாலே மக்கள் விலகிச் செல்வார்கள். "அவனோட பேசாதீங்கடா... திமிரு தலைக்கேறி நடக்குறான்..." என்று பேசிக் கொண்டே போவார்கள். அவன் நடையும், பேச்சும், பார்வையும்,எதிலும் ஒரு ஆணவம். தந்தை உயிரோடு இருந்ததால் அவனுக்கு உலகமே தன் காலடியில் இருப்பது போலத் தோன்றியது.

ஒரு நாள் அந்த நிழல் மறைந்தது. தந்தை திடீரென இறந்தார். அந்த வீட்டில் இருந்த சத்தம், சிரிப்பு எல்லாம் ஒரே நேரத்தில் காணாமல்போனது. அம்மாவின் கண்களில் பதட்டம். சமையலறையில் பாத்திரங்களின் ஒலி கூட சோர்வாக கேட்டது. ரகுவுக்கு வாழ்க்கை என்றால் என்ன? என்று புரிந்தது. "நான் வேலைக்குப் போகிறேன் அம்மா..." என்றான். வெளியூர் புறப்பட்டான். புதிய நகரம். புதிய மனிதர்கள்.

அவன் நினைத்தது "நான் ரகு... எங்க போனாலும் நான்தான் மேல..." ஆனால்... அங்கிருந்த உலகம் வேற மாதிரி. ஒரு முறை தாமதமாக வேலைக்கு சென்றவனை மேலதிகாரி சத்தமிட்டு திட்டினார். "இது உன் வீடா? நெனச்ச நேரத்துல வர்றதுக்கு?... ஒழுங்கா வேலையைப் பாரு" அவன் வாயடைத்துப் போனான். மதிய உணவு சாப்பிடும் போது, சிலர் அவனைப் பார்த்து நக்கலடித்துச் சிரித்தார்கள். தொடர்ந்து சம்பளம் தராமல் வேலை அதிகப்படுத்தினார்கள். அவன் கொதித்தான். ஆனால் எதையும் வெளியே சொல்ல முடியவில்லை. கொஞ்சம் கொஞ்சமாக உடைந்தான்.

ஆனால் அந்த உடைதலில் ஒரு புதிய ரகு உருவாகிக் கொண்டிருந்தான். மரியாதையாகப் பேசக் கற்றுக் கொண்டான். சில வருடங்களுக்குப் பிறகு, மீண்டும் ஊருக்கு வந்தான். அவனைப் பார்த்ததும் தாயின் கண்களில் நீர். ஆனால் அந்தக் கண்ணீரில் ஒரு சந்தோஷம். "எப்படி ரகு... இப்படி ஒரேயடியா மாறிட்டே...?" கேட்டாள். அவன் புன்னகைத்தான். அந்தப் புன்னகையில் இருந்தது அவமானங்களின் சுவடுகள். புறக்கணிப்புகளின் வலிகள் அவன் மெல்லச் சொன்னான், "அம்மா... எந்த யுனிவர்சிட்டியும் கற்றுக் கொடுக்காத பாடங்களை...நாம் படும் அவமானங்களும், புறக்கணிப்புக்களும் தான் நமக்குக் கற்றுக் கொடுக்கும்..."

அம்மா அவனைக் கூர்ந்து பார்த்தாள். அங்கே, திமிரான ரகு இல்லை... வாழ்க்கையைப் புரிந்த... தெளிந்த மனிதனொருவன் நின்றிருந்தான்.



-முகில் தினகரன்
கோயமுத்தூர்.

# மாயக்கண்ணன் லீலை

(பாகம் -5)





- எம்.எல்.பிரபா
ஆதம்பாக்கம்.
சென்னை 88

## கொடிய அரக்கி பூதனா!!

பூதனா, கிருஷ்ணனை கொல்வதற்காக கம்சனால் அனுப்பப்பட்ட அரக்கி. 'குழந்தை கிருஷ்ணனை எப்படியாவது கொன்றுவிடு' என்று கட்டளை பிறப்பித்து அனுப்பினான் கம்சன். கம்சனின் ஆணையை ஏற்று கோகுலத்திற்கு வந்தாள் அந்த அரக்கி. அவள் தனது கொடூரமான உருவத்தை மறைத்து, அழகிய ஆடை, ஆபரணங்கள் அணிந்து பார்ப்பதற்கு ஒரு அழகிய பெண்ணாக தன்னை மாற்றிக் கொண்டாள். யாருக்கும் சந்தேகம் வராத அளவிற்கு இடையர் குலத்து பெண்களை போன்று தானும் அப்படியே மாறினாள். யாராலும் அவளை கண்டுபிடிக்க முடியவில்லை. சற்றும் யாரும் எதிர்பாராத தருணத்தில் குழந்தை கிருஷ்ணனை தூக்குவதற்காக வீட்டிற்கு உள்ளே சென்றாள். கிருஷ்ணன் அங்கே கட்டிலில் படுத்துக் கொண்டிருந்தான். கட்டிலின் அருகில் சென்று குழந்தையை தூக்கிக் கொண்டாள். அவள் ஒரு தாயைப் போல கிருஷ்ணனுக்கு விஷம் கலந்த பாலூட்டி அவனை கொன்று விடலாம் என எண்ணினாள். அதனால் ஏற்கனவே தன்னுடைய மார்பகங்களில் விஷத்தை தடவி இருந்தாள். கிருஷ்ணனை தூக்கி தன் மடியில் வைத்து பாலூட்டினாள். இவளின் எண்ணம் அறிந்த கிருஷ்ணன் தன்னுடைய இரு கைகளால் அவளை இறுக பிடித்துக் கொண்டான். அவளிடம் பாலை குடிக்க உறிஞ்சும் போது அவளின் உயிரையும் சேர்த்து உறிஞ்சி அவளை கொன்று விட்டான். கண்ணனின் பிடியில் சிக்கிய பூதனா தாங்க முடியாத வேதனையில் அலறினார் .அவரது உண்மையான, பயங்கரமான அரக்கியின் உருவம் வெளிப்பட்டது. அவளது அலறல் ஊரையே நடுங்க வைத்தது .அவள் பெரிய மலை போல தரையில் விழுந்து உயிர் விட்டாள். அவள் விழுந்ததில் பல மரங்கள் முறிந்து விழுந்தது. யசோதையும், நந்த கோபனும் அதை பார்த்து மிகவும் பயந்து போனார்கள். சத்தம் கேட்டு ஊர் மக்கள் எல்லோரும் ஓடி வந்து பார்த்தார்கள். அரக்கி பூதனாவின் உடலை பார்த்ததும் அனைவரும் நடுநடுங்கினர். பின்னர் அவள் இறந்து விட்டாள் என்று உறுதி செய்த பின், பூதனாவின் உடலை கோகுல வாசிகள் வெட்டி காட்டுக்குள் எடுத்துச் சென்று எரித்தனர். ஆனால் அங்கிருந்து வந்த புகை எறிந்த உடலின் துர்நாற்றத்தை கொண்டிருக்கவில்லை. மாறாத தெய்வீகமான சந்தனம், அகில் போன்ற நறுமணத்தை கொடுத்தது .தீய எண்ணத்துடன் வந்த அரக்கிக்கு கூட கண்ணன் மோட்சம் அளித்தார் என்றால்!! தூய பக்தியுடனும், அன்போடும் அவரை வழிபடுபவருக்கு என்னென்ன நன்மைகளை அவர் அளிப்பார். தீய எண்ணங்களை கூட நல்ல விதமாக மாற்றும் கண்ணனின் கருணையை இது காட்டுகிறது. அந்த கொடிய அரக்கி கண்ணனை தொட்டதால் அவளுக்கு மோட்சம் கிட்டியது. பூதனா கொடியவளாக இருந்தாலும் தாய்ப்பால் கொடுத்ததால், அவளுக்கு தாய்க்கு உரிய அந்தஸ்தை கிருஷ்ணன் வழங்கியதாக புராணங்கள் கூறுகின்றன. கிருஷ்ணனின் லீலைகளில் இதுவும் ஒன்று. ( தொடரும்)
எம் .எல் .பிரபா
ஆதம்பாக்கம்.



தொடரும்..

# எமன் வழிபட்ட நவகிரகங்கள் இல்லாத சிவ ஆலயங்கள்

* நவக்கிரகங்கள் இல்லாத பிரசித்தி பெற்ற புராதன சிவன் கோயில்கள் உள்ளன. எங்கெல்லாம் எமன் சிவனை வழிபட்டுள்ளாரோ அங்கெல்லாம் நவகிரகங்கள் இருக்காது.

* திருவான்மியூர் மருந்தீஸ்வரர் கோயிலில் நவகிரகம் இல்லை ஏனென்றால் அங்கு எமன் வந்து வழிபட்ட தலம்.

* திருநள்ளாறு தர்பாரண்யேஸ்வரர் கோயிலிலும் நவகிரக சந்நதி இல்லை. அங்கும் எமன் வந்து வழிபட்டதாக கூறப்படுகிறது.

* ஸ்ரீவாஞ்சியம் அங்கு எமனுக்கு முக்கியத்துவம். இங்கு எமன் சிவனை வழிபட்டதாக ஐதீகம்.

* நான்காவது ஸ்தலம் திருவாவடுதுறை. இங்கு எமன் சிவனை வழிபட்டதாக வரலாறுகள் உள்ளன.











* திருப்பைஞ்சீலி, வாழை மரத்தை தலவிருட்சமாகக் கொண்ட சிவஸ்தலம். திருச்சிக்கு அருகில் உள்ள இந்த தலத்திலும் நவகிரகங்கள் கிடையாது.

* திருக்கடையூரில் மானிடர்களின் உயிரை பறித்த எமனுக்கு சிவன் இங்கு மறுபடியும் உயிரை எடுக்கும் அதிகாரம் வழங்கிதாக ஐதீகம்

* காளஹஸ்தி ஆறாவது ஸ்தலம் . பஞ்சபூத தலங்களில் இது வாயு ஸ்தலம். அங்கு ஒன்பது படிகள் கொண்ட தங்கஏணியில் (golden ladder) ஒவ்வொன்றிலும் மூன்று மலர்கள் பொறிக்கப்பட்டிருக்கும். இந்த 3*9 என்பது 27 நட்சத்திரத்தை குறிக்கும். 27 நட்சத்திரங்களும் இந்த ஏணியில் ஆவாகனம் செய்யப்பட்டிருக்கிறது. இந்த ஏணி சிவலிங்கத்தின்மீது சாய்த்து வைக்கப்பட்டிருக்கும். அதை தீபாராதனை காட்டும் போது மட்டும் தான் பார்க்க முடியும்.

* திருமழபாடி. திருவையாருக்கு அருகில் உள்ளது. அங்கும் நவகிரக சந்நிதி இல்லை.

* திருக்கடையூர் . இதன் தலபுராணம் வித்தியாசமானது. எமன் மார்க்கண்டேயனை நோக்கி பாசக்கயிறு வீசும் போது சிவன் காட்சி அளித்து என்னுடைய பக்தனை எப்படி நீ ஆட்கொள்ளலாம் என்று காலால் எட்டி உதைத்ததாகவும் அதனால் இறத்தல் தொழில் நிறுத்தி வைக்கப்பட்டதாகவும் இந்த ஸ்தல புராணம் கூறுகிறது.

* ஒன்பதாவது ஸ்தலம் திருமழபாடி திருவையாறு அருகில் இருக்கிறது.

* பின் பத்தாவது ஸ்தலம் திருவெங்காடு. இங்கிருக்கும் நடராஜர் சிதம்பரத்தை விட பழமையானவர்.

* அடுத்து திருப்புரம்பியம் பதினோராவது ஸ்தலம். இங்கும் நவக்கிரகம் கிடையாது.

**தினம் ஒரு தலைவர்கள்**

# சாவித்ரி தேவி முகர்ஜி வரலாறு

சாவித்ரி தேவி முகர்ஜி 1905 ஆம் ஆண்டு லியோனில் மாக்சிமியானி ஜூலியா போர்டாஸ் என்ற பெயரில் பிறந்த சாவித்ரி தேவி, கிரேக்க மற்றும் இத்தாலிய வம்சாவளியைச் சேர்ந்த பிரெஞ்சு குடிமகனான மாக்சிம் போர்டாஸ் மற்றும் ஜூலியா போர்டாஸ் (நீ நாஷ்) என்ற ஆங்கிலப் பெண்ணின் மகள் ஆவார் . குழந்தை பருவத்திலிருந்தே மற்றும் அவரது வாழ்நாள் முழுவதும், அவர் விலங்கு உரிமைகளுக்காக தீவிர ஆதரவாளராக இருந்தார் . அவரது ஆரம்பகால அரசியல் தொடர்புகள் கிரேக்க தேசியவாதத்துடன் இருந்தன . தனது இளமை பருவத்தில் அவர் ஜெர்மன் தத்துவம் மற்றும் ஜெர்மனியில் ஆர்வம் கொண்டிருந்தார்; முதலாம் உலகப் போரின் முடிவில் ஜெர்மனியின் சிகிச்சையாலும் , கிரேக்க அகதிகளை ஒரே நேரத்தில் நடத்தியதாலும் அவர் கலக்கமடைந்தார். ஜெர்மனியின் தோல்விக்கு யூதர்களைக் குற்றம் சாட்டினார்.

கிரீஸ் மற்றும் பிரான்சில் கல்வி கற்ற போர்டாஸ், தத்துவம் மற்றும் வேதியியலைப் பயின்றார், லா சிம்ப்ளிசிட் கணிதமேடிக் என்ற தனது ஆய்வறிக்கையின் அடிப்படையில் லியோன் பல்கலைக்கழகத்தில் தத்துவம் மற்றும் அறிவியலில் இரண்டு முதுகலைப் பட்டங்களையும் , வேதியியலில் முனைவர் பட்டத்தையும் பெற்றார் . அடுத்து அவர் கிரேக்கத்திற்குச் சென்று, புகழ்பெற்ற இடிபாடுகளை ஆய்வு செய்தார். இங்கே , ஹென்ரிச் ஷ்லிமேன் அனடோலியாவில் ஸ்வஸ்திகாக்களைக் கண்டுபிடித்ததைப் பற்றி அவர் அறிந்தார் . பண்டைய கிரேக்கர்கள் ஆரிய வம்சாவளியைச் சேர்ந்தவர்கள் என்பது அவரது முடிவு . அவரது முதல் இரண்டு புத்தகங்கள் அவரது முனைவர் பட்ட ஆய்வுக் கட்டுரைகள் : எஸ்ஸை-கிரிட்டிக் சுர் தியோஃபில் கைரிஸ் மற்றும் லா சிம்ப்ளிசிட் கணிதமேடிக் . பைபிள் மீதான வெறுப்பாலும், பின்னர் பாலஸ்தீனத்தில் சியோனிச நடவடிக்கைகளாலும் செல்வாக்கு பெற்ற அவர், இளம் வயதிலேயே யூத எதிர்ப்பாளராக மாறினார். 1928 ஆம் ஆண்டின் முற்பகுதியில், போர்டாஸ் தனது பிரெஞ்சு குடியுரிமையைத் துறந்து கிரேக்க குடியுரிமையைப் பெற்றார் . 1929 ஆம் ஆண்டில் (அரேபியர்களுக்கும் யூதர்களுக்கும் இடையிலான மோதல் ஒரு வருடம்) அவர் லெண்ட் காலத்தில் பாலஸ்தீனத்தின் பிரிட்டிஷ் ஆணைக்கு ஒரு யாத்திரையில் சேர்ந்தார், இது அவரது நம்பிக்கைகளை வலுப்படுத்தியது. போர்டாஸ் தனது யூத எதிர்ப்பில் பல்வேறு பிரெஞ்சு அறிவுஜீவிகளாலும் செல்வாக்கு பெற்றார், அவர்களுடன் யூத எதிர்ப்பு மிகுதியாக இருந்தது; அவர் குறிப்பாக எர்னஸ்ட் ரெனனால் பாதிக்கப்பட்டார்.



இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு , அவர் 1945 ஆம் ஆண்டு சாவித்ரி தேவி முகர்ஜி என்ற பெயரில் இந்தியாவைச் சேர்ந்த ஒரு பிரிட்டிஷ் குடிமகனின் மனைவியாக, பிரிட்டிஷ் இந்திய பாஸ்போர்ட்டுடன் இங்கிலாந்து சென்றார் . அவர் இங்கிலாந்தில் சிறிது காலம் தங்கினார், பின்னர் பிரான்சில் உள்ள தனது தாயாரைச் சந்தித்தார், அவருடன் பிரெஞ்சு எதிர்ப்புக்கு பிந்தையவரின் ஆதரவு குறித்து அவர் சண்டையிட்டார். பின்னர் அவர் ஐஸ்லாந்துக்குச் சென்றார் , அங்கு 1947 ஏப்ரல் 5-6 தேதிகளில் ஹெக்லா மலை வெடிப்பதைக் கண்டார். ஐஸ்லாந்தில் இருந்தபோது, அவர் நார்ஸ் தேவாலயத்தையும் ஏற்றுக்கொண்டார். அவர் சிறிது காலம் இங்கிலாந்துக்குத் திரும்பினார், பின்னர் அவர் ஸ்வீடனுக்குப் பயணம் செய்தார் , அங்கு அவர் ஸ்வென் ஹெடினைச் சந்தித்தார் .

ஜூன் 15, 1948 அன்று, அவர் நோர்ட்-எக்ஸ்பிரஸில் ஏறி டென்மார்க்கிலிருந்து ஜெர்மனிக்குச் சென்றார், அங்கு அவர் "ஜெர்மனியின் ஆண்களும் பெண்களும்" "நமது புகழ்பெற்ற தேசிய சோசலிச நம்பிக்கையைப் பற்றிப்பிடித்து எதிர்க்க" ஊக்குவித்த கையால் எழுதப்பட்ட துண்டுப்பிரசுரங்களின் ஆயிரக்கணக்கான பிரதிகளை விநியோகித்தார்! அவர் கோல்ட் இன் தி ஃபர்னஸில் தனது அனுபவத்தை விவரித்தார்.

1970களின் பிற்பகுதியில், அவருக்கு கண்புரை நோய் ஏற்பட்டது , இதன் விளைவாக அவரது பார்வை வேகமாக மோசமடைந்தது. இந்தியாவில் உள்ள பிரெஞ்சு தூதரகத்தின் எழுத்தரான மிரியம் ஹிர்ன், அவரை அடிக்கடி வீட்டிற்குச் சென்று கவனித்துக் கொண்டார். அவர் இந்தியாவை விட்டு வெளியேற முடிவு செய்து, 1981 இல் ஜெர்மனிக்குத் திரும்பி பவேரியாவில் வசித்து, 1982 இல் பிரான்சுக்குத் திரும்பினார். சாவித்ரி 1982 ஆம் ஆண்டு இங்கிலாந்தின் எசெக்ஸில் உள்ள சிபிள் ஹெடிங்ஹாமில் ஒரு நண்பரின் வீட்டில் இறந்தார். அவரது மரணத்திற்கான காரணம் மாரடைப்பு மற்றும் கரோனரி த்ரோம்போசிஸ் என பதிவு செய்யப்பட்டது . அவர் இறக்கும் போது மாட் கோஹலின் அழைப்பின் பேரில் அமெரிக்காவில் விரிவுரை செய்யச் சென்று கொண்டிருந்தார். அவரது உடல் எசெக்ஸின் கோல்செஸ்டரில் ஒரு எளிய விழாவில் தகனம் செய்யப்பட்டது , இதில் டோனி வில்லியம்ஸ் மற்றும் இரண்டு இளம் பிரிட்டிஷ் நாஜிக்கள் கலந்து கொண்டனர். தேவியின் அஸ்தி ஒரு பொறிக்கப்பட்ட கலசத்தில் வர்ஜீனியாவின் ஆர்லிங்டனில் உள்ள அமெரிக்க நாஜி கட்சியின் தலைமையகத்திற்கு அனுப்பப்பட்டது, பின்னர் அவை எடுத்துச் செல்லப்பட்டு விஸ்கான்சினின் மில்வாக்கியில் உள்ள "நாஜி மரியாதை மண்டபத்தில்" ஜார்ஜ் லிங்கன் ராக்வெல்லின் அஸ்திக்கு அடுத்ததாக மாட் கோஹலால் வைக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது . அவர் இறக்கும் போது அவர் மிகவும் ஏழையாக இருந்ததாகக் கூறப்படுகிறது.

வாழ்க்கையில், தேவிக்கு சில சாதனைகள் மட்டுமே இருந்தன (குறைந்தபட்சம் நாசிசத்தை மீண்டும் தொடங்குவதற்கான அவரது இலக்குகளுடன் ஒப்பிடும்போது), ஆனால் அவரது எழுத்து நவ-நாஜி இயக்கத்தை, குறிப்பாக எஸோதெரிக் நவ-நாசிசத்தை பெரிதும் பாதித்து வருகிறது . கல்வியாளர் ஜெஃப்ரி கப்லான், தேவி "போருக்குப் பிந்தைய தேசிய சோசலிசத்தின் இடிபாடுகளில் இருந்து வெளிவந்த மிகவும் கட்டாய நபர்களில் ஒருவர்" என்று விவரித்தார், மேலும் நவ-நாஜி மறைபொருள் மீதான அவரது செல்வாக்கை "எந்தவொரு நபரை விடவும் அதிகமாக" குறிப்பிட்டார். அவரது படைப்புகள் ஆல்ட்-ரைட் , அத்துடன் புதிய யுக மதம் மற்றும் ஆழமான சூழலியல் ஆகியவற்றையும் பாதித்துள்ளன . அவரது எழுத்துக்களுக்கு மேலதிகமாக, பல தீவிர வலதுசாரிகளுடனான அவரது கடிதப் போக்குவரத்து நவ-நாஜி இயக்கத்திற்கு குறிப்பிடத்தக்க செல்வாக்கு செலுத்தியது. அவர் சிலி நாட்டுத் தூதர் மிகுவல் செரானோவையும் பாதித்தார் , மேலும் அவரது ஹோலோகாஸ்ட் மறுப்பு எர்ன்ஸ்ட் ஜூண்டலைப் பாதித்தது . 1982 ஆம் ஆண்டில், பிராங்கோ ஃப்ரெடா தனது படைப்பான கோல்ட் இன் தி ஃபர்னஸின் ஜெர்மன் மொழிபெயர்ப்பை வெளியிட்டார் , மேலும் அவரது வருடாந்திர மதிப்பாய்வின் நான்காவது தொகுதியான ரிஸ்கார்டோ (1980), சாவித்ரி தேவிக்கு "ஆரிய புறமதத்தின் மிஷனரி " என்று அர்ப்பணிக்கப்பட்டது .

# ரூ.100 கோடி வசூலித்த ஆடு - 3!



ஆடு - 3 திரைப்படம் சில நாள்களிலேயே ரூ. 100 கோடி வசூலித்து ஆச்சரியப்படுத்தியுள்ளது.

மலையாள சினிமாவில் பிரபலமான திரைப்படம் ஆடு. இயக்குநர் மிது மானுவல் தாமஸ் இயக்கத்தில் நடிகர் ஜெயசூர்யா நடிப்பில் கடந்த 2015 வெளியான இப்படம் மிகப்பெரிய வெற்றியைப் பெற்றது.

கயிறு இழுக்கும் போட்டியில் வெற்றி பெற்ற சாஜி பப்பன் (ஜெயசூர்யா) அணிக்கு ஆடு ஒன்று வழங்கப்படுகிறது. இந்த ஆட்டை கொல்ல முடிவு செய்யும்போது நடக்கும் சம்பவங்களே படத்தின் கதை. சுவாரஸ்யமான நகைச்சுவை படமாக உருவான இப்படத்தின் இரண்டாம் பாகமும் வெளியாகி கவனம் பெற்றது. இந்த நிலையில், ஆடு - 3 திரைப்படம் கடந்த மார்ச் 19 ஆம் தேதி திரையரங்குகளில் வெளியானது.டிரைலர் கவனம் ஈர்த்திருந்தாலும் யாரும் எதிர்பாராத அளவிற்கு முதல் நாளிலிருந்தே மிகப்பெரிய அளவில் டிக்கெட் விற்பனை நடைபெற்றது. இதனால், முதல் 4 நாள்களில் இப்படம் ரூ. 60 கோடிக்கும் அதிகமாக வசூலித்து அசத்தியது.

தற்போது, உலகளவில் இப்படம் ரூ. 100 கோடியை வசூலித்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மோகன்லால், மம்மூட்டி திரைப்படங்கள் மட்டுமே செய்து வந்த விரைவான அதிக வசூலை ஜெயசூர்யா முதல்முறையாக செய்துள்ளது ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.



இந்திய சினிமாவில் முன்னணி நடிகையாக வலம் வருபவர் மிருணாள் தாகூர். தெலுங்கு மற்றும் இந்தி ஆகிய இரு மொழிகளில் கவனம் செலுத்தி வரும் இவர், விரைவில் தமிழில் களமிறங்குவார் என ரசிகர்களால் எதிர்பார்க்கப்படுகிறது.

ரசிகர்களின் மனம் கவர்ந்த பிரபலங்கள் தங்களது சமூக வலைத்தளத்தில் வெளியிடும் புகைப்படங்கள் உடனடியாக வைரலாகும். அந்த வகையில், இன்றைய இளைஞர்களின் கனவு கன்னியாக வலம் வரும் நடிகை மிருணாள் தாகூர் தனது இன்ஸ்டா பக்கத்தில் தன்னுடைய லேட்டஸ்ட் போட்டோஷூட் புகைப்படங்களை பதிவிட்டுள்ளார். இந்த புகைப்படங்கள் தற்போது வைரலாகி வருகின்றன.

# NEEK பட போஸ்டரை வெளியிட்ட விஜய் சேதுபதி

தமிழ் சினிமாவின் முன்னணி நடிகரான விஜய் சேதுபதி, நடிகர்கள் பவிஷ் நாராயண் மற்றும் நாக துர்கா ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ள, பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட காதல் பொழுதுபோக்குத் திரைப்படமான 'லவ் ஓ லவ்' படத்தின் ஃபர்ஸ்ட் லுக் போஸ்டரை வெளியிட்டுள்ளார். சைனிமா மீடியா அண்ட் என்டர்டெயின்மென்ட்டின் தினேஷ் ராஜ் மற்றும் கிரியேட்டிவ் என்டர்டெயின்மென்ட் & டிஸ்ட்ரிபியூட்டர்ஸின் ஜி. தனஞ்சேயன் ஆகியோர் இணைந்து தயாரித்துள்ள 'லவ் ஓ லவ்' திரைப்படத்தை மகேஷ் ராஜேந்திரன் எழுதி இயக்கியுள்ளார். ஃபாக்ஸ்ன் இப்படத்திற்கு இசையமைக்கிறார். மேலும், பி.ஜி. முத்தையா ஒளிப்பதிவாளராகவும், என்.பி. ஸ்ரீகாந்த் படத்தொகுப்பாளராகவும், பி.ஏ. மகேந்திரன் கலை இயக்குநராகவும், அபிஷேக் ஸ்ரீனிவாஸ் சண்டை இயக்குநராகவும் பணியாற்றுகின்றனர்.




# இணையத்தில் கிண்டலுக்கு உள்ளான அஜித்




தமிழ் சினிமாவின் முன்னணி நடிகராக மட்டுமின்றி, ஒரு தீவிர கார்பந்தய வீரராகவும் திகழ்ந்து வருபவர் நடிகர் அஜித்குமார். இவர் குட் பேட் அக்லி படத்திற்கு பிறகு கார் ரேஸில் கவனம் செலுத்தி வருகிறார். தனது சொந்த கார் ரேஸிங் அணியான, அஜித்குமார் ரேஸிங்' மூலம் பல்வேறு பந்தயப் போட்டிகளில் கலந்துவருகிறார் அஜித்குமார். அஜித்தின் இந்த கார் ரேஸ் வாழ்க்கைத் தொடர்பான ஆவணப்படமும் உருவாகி வருகிறது.

இதனிடையே ரிலையன்ஸ் நிறுவனத்தின் எனர்ஜி டிரிங்க் பிராண்டான 'கேம்பா எனர்ஜி' (Campa Energy), அஜித் குமாரின் 'அஜித் குமார் ரேஸிங்' அணியின் அதிகாரப்பூர்வ எனர்ஜி பார்ட்னராக செயல்படும் என அறிவிப்பு வெளியானது.

இதையடுத்து கேம்பா எனர்ஜி ட்ரிங்க் விளம்பரத்தில் அஜித் நடித்துள்ளது போன்ற புகைப்படங்கள் இணையத்தில் வைரலாகின. இதன்மூலம் நீண்ட இடைவேளைக்குப் பிறகு அஜித் குமார் மீண்டும் விளம்பர உலகில் கால் பதித்தார்.

இந்நிலையில், அஜித் நடித்துள்ள கேம்பா எனர்ஜி ட்ரிங்க் விளம்பரம் வெளியாகியுள்ளது. ரேஸிங் பின்னணியை கொண்டு உருவாகியுள்ள அந்த விளம்பரம் இணையத்தில் விமர்சனத்திற்கு உள்ளாகியுள்ளது. அஜித் ரசிகர்களே இந்த விளம்பரத்தை கிண்டலடித்து இணையத்தில் பதிவிட்டு வருகின்றனர்.

கோலிவுட் முதல் பாலிவுட் வரை பிரபலமான நட்சத்திரமாக இருப்பவர் ஸ்ருதி ஹாசன். இவர் தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் ஆக்டிவாக இருக்கக்கூடிய நபர் ஆவார். தனது லேட்டஸ்ட் புகைப்படங்களை இன்ஸ்டாவில் பதிவு செய்து வரும் ஸ்ருதி ஹாசன், தற்போது தன்னுடைய லேட்டஸ்ட் கிளாமர் போட்டோஷூட்டை பதிவிட்டுள்ளார். ஸ்ருதி ஹாசன் வெளியிட்டுள்ள போட்டோஷூட் புகைப்படங்கள் தற்போது சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது.



# மீண்டும் தள்ளிப்போகும் 'காளிதாஸ் 2'



2019-ஆண்டில் பரத் நடிப்பில் வெளியாகி விமர்சன ரீதியாகவும், வசூல் ரீதியாகவும் வெற்றியைப் பெற்ற 'காளிதாஸ்' படத்தை தொடர்ந்து அதன் இயக்குனரான ஸ்ரீ செந்தில் இயக்கத்தில் உருவாகியுள்ளது 'காளிதாஸ் 2' திரைப்படம்.

இப்படத்தில் பரத், அஜய் கார்த்திக், பிரகாஷ் ராஜ், 'ஆடுகளம்' கிஷோர், சுரேஷ் மேனன், ஆனந்த் நாக், பவானி ஸ்ரீ , அபர்னதி, ராஜா ரவீந்தர், டி.எம். கார்த்திக் உள்ளிட்ட பலர் நடித்திருக்கிறார்கள்.

இவர்களுடன் 'பூவே உனக்காக' படத்தின் மூலம் ரசிகர்களிடம் பிரபலமான நடிகை சங்கீதா இப்படத்தில் அழுத்தமான வேடத்தில் நடித்திருப்பதன் மூலம் தமிழ் சினிமாவிற்கு ரீ என்ட்ரி ஆகியிருக்கிறார்.

# உடைகளை விமர்சிக்காதீர்கள்



பாலிவுட் சினிமாவின் முன்னணி நடிகையாக வலம் வரும் திஷா பதானி, சூர்யா ஜோடியாக 'கங்குவா' படத்தில் நடித்தார். தற்போது 'அவராபன்-2', 'வெல்கம் டூ ஜங்கிள்' ஆகிய படங்களில் நடித்துக் கொண்டிருக்கிறார்.


எந்த விழாக்களுக்கு சென்றாலும் கவர்ச்சியில் கிறங்கடிக்கும் உடைகளை அணிந்து கலக்குவது திஷா பதானியின் வழக்கம். அந்தவகையில் சமீபத்தில் அவர் அணிந்த உடைபெரும் சர்ச்சையானது. 'தாரா ளம்' காட்டிய அந்த உடையை சரிசெய்ய அவரும் படாதபாடு பட்டுப்போனார்.

இதற்கிடையில் இப்படிப்பட்ட உடையை ஏன் அணிந்து வரவேண்டும். பின்னர் ஏன் அவதிப்பட வேண்டும் என்று ரசிகர்கள் சமூக வலைதளங்களில் கமெண்ட் அடித்தனர். பலரும் திஷா பதானியின் கவர்ச்சி உடையை விமர்சித்தனர்.

ரசிகர்களின் விமர்சனங்களுக்கு திஷா பதானி காட்டம் தெரிவித்துள்ளார். 'நடிகைகளை ரசியுங்கள். கொண்டாடுங்கள். ஆனால் உடைகள் பற்றி விமர்சனம் செய்யாதீர்கள். இங்கு கவர்ச்சிக்கும், ஆபாசத்துக்கும் வித்தியாசம் தெரியாமல் யாரும் வரவில்லை' என்று ஆதங்கம் தெரிவித்துள்ளார்.

# என் ரசிகர்களுக்கு மனைவிகளால் ஆபத்து

நடிகை அஞ்சு குரியன் இன்ஸ்டாவில் வெளியிட்டு வரும் கவர்ச்சி போட்டோக்களுக்கு ஒரு பெரிய ரசிகர் கூட்டமே இருக்கிறது. மலையாளம், தமிழ் என இரண்டு மொழிகளிலும் அஞ்சு குரியன் பிஸியாக நடித்து வருகிறார்.
அவ்வப்போது கவர்ச்சி போட்டோக்களை வெளியிட்டு அஞ்சு குரியன் வைரல் ஆகிறார்.
தற்போது அஞ்சு தாராள கவர்ச்சி உடையில் வேற லெவல் ஹாட் போஸ் கொடுத்து ஸ்டில்களை வெளியிட்டுள்ளார். சில மணி நேரங்களில் அதற்கு 80 ஆயிர லைக்குகள் குவிந்திருக்கிறது.





'எமன்', 'காளி', 'இஸ்பேட் ராஜாவும், இதயராணியும்', 'வெப்', 'சிங்கப் பெண்ணே, 'சென்னை பைல்ஸ் - முதல் பக்கம்','வா வாத்தியார்' போன்ற படங்களில் நடித்தவர், ஷில்பா மஞ்சுநாத்.

தமிழ் மற்றும் தெலுங்கில் பிசியாக படங்கள் நடித்து வரும் ஷில்பா மஞ்சுநாத் சமீபத்தில் பேசியுள்ள விஷயம் வைரலாகி இருக்கிறது.

அதில், எனது ஆண் ரசிகர்களுக்கு அவர்களின் காதலிகளால் பிரச்சனை வருவதாக கேள்விப்பட்டேன். படத்தில் திமிர் கலந்த என் அழகை பார்த்து, 'இவர் என் முன்னாள் காதலி போல இருக்கிறார்' என ரசிகர்கள் அவர்களின் மனைவிகளிடமும், காதலிகளிடமும், பெண் தோழிகளிடமும் சொல்லி புகழ்கிறார்கள்.

ஆனால் அதுவே அவர்களுக்கு ஆபத்தாகி விடுகிறது. சமீபத்தில் கூட என்னை சந் தித்த ஒரு ரசிகர், அவரது மனைவி என்னை அதிகம் வெறுப்பதாக கூறி அதிர்ச்சி அளித்தார். ஒவ்வொரு முறையும் அவர் என்னை இன்ஸ்டாகிராமில் 'பாலோ' செய்ய, அடுத்த நிமிடமே அதை அவரது மனைவி அன்போலோ' செய்துவிடுகிறாராம். இதெல்லாம் ஆச்சரியம் தந்தாலும், ரசிகர்களின் மனங்களில் இப்படி தாக்கத்தை ஏற்படுத்தி யதை நினைத்தால் மகிழ்ச்சியாகவும் இருக்கிறது என்றார்.

# டும்... டும்... டும்... எப்போது?- சாய் பல்லவி



தென்னிந்திய சினிமாவின் முன்னணி கதாநாயகியாக ஜொலித்து வரும் சாய் பல்லவி நடிப்பில் கடைசியாக வெளியான 'அமரன்' மற்றும் 'தண்டேல்' படங்கள் தொடர் வெற்றி பெற்று வசூல் குவித்தது.

தற்போது இந்தியில் 'ராமாயணம்' படத்தில் சீதா கதாபாத்திரத்தில் நடித்து வருகிறார். மேலும் தனுசின் புதிய படத்திலும் ஒப்பந்தமாகி இருக்கிறார்.

இதற்கிடையில் நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்ட சாய் பல்லவியிடம் 'உங்களுக்கு திருமணம் எப்போது? என்று கேட்கப்பட்டது.

இதற்கு, 'இப்போதைக்கு திருமணம் இல்லை. கண்டிப்பாக இல்லை. நான் சிங்கிளாகத்தான் இருக்கிறேன்" என்று சிரித்தபடி கூறிச்சென்றார் சாய் பல்லவி.

# பணக்காரனாக வாழ கத்துக்கணும்!



பாத்வே புரொடக்ஷன்ஸ் நிறுவனம் சார்பில் அருண் ரங்கராஜுலு தயாரிப்பில் ராம் சக்ரி இயக்கத்தில் உருவாகி இருக்கும் திரைப்படம் 'கார் மேனி செல்வம்.' சமுத்திரக்கனி-கவுதம் வாசுதேவ் மேனன் நடிப்பில் தயாராகி இருக்கும் இந்தப் படம் வருகிற ஏப்ரல் 03-ஆம் தேதி முதல் உலகம் முழுவதும் திரையரங்குகளில் வெளியாகிறது. இதையொட்டி இந்தப் படத்தின் டிரெய்லரை படக்குழு வெளியிட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சியில் படத்தில் நடித்துள்ள நடிகர் சமுத்திரக்கனி பேசும் போது இயக்குநரை வெகுவாக பாராட்டினார்.

அப்போது அவர், "இந்தத் திரைப்படத்தில் பணியாற்றியது இறைவனின் அருள் என்றுதான் சொல்ல வேண்டும். என்னுடைய நண்பர் ஸ்ரீராம் மூலமாக இப்படத்தின் திரைக்கதை எனக்கு வந்தது. கதையைப் படிக்கும் போதே அந்த இயக்குநரின் மனநிலை என்ன என்று தெரிந்துவிடும். அந்த மனசு தான் இயக்குநர் ராம் சக்ரியை என்னிடம் அழைத்து வந்தது. அவரை சந்தித்து இதைத்தானே சொல்ல வருகிறீர்கள் வாருங்கள் சேர்ந்து சொல்வோம் என்று இப்படத்தின் பணியை தொடங்கினோம்.

அவர் இப்போது என் வாழ்க்கையில் மிக முக்கியமான நண்பராக இருக்கிறார்.

# விக்னேஷ் சிவனுக்கு தொடரும் சோகம்...



பிரதீப் ரங்கநாதன், கீர்த்தி ஷெட்டி நடிப்பில் 'எல்.ஐ.கே.' என்ற படத்தை விக்னேஷ் சிவன் இயக்கியுள்ளார். இந்தப் படம் கடந்த ஆண்டு தீபாவளிக்கே ரிலீசாவதாக இருந்தது.

ஆனால் 'டியூட்' படத்தின் ரிலீசால் தள்ளிப்போவதாக அறிவிக்கப்பட்டது. பின்னர் இன்னும் சில காரணங்களால் இந்தப் படம் ரிலீசுக்கு வராமல் தள்ளிப் போய்க்கொண்டே இருக்கிறது.

இதற்கிடையில் ஏப்ரல் 3-ந்தேதி இந்தப் படம் ரிலீசாக திட்டமிடப்பட்டிருந்தது.

இதனால் ரசிகர்கள் ஆறுதல்பட்டிருந்த நேரத்தில், இப்போது அந்த தேதியில் ரிலீசாகவில்லை என்று தெரியவந்துள்ளது. தற்போது ஏப்ரல் 2-வது வாரத்தில் படத்தை ரிலீஸ் செய்ய முயற்சிகள் நடக்கிறது. பார்க்கலாம் என்ன நடக்கிறது என்று...

# 'கர' படத்தில் ஜெயராமின் கதாபாத்திரம்






நடிகர் தனுஷ் நடிப்பில் கடைசியாக வெளியான படம் 'தேரே இஷ்க் மே'. இந்தியில் எடுக்கப்பட்ட இப்படம் தமிழில் வரவேற்பைப் பெறவில்லை என்றாலும், இந்தியில் ரூ.160 கோடிக்கும் அதிகமாக வசூலித்து வெற்றிப் படமானது. தற்போது, தனுஷ் போர் தொழில் இயக்குநர் விக்னேஷ் ராஜா இயக்கத்தில் நடித்து முடித்துள்ளார்.

இந்தப் படத்தில் நாயகியாக மமிதா பைஜுவும், முக்கிய கதாபாத்திரங்களில் நடிகர்கள் சுராஜ் வெஞ்சரமூடு, ஜெயராம் ஆகியோர் நடித்துள்ளனர். 'கர' எனப் பெயரிடப்பட்டுள்ள இந்தப் படத்திற்கு ஜி.வி. பிரகாஷ் குமார் இசையமைக்க தேனி ஈஸ்வர் ஒளிப்பதிவு செய்துள்ளார். இந்தப் படத்தை வேல்ஸ் ஃபிலிம் இன்டர்நேஷனல் சார்பில் ஐசரி கணேஷ் தயாரித்துள்ளார். இந்தப் படம் அடுத்த மாதம் (ஏப்ரல்) 30-ஆம் தேதி வெளியாகவுள்ளது.



நடிகை வாணி போஜன் சின்னத்திரை நடிகையாக இருந்து அதன் பின் வெள்ளித்திரைக்கு வந்தவர். அவரது நடிப்புக்கு அதிகம் ரசிகர்களும் இருக்கிறார்கள்.
சமீபகாலமாக அவரும் ட்ரெண்டியான லுக்கில் ரசிகர்களை கவர தொடங்கி இருக்கிறார்.
தற்போது வாணி போஜன் ஜொலிக்கும் சேலையில் சற்று கிளாமர் ஆக போஸ் கொடுத்து இருக்கும் போட்டோஷூட் ஸ்டில்களை வெளியிட்டுள்ளார். அது ரசிகர்களை கவர்ந்து வருகிறது.

# கோவாவில் புது சொத்து... மீண்டும் சர்ச்சையில் சிக்கிய ரவி மோகன்



தமிழ் சினிமாவில் முன்னணி நடிகராக வலம் வருபவர் ரவி மோகன். கடந்த 2009-ஆம் ஆண்டு ஆர்த்தி என்பவரை திருமணம் செய்துக்கொண்டார். இந்த தம்பதிக்கு இரண்டு ஆண் குழந்தைகள் உள்ளனர். சுமார் 15 ஆண்டுகளாக ஒன்றாக வாழ்ந்த இந்த ஜோடி கடந்த 2024-ஆம் ஆண்டு விவாகரத்து கோரி நீதிமன்றத்தை நாடியது. தற்போது விவாகரத்து வழக்கு நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது.

இதனிடையே, ரவி மோகன் அவரது தோழியும் பாடகியுமான கெனிஷாவுடன் பொது நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார். இதனால் எழுந்த சர்ச்சைகள், அவற்றை சுட்டிக் காட்டி ஆர்த்தி எழுப்பிய கேள்விகள் பெரும் பேசுபொருளாக மாறியது. இதற்கிடையே, நடிப்பில் கதாநாயகன், வில்லன் கதாபாத்திரங்களில் நடிப்பது மட்டுமில்லாமல் தயாரிப்பு நிறுவனம், இயக்குநர் என சினிமா துறையில் அடுத்தக்கட்டத்தில் அடியெடுத்து வைத்து பணியாற்றி வருகிறார் ரவி மோகன்.

இந்த நிலையில், தற்போது நடிகர் ரவி மோகன், சொத்து வாங்கிய தகவல் சமூக வலைத்தளங்களில் வைரலாகி விவாதத்தை ஏற்படுத்தி உள்ளது. அதாவது ரவி மோகன் தனது தோழி கெனிஷாவுடன் இணைந்து கோவாவில் சுமார் ரூ.40 லட்சம் மதிப்பிலான சொத்தை வாங்கியுள்ளார்.

இதில் என்ன சர்ச்சை என்று தானே கேட்குறீர்கள்? இருக்கு... அதாவது ரவிமோகன் வாங்கிய சொத்து ஆவணத்தில் தன்னை திருமணமாகாதவர் என்று குறிப்பிட்டுள்ளதாக தகவல் வெளியாகி பெரும் கவனத்தை பெற்றுள்ளது. நடிகர் ரவி மோகன், ஆர்த்தி ரவியை சட்டப்பூர்வமாகத் திருமணம் செய்துகொண்டவர் என்பது அனைவரும் அறிந்ததே என்பதால், இந்த தகவல் சமூக வலைத்தளத்தில் ஒரு விவாதத்தை ஏற்படுத்தி உள்ளது.

நடிகர் ரவி மோகன் அவ்வாறு திருமணமாகாதவர் என்று குறிப்பிட்டு இருந்தால் அது தவறு என்று சிலர் கூறிவருகின்றனர். மேலும் சிலர் இதனை ஒரு எழுத்தர் அல்லது நிர்வாக தவறாக கூட இருக்கலாம் என்று ரவி மோகனுக்கு ஆதரவாகவும் கருத்து தெரிவித்து வருகின்றனர். எது எப்படியோ இதற்கு ரவி மோகன் பதில் சொன்னால் மட்டுமே வெளிச்சம் என்று ரசிகர்கள் ஆதங்கம் கொள்கின்றனர்.






## சமூக சீர்திருத்தங்கள்

மக்களின் அறியாமை இருள் நீங்கட்டும்!
பகுத்தறிவுப் பாதையில் சமுதாயம் உயரட்டும் !

சாதி, மத பேதங்கள் எரிக்கப்படட்டும்
சமத்துவக் காற்றால் மானுடம் மலரட்டும் !

பழைய வாதத் தலைகளை உடைத்தெறிவோம்;
புதியதோர் நீதிக்கான விடியலை விதைப்போம் !

மனிதம் போற்றும் சமத்துவம்; காப்போம்;
சாதி வேற்றுமைச் சுவரை உடைப்போம்!

அறிவுக்கதிரால் அறியாமை நீக்கி, ஒற்றுமைப் பாதையில்
ஒன்றாய் நடப்போம்!

உள்ளத்துத் தூய்மையே சீர்திருத்தம்;
தீய எண்ணங்களை அகற்றி அன்பினை விதைப்போம்!

பகுத்தறிவு அகல் விளக்கு ஏற்ற, பேதங்கள் நீக்கி மனிதம்
ஒளிரும்; அறியாமைப் பணி விலகட்டும் அன்பு பயிர் வளரட்டும்!

சமத்துவ உலகம் நாம் படைப்போம்; புதுமை பூக்கட்டும்!

இருள் சூழ்ந்த பழக்கங்களைச் சிதைத்து,
அறிவின் சுடரை ஏந்தி நடப்போம்!

பிடிவாதமான தீமைகளை வேர் அறுத்து, புதிய தர்மத்தை
விதைப்போம்! சமூக அழுக்கைச் சகித்து நீ இருக்காதே;
துணிந்து மாற்றத்தை முழங்கு !

கூனி குறுகும் பழமை மடியட்டும் ;
வீரம் செறிந்த புதுமை விடியட்டும்;
நீதி மறுக்கும் இருளை எரித்து, மானுட நேயத்தை மலர வை !

ஏற்றத்தாழ்வு எனும் நச்சு மரம் சாய,
சமத்துவ வேர் மண்ணில் ஆழமாகட்டும் !



பெண்மையின் சிறகுகள் உயர்ந்து பறக்க,
கல்வி என்னும் தீபத்தை கையில் ஏந்துவோம்!

ஆறுகள் பாடும் ராகம் ,மரங்கள் பேசும் மௌனம்,
இயற்கையின் மடியில் மனிதன்
துளித்துளியாய் கரையட்டும் அகந்தைகள்!

**பெ.திருமுகம் ஆசிரியர்** , மணமேல்குடி

## பாசமா பங்கா?

அண்ணன் தங்கையிடம்
பகன்றான் பெண்களுக்கு
அப்பன் சொத்தில்
பங்கு பாத்தியதை
கிடையாதாம் தமக்கை
சந்தேகம் எழுப்பினாள்
எதனால் அவ்விதம்
கூறுகிறீர்?
உங்களிருவருக்கும் தந்தை
மணம் முடித்து வைத்ததால்..
அப்படியானால் உன் மனைவி
அகால மரணமடைந்த போது
உனக்கு தன் கைக்காசில்
இரண்டாம் திருமணம்
செய்வித்தாரே
அதைக்
கணக்கில்
ஏற்கமாட்டாயா?
வாய் மூடி
மௌனியானான்.



**பி. பழனி,**
சென்னை.




## கலைத்து விளையாடும் காற்று!

காற்றே!
விலைமதிப்பில்லா
ஐம்பெரும் பூதங்களில்
ஒன்று நீ! நீ தீராத
விளையாட்டுப் பிள்ளை!
நீயில்லாத இடமே இல்லை!
பலூனிலும் இருப்பாய்
மாந்த உயிரிலும் இருப்பாய்!
தெற்கினின்றும் வீசினால்
தென்றலாவாய்
வடக்கினின்றும் வீசினால்
வாடையாவாய்
கிழக்கினின்றும் வீசினால்
கொண்டலாவாய்
மேற்கினின்றும் வீசினால்
கச்சானாவாய்!

உம்மால்... காற்றாடியைப்
பறக்க விடுவோம்
காற்றாலையைப்
பயன்படுத்துவோம்!
நீ... அமைதியாயிருந்தால்
தென்றலென்போம்
பேயாட்டம் போட்டால்
சூறாவளி என்போம்!

**முனைவர்**
**இராம.வேதநாயகம்.**



## "உன்னைப்போல் நானும் "

வான்வெளியில்
நடைபயிலும் வட்ட நிலவும்,

வழி நெடுக மணம் பரப்பும்
வாசனைப் பூவும்,

தேன்மொழியின் முகம்
பார்த்து தயங்கி நிற்கும்.....

உடன் வந்த ஒரிரண்டு
விரைந்து நகர... தலை
சாய்த்து சிறகு விரித்த
பூங்குருவியொன்று,

தாழப் பறந்து
அவள் சாளரத்தை
கடக்கையிலே....

படர்கின்ற பெருமூச்சின்
அனல் வீச்சில்..ஈரநெஞ்ஜின்
சிறு துடிப்பு எகிறிப் போக..

தனிமையெனும் தாகத்தில்
தவித்துக் கிடக்கும்...

என்னை போல் நீயும்
ஒருத்தியோ என்று....
கருணை கொண்டு...

மரக்கிளையில் மெதுவாக
மலர் போல் அமர்ந்து.....

மூக்கினை உரசி.. கீச்சு
மொழி பேசி அவள் மோனம்
கலைக்க....

சிட்டுக்குருவியின் சின்ன
சிங்காரத்தில் எட்டிப்
போனதோ ஏகாந்த
வெப்பம்..



அவள்
பட்டு முகம்
கொஞ்சம்
காணட்டும்
குளிர்
புன்னகை!

**மீனா சேகர்**

## பறக்கும் படை !

பெண்ணே... தேர்தல்
முடியும் வரை நீ வெளியே
வந்து விடாதே...
தேர்தல் பறக்கும் படை
கண்ணில் நீ தென்பட்டால்
உன் மொத்த எடையையும்
தங்க
கணக்கில்
சேர்த்து
விடுவார்கள்....
அதே
கோடிகளை
கடந்து
விடுமே!



**எம்.பி.தினேஷ்.** கோவை

## சகுனம்

காலைப் பொழுதில் குயில்
கூவுவது காற்றின் இசை
கேட்பது வாசல் முன் மலர்
விழும் நேரம். வாழ்க்கை
வழியில் நன்மை வரும்
எனும் நம்பிக்கை.
பறவையின் பறக்கும்
பாதையைப் பார்ப்பது
புதிய தொடக்கத்தின்
அறிகுறி போல் மனதில்
தோன்றும் நல்ல எண்ணம்.
நாளை வெற்றி தரும் நாள்
நம்பிக்கையுடன் தொடங்கும்
என்பதுவும் ஒவ்வொரு
நாளும், வெள்ளைப் புடவை
அணிந்து காலையில்
வருபவர்கள் நம் கண்ணில்
படுவது நாம் வெளியே
செல்லும் போது பூனை
குறுக்கே வருவது
பல்லி கத்துவது
வெளியே புறப்படும் போது
காலில் அணிந்திருக்கும்
செருப்பு கல்பட்டு இடறுவது
இவையெல்லாமே
நல்ல நாட்களே.
இதிலெல்லாம் கெட்ட
சகுனம், நல்ல சகுனம்
என்று எதுவுமில்லை.
நம் வாழ்வின் அனைத்து
நாட்களும் நல்ல நாட்களே.
நாம்
மேற்கொள்ளும்
செயல்களில்
தான் நல்லது
கெட்டது
இருக்கின்றன
என்பதை
நினைவில் நிறுத்தி வாழ்வை
மேம்படுத்துவோம்.



**உ.மு.ந.ராசன் கலாமணி**
கோயம்புத்தூர்.

## கம்பி தொலைக்காட்சி தேவையோ

கேளிக்கை தரும் வட வழிக்காட்சி பார்க்காவிட்டால் நின்று
போகுமோ மூச்சு இரவுபகலும் இதைப் பற்றியே பேச்சு
விரைவிலே வரும் வியாபாரிக்கு வீழ்ச்சி

குடியிருக்கும் மக்கள் வாங்குவதோ மாதச்சம்பளம் விரிக்க
வேண்டுமோ வியாபாரிக்கும் பட்டுக்கம்பளம் பணம்
பற்றாததாலோ வாங்குகிறார்கள் கிம்பளம் சதித்திட்டம் ஒரு
நாளாகுமே அம்பலம்

காலை முதல் இரவுவரை வீட்டில் கேளிக்கை மக்களுக்குப்
பழகிப் போனதே பார்க்கும் வாடிக்கை குடும்பத்தில் ஏற்பட்டதே
அவநம்பிக்கை இயந்திரம் போல வாழ்வதோ வாழ்க்கை

மனமோ காட்சித் தொடரை தினமுமே நாடும் கண்கள்
விரைவில் கண்ணாடியைத் தேடும் உடல் ஓய்வில்லாமலே
நோயுற்று இடுகாடு ஓடும் பிள்ளைகள் படிப்போ பாதியிலேயே
கெடும்



காட்சி பார்ப்பதுவே அம்சமான பொழுதுபோக்கு
முழுநேரமுமே பார்ப்பதை நீ நீக்கு அறிவியல்
வளர்ச்சி என்று சொல்லுவதோ
நொண்டிச் சாக்கு

ஓய்வுறும் சமயம் மட்டும் பார்க்க நேரம் ஒதுக்கு

**எஸ். சந்திரசேகரன் அமுதா**
செஞ்சிக்கோட்டை.



## "உண்மை வீரன்'

எல்லை கோட்டின்
குளிரில் நின்று
எரியும் சூரியனைச்
சிரித்துப் பார்க்கிறான்...
அவன்...ராணுவ வீரன்
உண்மை வீரன்!

தன் வீட்டு வாசல் மறந்து
நாட்டு வாசலைக்
காக்கும் காவலன்!
அம்மாவின் அன்பை
மனதில் புதைத்து
துப்பாக்கியை தோளில்
தூக்கும் மனிதன்!
அவனே உண்மை வீரன்!

அவனது ஒவ்வொரு
நிமிடங்களுக்குள்ளும்
எச்சரிக்கை உணர்வு!
ஒவ்வொரு மூச்சினுள்ளும்
பொறுப்பின் வாசம்!
ஒவ்வொரு அடியும்
தியாகப் பாதை!
அவனே உண்மை வீரன்!

குண்டுகள் மழையாய்ப்
பொழிந்தாலும் விழிகளில்
பயமில்லை? காரணம்?
அவன் பின்னால்
ஒரு நாடு நிம்மதியாகத்
தூங்குகிறது!
அவனே உண்மை வீரன்!

சாவையும் நண்பனாய்
எண்ணி சந்தோஷமாய்ப்
போர்க்களத்தில்
நடக்கிறான்... வெற்றி வந்தால்
நாட்டின் மகிழ்ச்சி வீழ்ந்தால்
வரலாற்றின் பெருமை!
அவனே உண்மை வீரன்!

அவன் பெயர்
பலருக்குத் தெரியாது...
அவன் இரத்தம்
இந்த மண்ணின் நிறம்!




"வீரன்" என்று
சொல்வது எளிது
ஆனால்
வீரனாய் வாழ்வது...
வாழ்நாள் தியாகம்!

**முகில் தினகரன்**
கோயமுத்தூர்

# நூல் அறிமுகம்

நூலின் பெயர் : நாலு நிறத்தில் ஒரு வானவில்
ஆசிரியர் : கவிஞர் அனுராதா சௌரிராஜன்
நூலறிமுகம்: முனைவர் கா.ந.கல்யாணசுந்தரம்
பதிப்பகம்: நூலேணி பதிப்பகம்
விலை ரூ. 110/–

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே அயல்மொழியிலிருந்து இறக்குமதியான ஹைக்கூ வடிவம் தமிழில் காலூன்றி இன்றளவில் ஆயிரக்கணக்கான கவிஞர்கள் எழுதி வருகிறார்கள். ஜப்பானிய இலக்கண மரபுகளை உடைத்தெறிந்து உலகெங்கும் நவீன ஹைக்கூ வடிவம் உருவாகி, தமிழிலும் அந்த வாமன வடிவம் வளமுடன் வாழ்கிறது என்பதே உண்மை. இருப்பினும் அடிப்படை இலக்கணத்தில் 90 விழுக்காடு ஹைக்கூவில் பின்பற்றப்படுவதால் கவிஞர்கள் இன்னும் தாம் எழுதுவது ஹைக்கூதானா என தயக்கமுடனே எழுதுகிறார்கள். இந்தச் சூழலில் தான் எளிய இலக்கண வரையறைகளோடு தமிழ் மொழிக்கேற்ற வடிவமாக நான்கு அடிகளில் தன்முனைக் கவிதைகள் இன்று கவிதை இலக்கியத்தில் தடம் பதித்து வருகிறது. நூற்று ஐம்பதுக்கும் மேற்பட்ட நூல்கள் கடந்த எட்டு ஆண்டுகளில் தன்முனைக் கவிஞர்களால் வெளியிடப்பட்டு சாதனை நிகழ்த்தப்பட்டுள்ளது. 25 க்கும் மேற்பட்ட முகநூல் குழுமங்கள், 20 மேற்பட்ட மின்னூல்கள் / இணைய இதழ்கள் 15 க்கும் மேலான மாத,காலாண்டு இதழ்கள் தன்முனைக் கவிதைகளை வெளியிட்டுள்ளன.




இந்த வரிசையில் கவிஞர் அனுராதா சௌரிராஜன் அவர்களின் நாலு நிறத்தில் ஒரு வானவில் என்கிற தன்முனைக் கவிதைநூல் வெளியாகியுள்ளது மகிழ்ச்சியாக உள்ளது. தனியார் வங்கியில் அட்மின் மேலாளராகப் பணிபுரிந்து ஓய்வு பெற்ற இவர் இதுவரை புதுக்கவிதைகள்,கட்டுரைகள், ஹைக்கூ கவிதைகள் என எட்டு நூல்கள் வெளியிட்டுள்ளார். ஒன்பதாவது நூலாக இந்தத் தன்முனைக் கவிதைகள் நூல் வெளியாவது கவிதை இலக்கிய உலகுக்கு புதிய வரவாகும்.

இவரது தன்முனைக் கவிதைகள் வாழ்வியல், காதல், இயற்கை, சமூக அவலம் என பன்முகத்தன்மையோடும் சீரிய கருத்துகளோடும் எழுதப்பட்டுள்ளன. புத்தகத்தை எடுத்துப் படித்தால் கீழே வைக்க மனமிருக்காது. அத்தகைய தொடர் வாசிப்பை இந்த நூல் ஏற்படுத்தும் என்பதில் சிறிதும் ஐயமில்லை என்பேன்.

கவிஞர் இயற்கையோடு கைகோத்து எழுதிய அழகிய தன்முனை– சமூக வளர்ச்சி மற்றும் அதன் சேவைக்கு தம்மைத் தயார்படுத்திக் கொள்ளவேண்டுமெனில் பல இடர்பாடுகளை சந்திக்க நேரிடும் என்கிற கருத்தமைந்த கவிதை... பேரலைகளுக்குப் பதறாமல் நீந்தி வந்த தேங்காய் கரை ஒதுங்கி காலத்தால் மரமாகிக் காட்சி தருகிறது

காணும் காட்சி நமது சிந்தனையில் மனிதநேய உணர்வுகளை ஏற்படுத்துகிறது என்பதற்கு சாட்சியாக இந்தத் தன்முனை உள்ளது. கவிஞர் அனுராதா அவர்களின் இந்த மனிதநேய உணர்வுகளை பாராட்டுகிறேன். வண்ண வாஸ்து மீன்களை கண்ணாடித்தொட்டிக்குள் பார்த்து ரசித்திருக்கிறோம்... இப்படி நாம் எண்ணியதுண்டா? சுற்றிச் சுற்றி வந்து கண்ணாடிச் சுவரில் முட்டியது வண்ண வாஸ்து மீனின் கண்ணீர் தண்ணீரில் கலந்து சமூக அவலம் என்பது காலத்தின்



கட்டாயமாகிப்போன ஒன்று. அதனைக் களைந்தெறிய எவ்வளவோ முயற்சி எடுத்தாலும் சூழல் அப்படி அமைந்தால் தவிர்க்கவியலாமல் போகிறது. இப்படித்தான் வறுமையில் உழலும் தாய்மார்கள் அன்றாடம் வேலைக்குச் செல்லும் அவலநிலை ஏற்படுகிறது. குழந்தைகளை காப்பகத்தில் விட்டுச் செல்லும் நிலைமையை நான்கு அடிகளில் நமக்கு உணர்த்துகிறார் கவிஞர் அனுராதா அவர்கள்.... புட்டிப் பால் தீர்ந்ததும் காப்பகத்தில் குழந்தை அழுதது பணம் ஈட்டப் பணியில் ஈர மார்புடன் தாய் உத்தமர் காந்தி, ஏழைப்பங்காளர் காமராசு, பாட்டுக்கு ஒரு புலவன் பாரதி இவர்களது உன்மத்தமான வாழ்க்கை அவர்களது சமூகத்தொண்டுகளை பாராட்டுவது வெகுவாகக் குறைந்து வருகிறது. அடுத்த தலைமுறை இவர்களைப்பற்றி அறிந்துகொண்டால் மனிதம் கடந்து வந்த பாதை தெரியுமல்லவா ? இவர்களது பெயர்கள் பேருந்து நிறுத்தங்களில் மட்டுமே பயன்படுத்தப்படுகிறார்கள் என வருத்தமுடன் தமது கருத்தைப் பதிவிட்டுள்ள கவிஞரைப் பாராட்டுகிறேன். காந்தி காமராசு பாரதி காலத்தின் கதாநாயகர்கள் பேசத்தான் படுகிறார்கள் பேருந்து நிறுத்தங்களாய் சாதி மதம் பாராமல் பழகி ஒருவரை ஒருவர் விரும்பி தமது காதலை வெளிப்படுத்தி பெற்றோர்கள் முன் நிற்கும் காதலர்களைப் பிரித்து ஆணவக்கொலைகளில் ஈடுபடும் சாதீய வெறியர்கள் இன்றும் இருந்துகொண்டுதான் இருக்கிறார்கள் . இந்தத் தன்முனைக் கவிதையை படிக்கும் போது நெஞ்சம் நெகிழ்கிறது....சாதிகள் பெயரால் பிடித்தது பறிக்கப்பட்டது படையலுக்கு இன்றோ பிடித்ததைப் படைக்கிறது

ஆடைகளைத் துவைத்து கொடிக்கம்பியில் காயப்போடும் நிகழ்வுகள் நடைபெறாத இல்லங்கள் கிடையாது.... அடடா இதிலும் நம் மனத்தைத் தொடுகின்ற காட்சி ஒன்றை இங்கே பதிவிடுகிறார் நூலாசிரியர் கவிஞர் அனுராதா அவர்கள்... நெளிந்த கொடிக்கம்பியில் மழைநீர் முத்துகள் மெலிந்த அம்மா புடவையில் காயாத ஈர நினைவுகள் மெலிந்த அம்மாவின் புடவையில் காயாத ஈர நினைவுகள் ....ஆம் என்றென்றும் நம் நெஞ்சில் பதிவாகியுள்ள நினைவுகள் ஆராதிக்க வேண்டிய நிகழ்வுகள் ஏராளம்...ஏராளம். கவிதைகளில் அறிவியல் பூர்வமான செய்தியைச் சொல்வது ஆகச்சிறந்த படைப்பாளியின் திறன் மற்றும் அவரது கூர்நோக்குச் சிந்தனைகளின் வெளிப்பாடு என்றே சொல்ல .வேண்டும். இத்தகு சிந்தனையின் முத்திரையாக கவிஞர் அனுராதா அவர்கள் எழுதியுள்ள தன்முனை நமக்கு பகுத்தறிவினை ஊட்டுகிறது. நிலவு தேய்கிறது என்பது நமது பார்வைக்கு மட்டும்தான் ... ஆனால் அதனில் பூரண சந்திரன் புதைந்து கிடக்கிறது ....நிலவுக்கு சொந்த ஒளி கிடையாது. சூரியனின் ஒளியை நிலவு பிரதிபலிக்கிறது. நிலவு தன் பாதையில் செல்லும்போது, சூரிய ஒளியை அது பிரதிபலிக்கும் பகுதி பூமியிலிருந்து பார்ப்பவர்களுக்குக் குறையும்போது, அது தேய்வது போலத் தெரிகிறது. இந்த அறிவியல் உண்மையை நேர்த்தியாக தன்முனைக் கவிதைகள் கொண்டுவந்து தந்துள்ள கவிஞர் அனுராதா அவர்களைப் பாராட்டுகிறேன். பிறையாய் இருப்பதால் குறை ஒன்றும் இல்லை பூரண சந்திரன் அதற்குள் புதைந்து கிடக்கிறது .

எழுத்துச் சுடர், எழுத்துச் சிற்பி ,எழுத்துச் செம்மல் என பல்வேறு விருதுகளைப் பெற்றுள்ள நூலாசிரியர் தன்முனைக் கவிதை உலகில் தடம்பதித்துள்ளார் என்பது போற்றுதலுக்கு உரியது. ஆசிரியர் கதவுகளைத்தான் திறந்து வைப்பார்...வாய்ப்பு ஏற்படும் போதே உள்ளே அடியெடுத்து வைத்துக்கொள் ... அறிந்துகொள்ளும் சந்தர்ப்பங்களை நழுவ விடாதே.... இது சீனப்பழமொழி.

*"Teachers Open The Doors, But You Must Enter By Yourself." —Chinese Proverb* இந்தக் கருத்தமைந்த தன்முனையில் காலம்கடந்து வருந்தாதே... வாய்ப்புகள் வரும்போதே பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதை கவிஞர் வலியுறுத்துகிறார்.

முடிவுரை வந்தபின் முன்னுரை வாசிக்கிறான் விரும்பிய வாய்ப்புகள் திரும்பி வருவதில்லை ஞாலம் கருதினும் கைகூடும் காலம் கருதி இடத்தாற் செயின் ......... இந்தத் திருக்குறள் செயல்வதை நாம் அறிவோம் அல்லவா ?

நாலு நிறத்தில் ஒரு வானவில்....அற்புதமான சொல்லோவியங்கள் நிறைந்த கருத்தமைந்த பல தன்முனைக் கவிதைகளை நிரம்பப் பெற்ற நூல். இந்த நூலின் கடைசி கவிதை நம்முள் ஒரு உத்வேகத்தைக் கொடுக்கிறது....விரும்புவை... உள்ளுவது எல்லாம் உயர்வுள்ளல் என்ற நோக்கிலே எழுதப்பட்டது... மனத்தில் உறுதி வேண்டும் என்பதை ஏற்படுத்துகிறது.... சூரிய ஒளிச்சூட்டில் சுருங்கும் மலர் வேண்டாம் சூறாவளியிலும் நிற்கும் சீரிய மரம் தேவை சூறாவளிக் காற்றிலும் நிமிர்ந்து நிற்கும் சீரிய மரமாக நாம் இந்தச் சமுதாயத்தில் கடமைகள் ஆற்றி நிமிர்வோம். ஒவ்வொரு வீட்டிலும் இருக்கவேண்டிய நூல். நூலேணிப் பதிப்பகம் கவிஞர் கன்னிக்கோவில் இராஜா அவர்கள் சிறப்பாக இந்த நூலினை அச்சிட்டுத் தந்துள்ளார். தன்னம்பிக்கை விதைகளைத் தூவி நெஞ்சுரம் படைக்கும் வாழ்வியல் தன்முனைகள் நூலெங்கும் ஒளிவீசுகின்றன. நூலாசிரியர் கவிஞர் அனுராதா சௌரிராஜன் அவர்களுக்கு நெஞ்சார்ந்த வாழ்த்துகளை சொல்லி மேலும் இதுபோன்று பல நூல்களைப் படைத்து கவிதை உலகில் வளம் பெறவேண்டும் எனவும் வாழ்த்துகிறேன்.

**அன்பன்,**
**கா.ந.கல்யாணசுந்தரம்**
**சென்னை**






இரவுக்கும் பகலுக்கும்
இடையே/ வைகறையும்
அந்தியும்./ சிவனுக்கும்/
பக்தனுக்கும் நடுவே/
லிங்கமும் நந்தியும்./

ஒன்பது மாதங்கள் /
ஒரே வயிற்றில் வளர்ந்தார்கள்/
மூன்று மாதமொரு வீடென/
மாதாவை அலைக்
கழிக்கிறார்கள்./

மதியோர்களாய் மக்கள்
இல்லாததால்/ முதியோர்
இல்லங்களில் பெற்றோர
விதியை மதியால்
வெல்லாததால்/ வீதியை
வீடாக்கும் நற்றோர்/

அறியாமல் மகளிர் மனம்/
அனுசரிப்பதேன்
மகளிர்தினம்?/ தெரியாமல்
தேவதையின் குணம்/
தூற்றுவதும் சரியோ
தோழனே?/

நினைவில் வைத்துள்ளேன் /
நீ பிரிந்த நாளை/
தனியே கொண்டாட
முடியாததால்/
உன் பிறந்த நாளை/

கிழித்த நாட்காட்டி தாளில்/
சூரியோதய நேரம்
காண்கிறேன்/ கிழக்கும்
மேற்குமாய் நடைப்பயின்று/
சூரியோதயத்தை நேரில்
காண்கிறேன்./

இளவேனிற்கால இரவு/
இருளும் மருள்கிறது/
புழுக்கத்தைப் புறந்தள்ளி/
பூங்காற்று வீசுகிறது/
காதலும் காதல் சார்ந்த/
இடமும் 'சோலை' யாகட்டும்/
'அறுவகை நிலங்கள்' புதிய/
தமிழர் நிலப் பரப்பாகட்டும்/

வரதட்சணையால் நின்ற/
திருமணங்கள் அநேகம்/
இன்றைய காதல் ஆவதால்/
அடிக்கடி 'இரயில் சிநேகம்'/
என் சவப்பெட்டியின்
ஆணியை/ சற்று பலமாக
அடியுங்கள்/ அநேக முறை
உயிர்த்தெழுதலை/
அரங்கேற்றியவன் நான்/

வேதியல் வினைகளால்
காதலை/ உருவாக்கவோ
அழிக்கவோ இயலாது/
சாதியல் சக்திகளால்
காதலரை/ பிரிக்கவோ
ஒடுக்கவோ முடியாது/

வளைகுடா போரால் அடிக்கடி/
நிலைகுலைந்து போகிறேன்/
பிறையே! ரமலான் பிறையே!/
பிரியன் இல்லாதது
குறையே./

தினம் ஒரு முகமூடி/
அணிவது சலித்து விட்டது/
முகத்தை கழற்றி வைத்து/
மனிதனாய் வாழ
முயல்கிறேன்/



நம் காதலின்
இறுதியாத்திரை/
நடக்கிறது வா
கண்ணே!/
மனிதத்துவத்தைப்
புதைத்து /
புனிதராய் வாழ்ந்திடலாம்/

உடைந்த பென்சில்
முனையை/ சீவி உற்சாகமாய்
வரைகிறாள்/ வட்டத்தைக்
கோடுகளுடன் இணைத்து/
'அப்பா' என்கிறாள்/

**முனைவர் வே.புகழேந்தி**
பெங்களூரு

## இன்சொல்லே பேசல் இனிது!

நேரிசை வெண்பா!

வன்சொல் வளமழிக்கும்
வண்ணத்திறனழிக்கும்!

அன்பான சொற்கள்
அழகாக...இன்போடு

பொன்சொல் பொலிவாய்
இருக்கையில்.. யாரிடமும்

இன்சொல்லே பேசல்
இனிது!

இரும்புக் கதவை
இனிதாய்த்திறக்கும்!
அருமையாம் அன்பான
சொல்லே... பெருமையுடன்

வன்சொல்லை நீக்கி
வளமாகக் காண்கின்ற



இன்சொல்லே பேசல்
இனிது!

**முனைவர்
இராம.வேதநாயகம்**
திருவண்ணாமலை.



## தரிசனம்-- நிதர்சனம்...

எல்லாம் முடியும் என்பவனே...
என்னினிய இளைஞனே!
வியனுலகம் என்றும்
போற்றித் துதிக்கும்
வெளிச்சத்துக்கும்
விசித்திர விதி
ஒன்றுண்டு...இதைப்
புரிந்து பாடம்
உணர்ந்து நீ விரிந்தால்
வாழ்க்கை முழுவதுமே
வெளிச்ச விளைச்சல்..
பிரபஞ்சப் பெருமையே
ஒளி வெள்ளம்
ஓயாமல் பாய்ச்சும்
வெளிச்சப் பிரசவம் தான்...
எல்லையே இல்லாத
ஒளியின் ஊற்றுக்கும்
எல்லை உண்டென்பதே
உலகின் உயரிய உன்னத
விநோதம் காண்...
அதீத ஒளியின்
ஆச்சரிய விளைவு
அதிஇருளின்
அதிசய குத்தகை
என்பதை அறிவியல்
சொன்னாலும்
ஆன்மீக அறிவியல் அதிரடி
திருப்பம் அளிப்பதுவே...
அக வெளிச்சம் என்பது
அதீதம் தாண்டிய நிலையிலும்
தெவிட்டா தேனமுதம்
என்னும் பேரானந்த
பெருவெள்ளத்தை
ஊட்டிக் கொண்டே இருக்கும்
உன்னத அனுபவத்தை
ஆழப் பயணத்தில் தான்
அறிய முடியும் நீ...
நாணயம் போலவே
வெளிச்சத்துக்கும்
இரு முகங்கள் உண்டு
எல்லை தாண்டினால்
இருள் என்று கூறிய
விதியெல்லாம் இங்கே வெளி
வெளிச்சத்துக்கு மட்டுந்தான்
இளைஞனே...குன்றா
அன்புப் பெருக்கில்
வற்றா நீரூற்று போல்
உள்ளத்தில் அள்ளும்
உள் வெளிச்சத்துக்கு
எல்லையும் இல்லை...
இருளும் இல்லை...
இடையூறும் இல்லை...



எல்லாம் வல்ல
இறைவனே
பேரொளியாய் பெரும்
தரிசனம்... இதுவே
மெய்ஞ்ஞானத்தின்
வீரிய நிதர்சனம்!

**நெல்லை குரலோன்**
பொட்டல் புதூர்

## ஆனந்தக் கூத்து

பிறரைத் திருத்த நீ யார்?
தன்னை உணர்வதே லட்சியம்
தீய பழக்கங்களை விலக்கிடு
ஒப்பீடு தேவையற்ற முயற்சி
சஞ்சலமின்றி சகஜமாய் வாழு
திருப்தியே மனிதனுக்கு
முக்கியம் உன்
எண்ணங்களை
நெருங்கியோர்
ஏற்றுக் கொள்ள
வலியுறுத்தாதே
தேர்தல் நேரத்தில்
உறவினர்கள் நட்பிடம்
பகைமை பாராட்டாதே



செல்வம்
மட்டிலும்
போதாது
சரீர பலம்
அத்தியாவசியம்

**பி. பழனி,**
சென்னை.

## சிந்தனை செம்மை செய்.!

சிந்தனைப் பறவை
சிறகசைத்து விண்ணில்
பறக்குதம்மா.!

வந்தனை கூறி.. வானத்து
மேகம் வரவேற்புக்
கொடுக்குதம்மா.!

வேடந்தாங்கல் மரக்கிளை
மேலே.. பறவைகள்
அமர்ந்ததம்மா..!

வேட்கைகள் யாவும்
செம்மை செய் என்றே
பாடல்கள் இசைக்குதம்மா..!

நேர்வழி செல்லும் சிந்தனை
வந்தால்.. ஆயிரம் வாசல்கள்
திறக்குதம்மா....

பார்முழுதும் இன்று
போரில்லா வானில்..
பறவைகள் சிறகை
விரிக்குதம்மா..

ஓரினம் நாங்கள்.. பறவைகள்
என்றே ஒற்றுமையாய்க்
குயில்
கூவுதம்மா!



சீர்தரும்
சிந்தனை
வானத்தில்
பறந்தே..
செம்மைசேர்
எண்ணமே மேவுதம்மா.!

**வே.கல்யாண்குமார்.**



## கொத்தமல்லி.!

கொத்தமல்லி கட்டு வந்து
பாடுது.!நித்தம் வெந்து
சமையலில் சுவை கூடுது.!

சித்தமெல்லாம் கொத்தமல்லி
என்றது! செரிமாணப்
பிரச்சனைகள் சென்றது!

பச்சை நிற பட்டுப்புடவை
உடுத்தியே.. காயகறி
கூடையினில் அசத்தியே..

மிச்சமின்றி சட்டினியில்
மிதக்குது..! கொத்தமல்லி
கூட்டில் சுவைக் கூட்டுது.!

நீரழிவு நோய்களுக்கு
மருந்திது.. நினைவுகளில்
புதிய சக்தி யானது.!

மூலிகையில்
கொத்தமல்லி எளியது..
மூலைமுடுக்கெல்லாம் தினம்
கிடைப்பது!

மல்லிவிதை காப்பி மண
மணக்குது.. நெல்லிக்காயைப்
போல சுவை இருக்குது!

கறிவேப்பிலை யோடு கலந்து
உறவாடுது.. உளுத்தம்பருப்பு
கடுகோடு கூடுது..!

சட்டினியும் சாம்பாரும்
மணக்குது.. கொத்தமல்லி
துவையல் கமகமக்குது!

கொத்தமல்லி கொடி
உயரேப் பறக்குது!
கவிதைபாடு என்று என்னை
அழைக்குது.!

**வே.கல்யாண்குமார்.**

## இறைவன்

சிற்றோடையோ அருவியோ
சிறுநதியோ புரளப் புரள
ஆனந்தம் அளிக்கின்ற,
குளிக்கக் குளிக்க
புத்துணர்ச்சி கொடுக்கின்ற,

அலைகளோ தெறிக்கும்
திவலைகளோ பார்க்கப்
பார்க்கப் பரவசம் தருகின்ற

தண்ணீர் என்ற ஒன்றைத்
தந்ததற்கு மட்டுமே



சொல்லிட
வேண்டும்
அவனுக்கு
பல கோடி
நன்றி.

**கே. பி.
ஜனார்த்தனன்**



## முகிழ்த்தேன்

சேர்ந்தே இருப்போம்
மரங்கள் நடுவதில்!

பிரிந்தும் இருப்போம்
அமைதி எழுவதில்!

நிமிர்ந்தே நிற்போம் உறவுகள்
மலர்வதில்!

உயர்ந்தே நிற்போம்



உரிமைகள்
வாழ்வதில்!

உணர்ந்தே
இருப்போம்
மனிதம்
விளைவதில்!

**எஸ். தயாளன்**
காட்பாடி சேவூர்



## கொலுசு

கண்ணகியின் கால் சிலம்பு
காலம் கடந்து பெற்ற
மாற்றம்

நீதிக்குத் தூதாகி
நிலைபெறும்அறிவிப்பு
மணியாகி அழகாய்த்
தகவல் சொல்லும்

தளிர்ப்பாதத்தின் தாள லயம்
இசை கூட்டும் ஆன்ம பலம்

மழலையின் பிஞ்சுக்
கால்களில் விளையாடி
கொஞ்சும் மொழி பேசும்

சிட்டாகச் சுற்றும் சிறுமியர்
கால்களில்
சிங்காரமாய் அழகூட்டும்

பருவப் பெண்ணின்
பாதங்களை
பாங்காக வருடும்

மங்களத்தின்
அடையாளமாகி
மங்கையர்க்கு அழகு
சேர்க்கும்

மணப்பெண்ணோடு
உறவாடி மணாளனைத்
தேடச் செய்யும்

வாலிபக் காதலுக்கு
வழிகாட்டும்
வயோதிகக் காதலுக்கும்
வலுவூட்டும்

கருவி இல்லா இசை நல்கி
காதுக்கு இனிதாகும்



எழிலாக
உலா வரும்
கொலுசின்
ஒலி
என்றும்
மனதை
நிறைக்கும்.

**தமிழ்நிலா**



## ஆறு.. வரலாறு.!

ஆறு ஆறு ஆறு கதையைக் கூறுவேன்!
வரலாறு படைத்த ஆறு புகழைக் கூறுவேன்!
சீருகளுக்குள் அடங்கிடுமோ தமிழ் ஆறு! அந்த
ஆறுமுகன் அருள்தருவான் பாடுவேன்!

கன்னித் தமிழினோடு கலந்த ஆறுதான்!
அது கவிஞர்களின் பாடுபொருள் ஆறுதான்!
பூம்புகாரிலே கலக்கும் வரையிலும்.. புகழ்
மணக்கும் காவிரி அதன் பேருதான்!காவிரி
நீர் என்றால் தகராருதான்! இருந்தும் கரை
உடைத்து பாய்ந்து வரும் ஆறுதான்!

மதுரை யென்றால் கோவிலுண்டு... ஊருதான்!
மீனாட்சி நீராடிடும் ஆறுதான்.. சொக்கேசன்
விளையாடிய ஆறுதான்!
சொற்றமிழில் வைகை அதன் பேருதான்!சங்கம்
வைத்த மதுரை வந்த ஆறுதான்!

நெல்லைத் தமிழை நினைத்தாலே
இனிக்குமாம்! அங்கே நெஞ்சம் நிறைய
பாய்ந்து வந்த ஆறுதான்! காந்திமதி அம்மன்
அமர்ந்த தேருதான்! தாமிரவருணி அதன்
பேருதான்! மணிமுத்தாறுடனே சேருதான்!

குடமுருட்டி.. குண்டாறு.. வெள்ளாறுதான்..
கொல்லைப்பக்கம் முல்லைப் பெரியாறு தான்!
மழைக் காலத்தில் பெருகும் பாலாறுதான்!
மனம் கவர்ந்த ஊரு வேலூருதான்! மதராசில்
பாயும் கூவம் ஆறுதான்!

பாரு பாரு ஆறு பலவும் பாயுது பாரு!
ஆனாலும் பாலாறும் தேனாறும் பாயுதா கூறு!
ஏருழவன் வறுமை இங்கு தீருதா பாரு! இந்த
நிலை வந்ததற்கு காரணம் கூறு!

ஆறில்லாம் ஊருமில்லே அறியனும் பாரு!
ஆறுகரையோரத்தில்தான் நாகரீகம் பாரு!
ஏறுமாறா போகுதடா மனுசங்க வாழ்வு!
இயற்கையோடு கலந்து பாயும் ஆறுகள் பாரு.!
எந்த நாளும் ஆறுதானே வாழ்வின் வரலாறு!

**வே.கல்யாண்குமார்.**

## சும்மா இருப்பது சுகம்

மனதை அடக்கி, எண்ணங்களை ஓட விடாமல்
அமைதியாக இருப்பதே பேரின்பம்!

அந்த மௌனத்தில் தான் உண்மையான நிம்மதியும்,
தெளிவும் பிறக்கிறது!

அலைபாயும் எண்ணங்கள் அடங்கிடவே ,
அகிலத்தின் ஆரவாரம் ஓய்ந்திடவே சும்மா இருப்பதே சுகம்
அது நிம்மதி தேடும் பெருந்தவம்!

செய்ய ஏதுமில்லை என்ற நிலையில்,
நம் மனதைக் கவனிப்பதே ஒரு தனி இன்பம்!

தேடி அலைந்தே ஓய்ந்த கால்கள்
ஓடாத நதியாய் தேங்கி நிற்கட்டும்!

நேரமின்றி பறந்த மனம், தன் நிழலில் இளைப்பாறி மகிழட்டும்!

எண்ணச் சத்தம் அடங்கிய நேரம்,
மௌனம் ஒரு மெல்லிய ராகம் மீட்டும்!

சும்மா அமர்ந்து காற்றை ரசிக்கையில்
உள்ளுக்குள் புது உலகம் பூக்கும்!

ஒரு நொடி கடிகாரம் முள்ளை மறந்து!

ஒரு நொடி கடமையின் சுமையை இறக்கி வெறுமனே அமர்ந்து
இருப்பதே ஒரு கலை, அது தரும் அமைதிக்கு இணையே
இல்லை !

கடற்கரை மணலில் வந்து அலைக்கும் அலை போல மனதின்
எண்ணங்கள் வந்து போகட்டும்!

நீ சும்மா அமர்ந்திரு அந்த அமைதியில் உன்னை நீயே
கண்டெடுப்பாய்!

சும்மா இருப்பது சோம்பேறித்தனம் அல்ல அது மவுனத்தின்
மொழியை புரிந்து கொள்ளும் கலை!



சும்மா இருத்தல் சோம்பல் அன்று, சுயம் அறியும்
தவத்தில் !

தான் எனும் அகந்தை கரைந்து போனால்
தனிப்பெரும் ஜோதி உன்னுள் ஆகும்!

**பெ.திருமுகம் ஆசிரியர்**
மணமேல்குடி



இதயம் என்பதும்
ஒரு சுருக்குப் பைதான்.
அது இயங்கும் வரைதான்
சேமித்து வைக்க முடியும்
உயிரை!

## காதல் சுழி

சுழி போட்டுத் தொடங்காமல்
உன்மேல் விழி போட்டுத்
தொடங்கினேன் செயலை...
காதல்!

உன் வெட்கம்தான்
வெளிச்சம் போட்டுக்
காட்டுகிறதே இதயத்தை...
நீ என்ன எழுதலாம் என்றா
யோசிக்கிறாய்...



இல்லை,
இல்லை. உன்
எண்ணத்தை
எப்படி
எழுதுவது
என்றுதானே
யோசிக்கிறாய்!

**சு.அருண் பிரகாஷ்**
இராமச்சந்திரபுரம்



ஒட்டாரம் பிடித்தாவது–
உன்னை வட்டமிட வேண்டும்–
அந்த வானில் பறக்கும்
கழுகை போல!

விண்டி கோல் கண்களால்
சுண்டி இழுக்காதே
மண்டியிட்டு கேட்கிறேன்
பாவம் என்னை விட்டு விடு
பாழும் பூமியில்
வாழ்ந்து விட்டு போகிறேன்!

திடீரென தோன்றிய கடவுள்
வரமாய் என்ன வேண்டும்
என்கிறான்? தேவதை
கதைகள் நிறைய
வேண்டுமென்றேன்!

கனவுகளில் எல்லாம்
அவள் தேவதையாக மட்டுமே
வருகிறாள் ஏனோ

இப்போதெல்லாம்
நிஜங்களை விட
கனவுகளே பிடித்து போகிறது!

ஆக்ஸ்போர்டு
யுனிவர்சிட்டியில்
படித்தாவது அர்த்தம் அறிய
வேண்டும் அடிக்கடி சிமிட்டும்
உன் புருவங்களின்
பார்வைக்கு!

தொட்டு செல்லும் மழை
விட்டு தான் செல்கிறது
உன் நினைவுகளை!

கோயிலுக்கெல்லாம்
கூட வராதேஏனோ
குழப்பத்தில் வணங்குகிறேன்
கடவுளான உன்னை!

உன் எச்சில் படாத
காபியெல்லாம்
கசந்து தான் போகிறது!

உன்னில் நனைந்ததால்
கர்வம் பிடித்து திரிகிறது
அந்த மழை!

அகராதியில்அர்த்தம்
தேடுகிறேன்
அந்த பொல்லாத பார்வைக்கு!

இரை தேடும் பறவை
நிச்சயம் திரும்ப கூடடையும்
எத்தனை சண்டை–
சச்சரவுகள் வந்தாலும்
திருந்தாத நெஞ்சம் உன்னில்
அடையவே விரும்பும்!

எல்லாம் போன பின்பும்
உன்னை அணைத்து
கொண்டிருந்தால்
அதுவே உண்மைக்காதல்!

அங்கு அறிவிப்பு பலகை
வையுங்கள் அந்த இடத்திற்கு
யாரும் செல்லாதீர்கள்
புருவம் உயர்த்தி நீங்கள்
கேட்கும் கேள்வி என்
காதுக்குள் ஒலிக்கிறது
ஆம் அங்கு பாழாய் போன
அந்த காதல் தான் உள்ளது
இறுதியாய் உங்களுக்காக
பாதிக்கப்பட்டவன் எழுதி
விட்டு செல்கிறான்
Love is Injurious to Mind!

காதல் ஒரு உயிர்க்கொல்லி
நோய் தான் அதற்கு
மருந்தும் கிடையாது
தீர்வும் கிடையாது!

**லி.நௌஷாத் கான்**




























தனியார் வாகன உதிரிபாகங்கள் உற்பத்தி செய்யும் நிறுவனத்தில் பணிபுரிய ஆட்கள் தேவை.

**Quality Line Inspector**
Fresher/Exp Male Only
Qualification - ITI/Diploma/B.E

**Final Quality Inspector**
Fresher / Exp - Male/Female
Qualification: 10th/ 12th/ ITI

**VMC Machine operator**
Fresher/ EXP Male only
Qualif: 10th/12th/ITI/Diploma

Mr Prakesh : 8939 940 090
Mr.Neelavanan : 9884 001 253
SALARY BASED ON EXPERIENCE












VINAYGA ENTERPRISES
WANTED
COMPUTER OPERATOR
( FEMALE)
ONIDA AUTHORISED SERVICE CENTRE
CONTACT:9962116238
ADDRESS: BHEEMANNA PETTAI, BHEEMANNA 1ST STREET, ALWARPET CHENNAI







Get Free Jobs Alert on Your
WhatsApp
Register Yourself on our
8122664699
WhatsApp Your Name, Age & Address on Above Number
Josh Jobs Team Give u Daily Update of Govt. as Well as Private Jobs

ST COURIER
The People's Choice
ISO 9001:2008 Certifed
DOMESTRIC- INTERNATIONAL
Old No. 1/2, New No.3, Kesavan St., Tondiarpet, Chennai-600081.
Cell: 9176130601




WANTED
M/F லோடுமேன்,பிக்கர், ஹெல்பர்,
வர/மாத சம்பளம்: 450-700. உணவு
இடம் free day/N8 shift
7540003588







WANTED
JAY SECURITY FORCE
பணி வாய்ப்புகள்
- பணிகள்: A.S.D செக்யூரிட்டி கார்டுகள் ஹவுஸ் கீப்பிங்
- இடங்கள்:
  - பெருங்குடி, துரைப் பாக்கம்
  - காரப்பாக்கம், சோழிங்கநல்லூர்
  - விருகம்பாக்கம்

பெண்கள் தேவை
சம்பளம்:- 12500 முதல் 20000 வரை
9791061354 - 8072969599
Head office
NO :1, அம்பாள் அவின்யூ,
வி.பி.ஜி அவின்யூ, விரிவாக்கம்,
மேட்டுக்குப்பம்- சென்னை-97

செக்யூரிட்டி கார்டுகள் தேவை
கோடம்பாக்கம் சேத்துப்பட்டு புரசைவாக்கம்
கோட்டூர்புரம் பகுதிகளில் வேலை
செய்ய செக்யூரிட்டி கார்டுகள் தேவை
அணுகவும்: 9840861539


































விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டம், மேல்ஒலக்கூர்
பசுமலை ஸ்ரீ சுப்ரமணிய சுவாமிக்கு விசுவாவசு வருஷத்திய
பிரமோற்சவப் பத்திரிக்கை

அன்புடையீர் வணக்கம்.

குன்றுகள் தோறும் வீற்றிருந்து பக்தர்களுக்கு அருள்பாலிக்கும் முருகப் பெருமான், மகிமை நிறைந்ததும், சித்தர்களும், ஞானிகளும் வணங்கும் புண்ணிய திருத்தலம் பசுமலை என்று அழைக்கப்படும் கோ கிரி என்னும் திருக்கோயில் ஆகும்.

எழிலும், அருளும் நிறைந்த பசுமலையில் முருகப்பெருமான் ஸ்ரீ வள்ளி, தேவசேனா சமேத ஸ்ரீ சுப்ரமண்ய சுவாமி என்னும் திருநாமத்தோடு வீற்றிருந்து பக்தர்களின் இன்னல்களை களைந்து வாழ்வில் அனைத்து செல்வங்களையும் தந்து மேன்மையடையச் செய்கிறார் என்பது பக்தர்கள் வாயிலாகக் கண்ட நிதர்சனமான உண்மை.

இறைவன் திருவருளாலும், பூஜ்யஸ்ரீ காஞ்சி காமகோடி ஸ்ரீஸ்ரீஸ்ரீ சங்கராச்சார்ய சுவாமிகளின் குருவருளாலும் நிகழும் மங்கலகரமான கலியுகாதி 5126 விசுவாவசு வருடம் பங்குனி மாதம்-08 ம் தேதி 22.03.2026 ஞாயிற்றுக்கிழமை, சதுர்த்தி திதி, பரணி நட்சத்திரம் கூடிய சுபதினத்தில் காலை 10.30 மணிக்கு மேல் 12.00 மணிக்குள் மயூர துவஜாரோகணமும் அன்று முதல் பதினொன்று நாட்கள் வரையில் சிறப்பான மகோற்சவங்களும் நடக்க இருப்பதால் பக்தர்கள் இவ்விழாவில் கலந்துகொண்டுஸ்ரீமுருகப்பெருமான் திருவருளுக்கு பாத்திரமாகும்படி கேட்டுக்கொள்கிறோம்.

| தமிழ் தேதி | ஆங்கில தேதி | நிகழ்ச்சிகள் |
|---|---|---|
| பங்குனி மாதம்- 07 | 21.03.2026 சனிக்கிழமை | விநாயகர் வழிபாடு,பூர்வாங்க பூஜைகள் |
| பங்குனி மாதம்- 08 | 22.03.2026 ஞாயிற்றுக்கிழமை | அஸ்திர தேவர் பூஜை, துவஜாரோகணம்(கொடியேற்றம்) |
| பங்குனி மாதம்- 09 | 23.03.2026 திங்கட்கிழமை | ஆலய பிரதட்ஷணம் |
| பங்குனி மாதம்- 10 | 24.03.2026 செவ்வாய்கிழமை | ஆலய பிரதட்ஷணம் |
| பங்குனி மாதம்- 11 | 25.03.2026 புதன்கிழமை | ஆலய பிரதட்ஷணம் |
| பங்குனி மாதம்- 12 | 26.03.2026 வியாழக்கிழமை | மயில்வாகன கிரிபிரதட்ஷணம் |
| பங்குனி மாதம்- 13 | 27.03.2026 வெள்ளிக்கிழமை | முத்து பிரபை கிரிபிரதட்ஷணம் |
| பங்குனி மாதம் - 14 | 28.03.2026 சனிக்கிழமை | இந்திர விமான கிரிபிரதட்ஷணம் |
| பங்குனி மாதம் - 15 | 29.03.2026 ஞாயிற்றுக்கிழமை | திருக்கல்யாணம் இரவு 8.00 மணிக்கு |
| பங்குனி மாதம் - 16 | 30.03.2026 திங்கட்கிழமை | ரதோற்சவம் (மாலை 5.00 மணிக்கு திருத்தேரோட்டம்) |
| பங்குனி மாதம் - 17 | 31.03.2026 செவ்வாய்கிழமை | பங்குனி உத்திரம், தீர்த்த வாரி, த்வஜ அவரோகணம்(கொடி இறக்கம்) |
| பங்குனி மாதம் - 18 | 01.04.2026 புதன்கிழமை | 11-ம் நாள் விடையாற்றி உற்சவம் |

குறிப்பு
பிரதிமாதம் பௌர்ணமி கிரிவலம் நடைபெறுகிறது
கிரிவலம் செய்து வளமோடு வாழ்க!


இங்ஙனம்,
S.V.சுப்ரமண்ய சோமயாஜீலு
V.ராம்குமார் சோமயாஜீலு
ஆதீன பரம்பரை அறங்காவலர்கள்,
மேல் ஒலக்கூர் - 604 203.
செல் : 9962344722, 8610716563
9047725285








# பல்சுவை களஞ்சியம்




# நடிகர்கள் நமக்கு கற்றுத் தரும் நாகரிகம்!

## துடுப்பதி ரகுநாதன்



மாநகரத்திலேயே அது தான் பிரமாண்டமான அரங்கம். டி.வி. பட்டிமன்றப் பேச்சாளர் ஸ்ரீமதி தன் அருமை மகள் சுபஸ்ரீயின் நாட்டிய அரங்கேற்றத்திற்கு ஏற்பாடு செய்திருந்தாள்.

திரை உலகப் பிரபலங்கள், பத்திரிகை உலக பிரபலங்களை எல்லோரையும் அழைத்திருந்தாள்.

அவள் கல்லூரித் தோழி தேன் மொழியை அழைக்க அவள் வீட்டிற்குப் போயிருந்தாள். அவளின் தந்தை நாற்பது வருடங்களுக்கு முன்பே முனைவர் பட்டம் பெற்ற தமிழறிஞர். ஒரு மரியாதைக்கு தோழியின் அப்பாவையும் அந்த நிகழ்ச்சிக்கு கூப்பிட்டாள்!

தேன் மொழியும் யதார்த்தமாக தன் தந்தையை தோழியின் மகள் நாட்டிய அரங்கேற்றத்திற்கு அழைத்துப் போயிருந்தாள்.

அவர்களைப் பார்த்தவுடன் ஸ்ரீமதி ஓடி வந்து, பெரியவரை கூட்டிக் கொண்டு போய் முக்கிய பிரமுகர்கள் வரிசையில் உட்கார வைத்து விட்டு வந்தாள். தோழியை தனியே அழைத்து "ஏண்டி காலத்திற்கு தகுந்த மாதிரி அப்பாவை நாகரிகமாக டிரஸ் செய்து கூட்டி வரக்கூடாதா?..." என்று கேட்டாள்.

அப்பா வழக்கம் போல் குளித்து முகச் சவரம் செய்து, ஒழுங்காக தலைவாரி தூய வெள்ளை வேட்டி கட்டி, நெற்றி நிறைய திருநீறும் அதில் சிறிது குங்குமமும் வைத்து வழக்கம் போல் தான் வந்திருந்தார்.

தேன் மொழிக்குப் புரிய வில்லை! "அவர் வழக்கம் போல் தான், இந்த பொது நிகழ்ச்சிக்கும் வந்திருக்கிறார்!..."

"அவர் அந்தக் காலத்தில் பொது நிகழ்ச்சிக்குப் போவது போல் இன்றும் வந்திருக்கிறார்!..."என்றாள்.

"நானும் அதைத் தான் சொல்கிறேன். அது எல்லாம் நாற்பது வருஷங்களுக்கு முன்பு இருந்த நாகரிகம்! அன்றைக்கு அது சரி... இன்றைய நாகரிகமே வேறு மாதிரி!

"ஏண்டி எனக்கே நீ சொல்லும் இன்றைய நாகரிகம் புரியவில்லை!.."

"கொஞ்ச நேரத்தில் திரை உலக பிரமுகர்கள் எல்லாம் ஒவ்வொருவராக வருவார்கள்... அவர்கள் தோற்றத்தைப் பார்த்து இன்றைய ஆண்களின் நாகரிகத்தை நீயே புரிந்து கொள்!..." என்றாள் சலிப்புடன்!

அடுத்த சில நிமிடங்களில் பிரபல நடிகர்கள் ஒவ்வொருவராக மேடைக்கு வந்து கும்பிடு போட்டார்கள்! அவரெகள் எல்லோருமே படத்திற்கு பல கோடி சம்பளமாக வாங்குபவர்கள் தான்!

எல்லோருமே முகச் சவரம் செய்து இரண்டு மூன்று வாரங்களாவது இருக்கும் முட்கள் மாதிரி வெள்ளையும் கறுப்பும் கலந்த முடி ஈட்டி மாதிரி தாடி. மீசைகளில் நீட்டிக் கொண்டிருந்தன.

முகத்தில் லேசாக எண்ணெய் வழிந்து கொண்டிருந்தது! தலை வாராமல் தலை முடி கலைந்திருந்தது. யாருமே சட்டைக்கு சரியாகப் பட்டன் போட்டிருக்க வில்லை! கிட்டத்தட்ட உயர்தர சர்ட், பேண்ட் போட்ட பிச்சைக்காரன் மாதிரி இருந்தார்கள்!

இந்தக் காலத்து ஆண்களுக்கு அவர்கள் கற்றுத் தரும் நாகரிகம் இது தான் போலிருக்கு!...

**டி.எஸ். ரகுநாதன்.**
கோயமுத்தூர்

# மீம்ஸ்









# விடுகதை

| | |
|---|---|
| இருந்த இடத்தில் நகர்ந்தபடி இரவும் பகலும் செல்வான். அவன் யார்? | கடிகாரம் |
| உடம்பெல்லாம் பல் கொண்ட ஒருத்திக்கு கடிக்க தெரியாது? | சீப்பு |
| காலில் தண்ணீர் குடிப்பான், தலையில் முட்டையிடுவான் அவன் யார்? | தென்னை |
| கல்லில் காய்க்கும்பூ தண்ணீரில் மலரும்பூ, அது என்ன பூ? | சுண்ணாம்பு |
| காற்றைக் குடித்து காற்றில் பறப்பான், அவன் யார்? | பலூன் |
| நடந்தவன் நின்றான் கத்தியை எடுத்து தலையைச் சீவினேன் மறுபடியும் நடந்தான் அவன் யார்? | பென்சில் |
| எத்தனை தரம் சுற்றினாலும் தலை சுற்றாது, அது என்ன? | பம்பரம் |

# புதுமனை புகு விழா



புதிதாக வீடு குடிபுகும் போது கோயிலில் இருந்து பின்வரும் பொருட்களை வீட்டுக்கு எடுத்து செல்வது சம்பிரதாயமான ஒன்றாகும்.

புது மனை புகு விழாவை காட்டும் புகைப்படம்

# குத்துவிளக்கு - 2
# நிறைகுடம்
# படங்கள் - (பிள்ளையார், இலட்சுமி , முருகன்)
# முகம் பார்க்கும் கண்ணாடி
# பூமாலையுடன் கூடிய அர்ச்சனை தட்டு
# நிறைநாழி
# கற்கண்டு
# நெல்பரவி பட்டுத்துணி, நாணயம் மற்றும் மஞ்சள் என்பன வைக்கப்பட்ட தட்டு
# தேங்காய் தோலுடன் - 3
# மஞ்சள் பூசிய தேங்காய்
# ஒரு புது மண் சட்டி உப்பு நிறைத்தபடி
# புது சட்டியில் முழு மஞ்சள்
# கோயிலில் ஆசீர்வாதம் பெற்று எடுத்த விபூதி சந்னம் முதலிய பொருட்கள்

**சுந்தரி காந்தி**
பூந்தமல்லி, சென்னை



# ஜோக்ஸ்

**திருமணமானவர்கள் கீழே உள்ள செய்தியைப் படிக்கவேண்டாம்:**

ஒரு பெண்மணி நடு இரவில் தூக்கத்தில் எழுந்து தன் கணவர் அருகில் இல்லாததை உணர்ந்து அவரைத் தேடினார். வீடு முழுவதும் தேடி, கடைசியில் அவர் சமையலையறையில் அமர்ந்திருந்ததைக் கண்டார். அவருக்கு முன்னால் காபி இருந்தது. அவர் ஆழ்ந்த சிந்தனையில் சுவரை வெறித்துப் பார்த்தபடி அமர்ந்திருந்தார். இடையிடையே கண்ணில் வழியும் கண்ணீரைத் துடைத்தபடி காபியை அருந்திக் கொண்டிருப்பதைக் கண்டார். மனம் பதைபதைத்து அவர் அருகில் சென்று, இதமாகக் கையைப் பிடித்து, "என்ன ஆயிற்று? இந்த நடு இரவில் இங்கே வந்து தனியாக அமர்ந்திருக்கிறீர்களே?" என்று கேட்டார்.

கணவன்: உனக்கு நினைவிருக்கிறதா? 20 வருடங்களுக்கு முன்னால் உனக்கு பதினெட்டு வயதாகும்போது நாம் இருவரும் தனியாக பார்க்கில் சந்தித்தோமே?

மனைவி: ஆமாம், நினைவிருக்கிறது.

கணவன் (தொண்டை அடைக்கக் கமறலுடன்): அன்று உன் அப்பாவிடம் இருவரும் மாட்டிக்கொண்டோமே?

மனைவி: ஆமாம் (கணவரின் கண்களைத் துடைத்து விடுகிறார்)

கணவன்: என் நெற்றிப்பொட்டில் துப்பாக்கியை வைத்து "மரியாதையாக என் பெண்ணைத் திருமணம் செய்து கொள்கிறாயா.. இல்லை, 20 ஆண்டுகள் உன்னை ஜெயிலுக்கு அனுப்பவா?" என்று உன் அப்பா என்னைக் கேட்டது உனக்கு நினைவிருக்கிறதா?

மனைவி: அதுவும் நினைவில் இருக்கிறது. அதற்கென்ன?

கணவன் கண்களைத் துடைத்தவாறு: அன்று என்னை ஜெயிலுக்கு அனுப்பியிருந்தால் இன்று எனக்கு விடுதலை நாள்!!!!

=========================

என் பொண்டாட்டிய என்ன தான் செய்றது?

ஏன் என்ன பண்றாங்க?

நான் எது செஞ்சாலும் என் பொண்டாட்டி குறுக்கே நிக்கிறா.

கார் ஓட்டி பாரேன்.

=========================

சார், என்னோட பொண்ணைக் காலையில் இருந்து காணல! புகார் கொடுக்கணும்..

அதோ போறாரே.. அவர்தான் உங்க சம்பந்தியா இருக்கணும்.. முதல்ல அவர்கிட்ட போய் பேசுங்க...

என்ன சார் நீங்க.. பொண்ணக் காணலைன்னு சொல்றேன்.. நீங்க என்னடான்னா அவர் கிட்ட பேசச் சொல்றீங்க?

அவரோட பையனக் காணோம்னு இப்போத்தான் புகார் கொடுத்துட்டு போறாரு.. அதான்.

=========================

உன்னை யாரவது லூசுன்னு சொன்னா கவலை படாதே! வருத்த படாதே! ஃபீல் பண்ணாதே!

உங்களுக்கு எப்படி தெரியும்ன்னு கேள்!


=========================

ஒடுர எலியின் வாலை புடிச்சா நீ கிங்கு ....

ஆனா....

ஒடுர புலியின் வாலை புடிச்சா உனக்கு சங்கு!!

=========================



# தெய்வீக அருள் தரும் ஆன்மிகம்

## ஆத்துமரத்துப்பட்டியில் காளியம்மன் கோவில் திருவிழா

திண்டுக்கல் அருகே முள்ளிப்பாடி ஆத்துமரத்துப்பட்டியில் உள்ள காளியம்மன், பகவதி அம்மன் கோவிலில் பங்குனி மாத திருவிழா நடைபெற்றது. விழாவில் முளைப்பாரி, பால்குடம் மற்றும் சந்தனகுடம் ஊர்வலம் நடந்தது. இதில் பக்தர்கள் மாவிளக்கு, அக்னிசட்டி எடுத்து நேர்த்திக்கடன்களை செலுத்தினர்.

விழாவையொட்டி அம்மன் சிறப்பு அலங்காரத்தில் அருள்பாலித்தார். தொடர்ந்து கரகம் அம்மன் குளத்திற்கு மேளதாளம் முழங்க ஊர்வலமாக செல்லும் நிகழ்ச்சி நடந்தது. விழாவில் சுற்றுவட்டாரங்களில் இருந்து ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு அம்மனை தரிசனம் செய்தனர். இன்று அம்மன் மஞ்சள் நீராட்டுதலுடன் திருவிழா நிறைவு பெறுகிறது.



## செங்காடு கிராமத்தில் உள்ள வலம்புரி விநாயகர் கோவிலில் மகா கும்பாபிஷேக விழா

தருமபுரி மாவட்டம் பாப்பிரெட்டிப்பட்டி வட்டம் அதிகாரப்பட்டி, செங்காடு கிராமத்தில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ வலம்புரி விநாயகர் ஸ்ரீ வள்ளி தெய்வானை சமேத ஸ்ரீ கல்யாண சுப்ரமணி சுவாமி இடும்பன், கடம்பன் கோவிலில் ஆலய அஷ்ட பந்தன மஹாகும்பாபிஷேக பெருஞ்சாந்தி விழா கடந்த 24-ந் தேதி தொடங்கி சுவாமிக்கு தீர்த்தக்குடம், பால்க்குடம் எடுத்தல், உள்ளிட்டவைகள் நடந்தன.

அதனை தொடர்ந்து, சுவாமிகளுக்கு மங்கள இசை, கும்பலங்காரம், யாகசாலை பிரவேசம். உள்ளிட்ட பூஜைகள் நடைபெற்றன. தொடர்ந்து நேற்று ஆலயத்தில் மகா கும்பா பிஷேக விழா நடைபெற்றது.





## கிருஷ்ணகிரி முல்லை நகர் மாரியம்மன் கோவில் கும்பாபிஷேக விழா

கிருஷ்ணகிரி முல்லை நகரில் உள்ள ஊர் மாரியம்மன், மங்கள விநாயகர், பாலமுருகன் கோவில் கும்பாபிஷேக விழா நடந்தது. இதையொட்டி கடந்த 23-ந் தேதி மகா கணபதி ஹோமம், மஹா சங்கல்பம், கணபதி ஹோமம், மஞ்சள் இடித்து பச்சை பந்தல் அமைத்தல், காப்பு கட்டுதல், கொடி ஏற்றுதல் ஆகியவை நடந்தது.



நேற்று முன்தினம் மாலை கோ பூஜை, யாகசாலை பிரவேசம், முதல்கால யாகபூஜை ஆகியவை நடந்தது. நேற்று காலை, இரண்டாம் கால யாக பூஜை, வேதபாராயணம், திருமுறை பாராயணம், சாமிக்கு கண் திறப்பு, கடம் புறப்பாடு ஆகியவையும், 10 மணிக்கு கோவில் கோபுர கலசத்திற்கு புனித நீர் ஊற்றி மகா கும்பாபிஷேகம் நடந்தது. தொடர்ந்து மூலவர் ஊர்மாரியம்மனுக்கு அபிஷேகம், அலங்காரம், சிறப்பு பூஜை ஆகியவை நடந்தது. இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

## ஒரே பாடலில் ராமாயணம்... ஸ்ரீ ராம் ஜெய்ராம் ஜெய்ஸ்ரீ ராம்

"ராமனின் புகழ்பாடும் ராமா காவியம்தான் 'ராமாயணம்'. பல ஆயிரம் பாடல்களால் ஆன இந்த காவியத்தை படிப்பது என்பது அனைவராலும் இயலாத காரியம். அதே நேரம் இதை முழுவதுமாக படித்தால், மிகப்பெரிய புண்ணியம் நம்மை வந்தடையும் என்பது ஆன்மிக சான்றோர்களின் வாக்கு.

ஆனால் இன்றைய அவசர காலத்தில் அதை பொறுமையாக அமர்ந்து படிக்க எவருக்கும் நேரம் இல்லை. இப்படி ஒரு காலம் வரும் என்பதை முன்கூட்டியே அறிந்ததாலோ என்னவோ, காஞ்சி மகா பெரியவர் என்று அழைக்கப்படும் சந்திரசேகர சரஸ்வதி சுவாமிகள், அந்த ராமாயண காவியத்தை, 10 வரிகளைக் கொண்ட பாடலாக சில விநாடிகளில் படித்து முடிக்கும் வகையில் இந்த உலகத்திற்கு வழங்கியுள்ளார்.

'ஸ்ரீ ராமம் ரகுகுல திலகம்
சிவதனு சாக்ரிஹத சீதா
ஹஸ்தகரம் அங்குல்யா பரண
சோபிதம்
சூடாமணி தர்சனகரம்
ஆஞ்சநேய மாஸ்ரயம்
வைதேஹி மனோகரம்
வானர சைன்ய சேவிதம்
சர்வமங்கள கார்யானுகூலம்
சததம் ஸ்ரீ ராமச்சந்திர
பாலயமாம்
ஸ்ரீராம் ஜெய்ராம் ஜெய்ஸ்ரீராம்'

இந்த பாடலை தினமும் எத்தனை முறை வேண்டுமானாலும் பாராயணம் செய்யலாம். ஒவ்வொரு முறை இந்த

பாடலை வாசிக்கும்போதும், ஒரு முறை ராமாயணத்தை வாசித்து முடித்த பெரும் புண்ணியம் நமக்குக் கிடைக்கப்பெறும் என்று சந்திரசேகர சரஸ்வதி சுவாமிகள் கூறியிருக்கிறார்.



## பழனி முருகன் கோவிலில் பங்குனி உத்திர திருவிழா கொடியேற்றத்துடன் தொடங்கியது

அறுபடை வீடுகளில் 3ம் படை வீடான பழனி முருகன் கோவிலில் தைப்பூசம், பங்குனி உத்திரம் உள்ளிட்ட திருவிழாக்கள் வெகு விமரிசையாக கொண்டாடப்படுகிறது. தைப்பூச திருவிழாவில் பாதயாத்திரையாகவும், பங்குனி உத்திர திருவிழாவில் தீர்த்தக்காவடி எடுத்தும் பக்தர்கள் பழனிக்கு வருவது சிறப்பு அம்சமாகும். பழனி முருகப்பெருமான் சிலை நவபாஷாணத்தால் ஆனது. எனவே கோடைகாலமான பங்குனி, சித்திரை மாதங்களில் முருகப்பெருமானை குளிர்விக்கும் பொருட்டு, காவிரி ஆற்றில் இருந்து தீர்த்தக்காவடி எடுத்து பக்தர்கள் பழனியாண்டவருக்கு அபிஷேகம் செய்து வழிபடுவார்கள்.

இந்த ஆண்டுக்கான பங்குனி உத்திர திருவிழா, பழனி உபகோவிலான திரு ஆவினன்குடி கோவிலில் கொடியேற்றத்துடன் தொடங்கியது. இதையொட்டி நேற்று இரவு கிராம சாந்தி, வாஸ்து சாந்தி பூஜை, அஸ்திரதேவர் உலா ஆகிய நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

இன்று காலை திருஆவினன்குடி கோவிலில் விநாயகர் பூஜை, புண்ணியாக வாஜனம் நடந்தது. பின்னர் சேவல், மயில் படங்கள் பொறிக்கப்பட்ட கொடிப்படம் கொடிமரம் முன்பு வைக்கப்பட்டு சிறப்பு பூஜை நடந்தது. மேலும் முத்துக்குமாரசுவாமி, வள்ளி-



தெய்வானைக்கு பால், பழம், பன்னீர், சந்தனம், பஞ்சாமிர்தம் என 16 வகை பொருட்களால் அபிஷேகம், சிறப்பு அலங்காரம் நடைபெற்றது. தொடர்ந்து முத்துக்குமாரசுவாமி, வள்ளி-தெய்வானையுடன் சப்பரத்தில் எழுந்தருளினார்.

அதையடுத்து அஸ்திரதேவர், விநாயகர் சிலை முன்பு மயூரயாகம், வாத்திய பூஜைகள் நடைபெற்றது. பின்னர் காலை 9.30 மணிக்கு வேதமந்திரங்கள் முழங்க கொடிமரத்தில் கொடியேற்றப்பட்டது. அப்போது அங்கு திரண்டிருந்த பக்தர்கள் வெற்றிவேல் முருகனுக்கு அரோகரா, வீரவேல் முருகனுக்கு அரோகரா என சரண கோஷம் எழுப்பினர். பின்னர் ஓதுவார்கள் திருமுறை பாடியதை அடுத்து கொடிமரம், முத்துக்குமாரசுவாமி, வள்ளி-தெய்வானைக்கு தீபாராதனை நடைபெற்றது.

திருவிழாவை முன்னிட்டு பழனி முருகன் கோவிலில் உச்சிக்கால பூஜையில் மூலவருக்கு 16 வகை அபிஷேகம், அலங்காரம் நடைபெற்றது. பின்னர் மூலவர் சன்னதியில் உள்ள விநாயகருக்கு காப்புக்கட்டு நடந்தது. அதைத்தொடர்ந்து சண்முகர், உற்சவர், துவார பாலகர்கள், மயில்வாகனம் மற்றும் பெரியநாயகி அம்மன் கோவிலில் சோமாஸ்கந்தர், சிவன், பெரியநாயகிஅம்மன், நடராஜர், சிவகாமி அம்மன் ஆகியோருக்கு காப்புக்கட்டு நடைபெற்றது. பூஜை முறைகளை கோவில் பட்டத்து குருக்கள் அமிர்தலிங்கம், செல்வசுப்ரமணி மற்றும் குருக்கள்கள் செய்தனர்.

பழனி பங்குனி உத்திர திருவிழாவின் முக்கிய நிகழ்ச்சியான முத்துக்குமாரசுவாமி, வள்ளி-தெய்வானை திருக்கல்யாணம் வருகிற 31-ம் தேதி இரவு 7 மணிக்கு மேல் நடைபெறுகிறது.

ஏப்ரல் 1 ம் தேதி பங்குனி உத்திரம் அன்று பழனி கிரிவீதியில் தேரோட்டம் நடக்கிறது. விழா ஏற்பாடுகளை மாவட்ட நிர்வாகத்துடன் கோவில் தேவஸ்தானம் இணைந்து செய்து வருகின்றனர்.

பழனி முருகன் கோவிலில் நடைபெறும் முக்கிய விழாக்களின் போது தங்கத்தேர் புறப்பாடு நிறுத்தப்படுவது வழக்கம். அதன்படி இந்த ஆண்டு பங்குனி உத்திர விழாவையொட்டி வருகிற 30-ந்தேதி முதல் 3-ந்தேதி வரை 5 நாட்கள் தங்கத்தேர் புறப்பாடு நிறுத்தப்படுகிறது என கோவில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

## தேவி செய்த நோன்பின் மகிமை

இறைவன் அருளியதைத் திருவுளங் கொண்டுமகிழ்ந்த அம்மை, திருக்கயிலையை விட்டு நீங்கினாள். கன்னியர் எழுவரும் துணையாகச் சூழப் பூவுலகத்தே, கயிலைக்குத் தென்பால் உள்ள புட்கரம், துண்டுலி, கண்ணுவாச்சிரமம், வாரணாசி, மகாகாளம், ரேணுகாஷேத்திரம், ராமசேது, மாயூரம், திருமுதுகுன்றம் முதலான தலங்கள் பலவற்றையும் அடைந்து பரமனைத்துதித்தாள்.


பாடல் வனம் வந்தடைந்த தேவி, பாடல் நாதனைப்பரவித் துதிக்கும் முனிவர்கள், அந்தணர் கூட்டங்களோடு முதலான பறவைகளும் பரமனைப் பாடிப் பரவுவதைக்கண்டாள். எங்கெங்கும், வெண்ணீற்றொளியும், அந்தணர்வேள்வித் தீயின் ஒளியுமே கண்டாள். கெடில நதி,பெண்ணை ஆறு, பாலோடை முதலியவற்றில் நீராடிவழக்கம் போல் இறைவனைப் பூசித்து வலம் வந்தாள்.

வலம் வரும் போது இடது கண்ணும், இடது தோளும்துடித்தன. முன், கயிலையில் இறைவன் அருளியவாறுதனக்குத் தவம்புரிய ஏற்ற இடம் இதுவேயென அறிந்தாள். தேவி, உண்ணா நோன்பினை மேற்கொண்டுஉள்ளம் உருகத் தோத்திரம் செய்யத்துவங்கினாள். தனக்குத் திருவருளால் இடம் காட்டி ஆட் கொண்ட தன்மையை வியந்து போற்றினாள்.

இறைவனை உமையம்மை நாள்தோறும் நியமத்தோடு நீராடிப்பூசித்து, இறைவனுக்கு வடபால் தவம் மேற்கொண்டாள். நாள்தோறும் பூஜை புரிவதற்கு வேண்டும் பொருட்களைச்சேடியர் அமைத்துக் கொடுப்பார்கள். பாதிரி மரம்தெய்வத்தன்மை பொருந்தியது, ஆதலால் அன்னையின்பூஜைக்கு வேண்டிய பொருள்கள் எல்லாவற்றையும் தந்தது.

பலவகைப் பூக்களையும் தந்தது. தவம் புரியுங்கால், உணவின்றி பாதங்கள் நிலத்தில் பதியாமல், வாயு உருவந்தாங்கி, அருமைத்திருக்குழந்தையாம் முருகனும் தேடிக் காண இயலாதஅருவத் திருமேனியுடன் அன்னை தவம் புரிந்தாள்.

அன்னை பூஜை புரியுங்கால், யாவற்றையும் சேகரித்துக் கொண்டு முறைப்படி அபிஷேகம் செய்து, திருவொற்றாடை சாத்தி, திருநீறிட்டு, திருஆடை சாத்தி, திருமாலை, திருவாபரணங்களைச் சூட்டி மந்திரங்களால் அர்ச்சித்து, தூப தீபம் காட்டி மகா நிவேதனம் செய்துபோற்றித் துதித்து வழிபட்டு வந்தாள். பூஜை முடிந்த பின்னர், தக்கஅந்தணர்களுக்கும், அடியார்களுக்கும் அமுது ஊட்டிப் பெரு மகிழ்ச்சியுடன்பாதிரி மரத்தடியிலே அருவாய் தவம் மேற்கொண்டாள்.



# ஒரு நிமிஷம் ப்ளீஸ்...

அமெரிக்கா -- ஈரான் போர், நாளுக்கு நாள் திகிலோடு தீவிரமாகி ஒட்டு மொத்த உலகத்துக்கு-- உலக மக்களுக்கு, பதட்டத்தையும் பதை பதைப்பையும் உண்டு பண்ணியிருக்கிறது. தனி மனித வாழ்க்கையில், நம் முன்னோர்கள் வலியுறுத்திச் சொன்ன, அன்பும் அறமும் இணைந்த பண்பாட்டு நெறியைப் பின்பற்றத் தவறியதால், வந்த வினை இது. 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்று இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, உலகத்தாருக்கு உரக்கச் சொல்லியும், அதன் உன்னதமான உட்கருத்தை புரிந்து செயல்படாத இந்த உலக சமூகத்தின் அலட்சியம், சோம்பல், அகங்காரம் இன்னோரென்ன இன்னோரென்ன... எதிர்மறை குணங்களின் எதிர் விளைவுகளைத் தான், இப்போது நாம் அனுபவித்துக் கொண்டிருக்கிறோம் என்று சொன்னால், மிகையாகாது. இதைச் சரியாக தெளிந்து புரிவதற்கும், ஆழ்ந்த சமூக அக்கறை உணர்வு வேண்டும். 'யார் யாரோடு சண்டை போட்டால் நமக்கு என்ன? எங்கு குண்டு மழை பொழிந்தால் நமக்கு என்ன கவலை? ' என்று சும்மா இருந்து வேடிக்கை பார்க்கவும் முடியாத படி, நம் அன்றாட வாழ்வுக்கே ஆப்பு வைக்கும் அளவுக்கு, இந்த வளைகுடாப் போர், பெரும் பக்க விளைவுகளை உண்டு பண்ணி இருப்பது இங்கே மிகவும் கவனிக்கத் தக்கது.

'சரி...இப்ப அதுக்கு சாமானியரான நாம் என்ன செய்ய முடியும்?' என்று நீங்கள் கேட்பதும் புரிகிறது. தலைவர்கள் அளவுக்கு உயர்ந்து அதிகார போதையின் உச்சத்தில் மதி மயங்கிப் போன பெரும் புள்ளிகள் மேல், பிரபஞ்சக் கோபம் நமக்கு பொத்துக் கொண்டு வருகிறது என்பதை மறுப்பதற்கில்லை... மறைப்பதற்கில்லை. அவர்களைப் போல் உலகக் குடி மக்களாகிய நாமும் பொறுப்பற்று, எந்தவித சம்பந்தமும் இல்லை என்பதாக ஒதுங்கியும், கண்டு கொள்ளாமலும் இருக்க முடியுமா? அப்படி உணர்வற்று இருந்தால், வரலாற்றில் பெரும் பிழை செய்த குற்றத்திற்கு ஆளாகி விடுவோம் அல்லவா?

ஆகவே தான், நமது போரில்லா உலகம் பேரன்பு குழுவின் சார்பாக, தினசரி ஒரு நிமிடம் போரில்லா உலக அமைதிக்காக பிரார்த்தனை புரியுமாறு தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம். நெஞ்சம் உருகி நாம் செய்யும் பிரார்த்தனைக்கு நிச்சயம் வலிமை உண்டு.அதுவும் கூட்டுப் பிரார்த்தனையாக இருந்தால்,



அதற்கு பிரபஞ்ச ஆற்றல் கட்டாயம் உண்டு. இது அறிவியல் பூர்வமாக நிரூபிக்கப்பட்ட உண்மை. நிரந்தரமான உலக அமைதி நிலவ வேண்டும் என்று அனைவரும் ஒருமித்து, பூரண விருப்பத்துடன் ஒரு நிமிஷம், எல்லாம் வல்ல இறைவனிடம் ஆழ்ந்த பிரார்த்தனை செய்வது, அதி நெருக்கடியான இந்தக் காலகட்டத்தில் அவசியத்திலும் அவசியம் அல்லவா? செய்தித்தாள், தொலைக்காட்சி, சமூக வலை தளங்களைப் பார்த்து பார்த்து, வாய்க்கு வந்த படி போரைப் பற்றி இஷ்டத்துக்கு அரட்டை அடித்துக் கொண்டு, வெறுமனே புலம்பிக் கொண்டிருப்பதை விட, உள்ளார்ந்த மனித நேயத்துடன் மனம் உருகி, தினசரி ஒரு நிமிடம் உலக மக்கள் அனைவரும் பிரார்த்தனை புரிந்தால், அது பலத்த அதிர்வை உண்டு பண்ணும் தானே?

'பிரார்த்தனையால் போர் நின்று விடுமா' என்று கூட சிலர் கேட்கலாம். இந்த உலகில் ஏறக்குறைய 200 நாடுகள் உள்ளன. அனைத்து நாட்டுத் தலைவர்களும், நேரில் கூட வேண்டாம்...'ஆன் லைன்' மீட்டிங்கில் ஒன்று கூடி, ' இனி எக்காரணம் கொண்டும் எந்த நாடும் எந்த நாட்டோடும் போர் தொடுக்கக் கூடாது...எந்தப் பிரச்னையையும் பேச்சு வார்த்தை மூலந்தான் தீர்த்துக் கொள்ள வேண்டும் ' என்று அதிரடியான, அவசர தீர்மானத்தை நிறைவேற்றி விட்டால் போதும்... ஒட்டு மொத்த உலகத்தின் இருப்புக்கே ஆபத்து வரும் போது, இந்த மாதிரியான தீர்மானம் காலத்தின் கட்டாயம் ஆகி விடுமே...தேவை தானே, தீர்வுகளின் தாய்? ( Neceity is the mother of invention)

மேலும் நாம் மனப்பூர்வமாக செய்யும் இந்த கூட்டுப் பிரார்த்தனை, மாறுபட்ட கருத்துக்களால் பிரிந்து, திசை மாறி நிற்கும் தலைவர்களையெல்லாம், ஒன்றிணைக்கும் தருணத்தை உண்டு பண்ணி விடும். இது சத்திய சாத்தியம்.நம்பிக்கை தானே வாழ்க்கை! ஆகவே, எல்லோரும் தினசரி ஒரு நிமிடம் போரில்லா உலக அமைதிக்காக பிரார்த்தனை புரிவோம். கூடவே, 'ஒரு நிமிஷம் ப்ளீஸ்...' என்ற இந்த பிரார்த்தனை வேண்டுகோளை, *உலக அளவில் வைரல் ஆக்குவோம். If not we, who? If not now, when? நாம் இல்லாவிட்டால் வேறு யார்? இப்போது இல்லாவிட்டால் எப்போது?

**போரில்லா உலகம்-- பேரன்பு பொட்டல் புதூர்**

## வாடிப்பட்டி அருகே பாப்பம்மாள் நாச்சாரம்மாள் கோயில் கும்பாபிஷேகம்

**மதுரை, மார்ச் 27:** மதுரை மாவட்டம் வாடிப்பட்டி பஸ் நிலையம் அருகே நீரேத்தான் பாப்பம்மாள், நாச்சாரம்மாள் கோயில் கும்பாபிஷேகம் நடந்தது. முதல் நாள் மாலை 3 மணிக்கு பெரிய பூசாரி வீட்டில் இருந்து பெரிய பூசாரி அழைத்து வந்து கோவிலில் பெட்டி எடுத்து சாமியாடிகளுக்கு அருள் இறக்கப்பட்டு தாதம்பட்டி, நீரேத்தான், புதூர், ராமநாயக்கன்பட்டி ஆகிய பகுதிகளில் வீதி உலா வந்து கோயிலை அடைதல். மாலை 6 மணி முதல் 7 மணி நேரம் வரை விக்னேஸ்வர பூஜை இரண்டாம் நாள் காலை 9 மணி முதல் 12.15 ண் மணி வரையிலும் மாலை 5.30 மணி முதல் 8.30 மணிவரை பல்வேறு பூஜைகள் செய்து முதல் கால யாகசாலை பூஜை நிறைவு செய்யப்பட்டது.

மூன்றாம் நாள் காலை 8.30 மணி முதல் 11மணி வரை இரண்டாம் கால யாக பூஜையும் மாலை 5.30 மணி முதல் 8 மணி வரை மூன்றாம் கால யாக பூஜையும் நடந்தது. நான்காம் நாள் காலை 7 மணிக்கு



நான்காம் கால யாக பூஜை செய்யப்பட்டது. இந்த யாகசாலை பூஜையில் தேவார திருமுறை பாராயணம் பாடப்பட்டது. 9 மணிக்கு மகாபூர்ணாஹுதி, 9.15 கலசங்களுடன் புறப்பாடு நடந்தது. .9.45 மணிக்கு காசி இராமேஸ்வரம் அழகர் கோயில் பாபநாசம் உள்ளிட்ட பல்வேறு புண்ணிய ஸ்தலங்களில் இருந்து எடுத்து வரப்பட்ட புனிதநீர் ஊற்றி ராஜகோபுரம் கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. 10.10 மணிக்கு மூலாலய கும்பாபிஷேகமும், பாப்பம்மாள் நாச்சாரம்மாளுக்கு சிறப்பு மகா அபிஷேக ஆராதனை அர்ச்சனைகளும் செய்யப்பட்டது.10.30 க்கு சந்தை வளாகத்தில் அன்னதானம் வழங்கப்பட்டது. இதன் ஏற்பாடுகளை கோயில் திருப்பணி குழுவினர் செய்தனர்.

## வசந்த நவராத்திரி 7-ஆம் நாள் உற்சவம்



**திருவண்ணாமலை, மார்ச் 27 :** திருவண்ணாமலை மாவட்டம் கீழ்பென்னாத்தூர் ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயிலில் வசந்த நவராத்திரி உற்சவம் 7-ஆம் நாள்(சேம விருத்தி) ஸ்ரீ மீனாட்சி அம்மனுக்கு சிறப்பு அபிஷேகங்கள், சிறப்பு பூஜை, ஆண்டாள் அலங்காரத்தில், சாமந்திப்பூ மாலைகளால் அலங்கரித்து, வேத மந்திரங்கள் ஒலிக்க, பிரசாதம், நெய்வேத்தியங்களுடன் மகா தீபாராதனையும் நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் வசந்த நவராத்திரி உற்சவத்தில் ஏராளமான பக்தர்கள் கலந்துகொண்டு மீனாட்சி அம்மனை வேண்டி அருள் பெற்றனர். அனைவருக்கும் பிரசாதங்களும் வழங்கப்பட்டது.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## வட்டாட்சியர் அலுவலகத்தில் வாக்குப்பதிவு இயந்திரம் ஆய்வு



**திருவண்ணாமலை மார்ச் 27** தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் 2026 நடைபெறவுள்ளதை முன்னிட்டு திருவண்ணாமலை வட்டாட்சியர் அலுவலகத்தில் உள்ள வாக்குப்பதிவு இயந்திரம் பாதுகாப்பு அறையை தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் உயர்திரு. க. தர்ப்பகராஜ் இ. ஆ. ப. அவர்கள் வாக்குப்பதிவு இயந்திரம் பாதுகாப்பு அறையை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## ஸ்ரீ வள்ளி, ஸ்ரீ தேவசேனா சமேத ஸ்ரீ பால சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் மஹா கும்பாபிஷேக விழா



**திருவண்ணாமலை, மார்ச் 27:** திருவண்ணாமலை மாவட்டம் சோமாசிபாடி ஸ்ரீ வள்ளி ஸ்ரீ தேவசேனா சமேத ஸ்ரீபாலசுப்ரமணியசுவாமி திருக்கோயிலில் ஜிர்னோத்தாரண அஷ்டபந்தன, ரஜதபந்தன, மஹா கும்பாபிஷேகம் ஜகத்குரு ஸ்ரீசந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகள், ஜகத்குரு ஸ்ரீஜெயந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் அவர்களின் அனுஹிரகத்துடனும் ஸ்ரீகாஞ்சி காமகோடி மடம் 70-வது பீடம் ஜகத்குரு ஸ்ரீசங்கர விஜயேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகள் அவர்களின் பரிபூரண அனுகிரஹத்துடனும் ஸ்ரீ ஸ்ரீ ஸத்ய சந்திரசேகரேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் அவர்களின் பரம அனுக்கிரஹத்துடன் நடைபெற்றது.

20. 3.2026 முதல் வெள்ளிக்கிழமை முதல் கிராம தேவதை வழிபாடு, பிரவேச பலி,வாஸ்து சாந்தி, விசேஷஸந்தி, பூர்ணாஹீதி, விசேஷ திரவியாஹீதி, யாக கால பூஜைகள் 25.3. 2026 புதன்கிழமை காலை 7 மணிக்கு விசேஷ ஸந்தி, யாக பூஜை, விசேஷ திரவியாஹீதி பட்டு வஸ்திர சமர்ப்பணம், பூர்ணாஹீதி, யாத்திராதான ஸங்கல்பம், தீபாராதனை, கடம் புறப்பாடும் நடைபெற்றது.

காலை 9:00 மணிக்கு மேல் 11 மணிக்குள் ரிஷப லக்னத்தில் மஹா கும்பாபிஷேகம் சிவாச்சாரியார்கள் கலசத்திற்கு புனித நீரை ஊற்றி கும்பாபிஷேகம் நடத்தி வைத்தார்கள். பக்தர்கள் அனைவருக்கும் கலச புனித நீர் தெளிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து தீர்த்த பிரசாதமும், அன்னதானமும் வழங்கப்பட்டது. பகல் 3:00 மணிக்கு சுவாமிக்கு மகா அபிஷேகம், வண்ணமலர் மாலைகளால் அலங்கரித்து, மகா தீபாராதனையும் நடைபெற்றது.

மாலை 7 :00 மணி அளவில் ஸ்ரீ வள்ளி தேவசேனா சமேத பாலசுப்பிரமணிய சுவாமிக்கு திருக்கல்யாண உற்சவம் வெகு சிறப்பாக நடைபெற்றது. இரவு 9:00 மணிக்கு மங்கள மேள வாத்தியங்களுடன், வானவேடிக்கையுடன் சுவாமி திருவீதி உலா நடைபெற்றது. மழலைச் செல்வங்கள் பரதநாட்டியம், நடன நிகழ்ச்சியும் நடைபெற்றது.

ஏராளமான பக்தர்கள் மஹா கும்பாபிஷேக விழாவில் கலந்து கொண்டு அரோகரா அரோகரா என்று முழுக்கமிட்டு முருகப் பெருமானை வேண்டி அருள் பெற்றனர்.ஆலய அர்ச்சகர்கள், கிராம பொதுமக்கள் சோமாசிப்பாடி. மற்றும் ஆலயத்திற்கு கீழ்பென்னாத்துரை சேர்ந்த A.பச்சையப்பன் அவர்கள் முருகர், ஸ்ரீ வள்ளி, ஸ்ரீ தேவசேனைக்கும் அழகான மூன்று மயில் இறகு மாலைகள் வழங்கினார். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## கஜேந்திர மோட்சம் கருட சேவை




மதுரை ஸ்ரீ மந்திரகோபால் ஸன்னிதி பங்குனி ரோகிணி கஜேந்திர மோட்சம் கருட சேவை புரப்பாடு.

## ஸ்ரீ இராமானுஜர் திருமஞ்சனம்



அ/மி ஆதிமூலப்பெருமாள் திருக்கோயில், வடபழனி, சென்னை 600026 26-03-2026 வியாழன் பங்குனி-திருவாதிரை காலை 7.15 மணிக்கு ஸ்ரீ இராமானுஜர் திருமஞ்சனம், திருப்பாவை & இராமானுஜ நூற்றந்தாதி சேவை சாற்றுமறை தீர்த்த பிரசாத விநியோகம்.

## திருக்காப்பு நிறைவு



இளஞ்சாவூர் ஸ்ரீமுத்து மாரியம்மன் திருக்கோவிலில் நடைபெற்று வரும் பங்குனி பொங்கல் பெருந்திருவிழாவின் திருக்காப்பு நேற்றுடன் நிறைவு பெற்றது.

## ஸ்ரீராமநவமியை முன்னிட்டு திருப்பதி திருமலை தேவஸ்தானத்தில் கஜா குழுவினர் அன்னதானம்



**திருப்பதி மார்ச்27:** ஸ்ரீராமநாமியை முன்னிட்டு திருப்பதி திருமலையில் ஆலயத்தின் முன்பு கஜா குழு சார்பாக கீழ்பென்னாத்தூர் அன்னதான பொறுப்பாளர் கஜா குழு நண்பர் திரு. K. N.பாலசுப்பிரமணியன் ஹேமாவதி அவர்கள் தம்பதி சமேதமாக நேரில் அவர்களுடைய திருக்கரங்களால் கஜா குழு சார்பாக அன்னபிரசாதம் அங்கு இருந்த பக்தர்கள் அனைவருக்கும் வழங்கினார்கள்.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## நம் வாசவி அம்மன் வசந்த நவராத்திரி விழாவில் 7-ஆம் நாள் உற்சவத்தில்



**சென்னை, மார்ச்27:** திருவள்ளூர் ஸ்ரீவாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் திருக்கோயிலில் பராபவ வருஷ வசந்த நவராத்திரியை முன்னிட்டு நவராத்திரி 7-ஆம் நாள் மூலவர் சேஷ வாகனத்தில் நம் வாசவி அம்மன் தங்க கவச அலங்காரமும், உற்சவர் வைஷ்ணவி தேவி அலங்காரமும் உற்சவருக்கும், மூலவருக்கும், வண்ண மலர் மாலைகளால் அலங்கரித்து, பிரசாதம், நெய்வேத்தியங்களுடன், மகா தீபாராதனையும் நடைபெற்றது. ஆர்ய வைஸ்ய ஆண்கள், பெண்கள் அனைவரும் பூஜையில் கலந்து கொண்டு வாசவி அம்மனை வேண்டி அருள் பெற்றனர். அனைவருக்கும் பிரசாதங்களும் வழங்கப்பட்டது.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## ஆங்குணம் ஊராட்சியில் மாற்றுக் கட்சியிலிருந்து திமுகவில் இணையும் நிகழ்ச்சி



திருவண்ணாமலை மாவட்டம் கீழ்பென்னாத்தூர் ஒன்றியம் ஆங்குணம் ஊராட்சியை சேர்ந்த 25-க்கும் மேற்பட்ட மாற்றுக் கட்சியினர் மாண்புமிகு துணை சபாநாயகர் கு.பிச்சாண்டி அவர்களின் தலைமையில் திமுகவில் இணைந்து கொண்டார்கள். உடன் ஆரஞ்சி ஆறுமுகம் அவர்கள், கழகத் தோழர்கள் அனைவரும் கலந்து கொண்டார்கள். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் கட்சி பிரமுகர்களுடன் ஆலோசனை கூட்டம்



**திருவண்ணாமலை மார்ச் 27:** மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் 2026 நடைபெறவுள்ளதை முன்னிட்டு வேட்பு மனு தாக்கல் குறித்து அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரமுகர்களுடன் திருவண்ணாமலை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் உயர்திரு. க. தர்ப்பகராஜ் இ. ஆ. ப. அவர்கள் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை




## காட்பாடி கிளித்தான்பட்டறை ஸ்ரீ ராகவேந்திர சுவாமிகள் மலர் அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள்பாலிப்பு!



**வேலூர்,மார்ச் 27:** வேலூர் மாவட்டம், காட்பாடி குடியாத்தம் செல்லும் சாலையில் கிளித்தான்பட்டறையில் ஸ்ரீ ராகவேந்திர ஸ்வாமிகள் ஆலயம் அமைந்துள்ளது. இந்த ஆலயத்தை ஸ்தாபகர் க. மோதிலால் சுவாமி நிர்வகித்து இதை பராமரித்து பல்வேறு பூஜைகளை இடைவிடாது நடத்தி வருகிறார்.

இந்த ஸ்ரீ ராகவேந்திரர் கோவிலில் மகா அன்னதான சேவை,ஸ்ரீ சத்திய நாராயண சுவாமி பூஜை, பல்லக்கு சேவை, ஊஞ்சல் சேவை, திருத்தேர் (ரத) உற்சவ சேவை, சர்வ சேவை, அனைத்து அபிஷேகங்கள், கனகாபிஷேகம் சேவா, வெள்ளிக்கவச சேவா, பஞ்சாமிர்த அபிஷேகம் உள்ளிட்ட பல்வேறு சிறப்பு பூஜைகள் தொடர்ந்து நடத்தி வரப்படுகிறது.

இதனை ஸ்ரீ க. மோதிலால் சுவாமி தொடர்ச்சியாக நடத்தி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. வியாழக்கிழமையை முன்னிட்டு (குரு வாரம்)அதிகாலை 5 மணிக்கு நடை திறக்கப்பட்டு சிறப்பு விசேஷ அலங்கார பூஜைகள் நடந்தது.

இதைத் தொடர்ந்து இடைவிடாது நண்பகல் 12 மணி வரை கோவில் நடை திறந்திருந்தது. பக்தர்கள் ஸ்ரீ ராகவேந்திரரை தரிசனம் செய்தனர்.

இதை தொடர்ந்து மாலை 4 மணிக்கு மீண்டும் நடை திறக்கப்பட்டு பக்தர்கள் இடைவிடாது இரவு 9 மணி வரை தரிசனம் செய்தனர். இந்த சிறப்பு வழிபாட்டில் கலந்து கொண்ட பக்தர்களுக்கு பிரசாதங்கள் விநியோகம் செய்யப்பட்டது. பூஜைக்கான அனைத்து ஏற்பாடுகளையும் ஸ்தாபகர் க. மோதிலால் சுவாமி விமரிசையாக செய்திருந்தார்.

# சுற்றுலா: குளிரூட்டும் கானகத்தின் கொடை கொடைக்கானல்!

‘மலைகளின் இளவரசி’ என்று அழைக்கப்படும் கொடைக்கானலுக்கு நானும் என் குடும்பத்தாரும் காரில் சுற்றுலா சென்றோம். கானகத்தின் கொடை அல்லது காடுகளின் பரிசு என்பது கொடைக்கானல் என்பதின் தமிழ் அர்த்தம் ஆகும்!



கொடைக்கானலுக்கு 7 கி.மீ. முன்பே வெள்ளி நீர்வீழ்ச்சி நம்மை முதலில் அன்புடன் வரவேற்கிறது. அப்போது நீர் ஆர்ப்பரித்து கொட்டவில்லையென்றாலும் வருகின்ற நீரைப் பார்க்கும் போதே அழகோ அழகு. கொடைக்கானலில் கொரோனா டயம் என்பதால் பிரையண்ட் பூங்கா, கோக்கர்ஸ் வாக், பில்லர் ராக், பசுமை பள்ளத்தாக்கு, குணா குகை செண்பகனூர் அருங்காட்சியகம் போன்ற சில இடங்களை பார்க்க அனுமதியில்லை. இருந்தபோதும் மனம் தளராமல் அனுமதியுள்ள சில இடங்களை மட்டும் பார்க்கப் புறப்பட்டோம்.

### குறிஞ்சி ஆண்டவர் கோவில்

முதலாவதாக 4 கி.மீ. தூரத்திலுள்ள குறிஞ்சி ஆண்டவர் கோவிலை தரிசிக்கச் சென்றோம். புதுமை மாறாத மிக அழகான, படு சுத்தமான கோவில்! 1936 ஆம் ஆண்டில் லீலாவதி என்ற ஐரோப்பிய அம்மையாரால் கட்டப்பட்ட கோவில். கோவிலைச் சுற்றி 12 ஆண்டுகளுக்கு ஒரு முறையே பூக்கும் குறிஞ்சி மலர்கள் நிறைந்த பகுதியாகக் காணப்படுகிறது. சாமியை வெளியே நின்றுதான் கும்பிட முடிந்தது. குறிஞ்சி ஆண்டவரை வேண்டினால் நினைத்தக் காரியம் நடக்கும் என்கிறார்கள். அங்கிருந்தபடியே கிழக்கு திசையில் பார்த்தால் பழனி முருகன் கோவில் தெரிகிறது, பார்க்க அற்புதமாக இருக்கிறது.




### பூம்பாறை

இரண்டாம் நாள் காலை கொடைக்கானலிலிருந்து 18 கி.மீ. தொலைவிலுள்ள பூம்பாறை என்ற சுற்றுலாத் தலத்திற்குச் சென்றோம். போகும் வழியில் எங்கு பார்த்தாலும் கண்ணுக்கு எட்டிய தூரம் வரை பசுமை மாறா மலைக்காடுகள். இயற்கை தன் அழகையெல்லாம் வாரி வழங்கியிருக்கிறது. பார்க்கப் பார்க்க கண்கொள்ளாக் காட்சி. பூம்பாறையிலுள்ள குழந்தை வேலப்பர் கோவிலைப் பார்க்க வெளியூரிலிருந்து நிறைய பேர் வந்திருந்தனர். பல குடும்பங்களுக்கு அது குல தெய்வமாம்.

அங்கே விற்கப்படும் மலைப்பூண்டு மிகவும் பேமஸ்! வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன். நாங்கள் 2 கிலோ பூண்டு வாங்கினோம். கிலோ ரூபாய் 200-லிருந்து 250 ரூபாய் வரை விற்கப்படுகிறது, பேரம் பேச முடியாது.

### பள்ளங்கி

நாங்கள் கண்டு ரசித்த அடுத்த இடம் பள்ளங்கி. கொடைக்கானலிலிருந்து சுமார் 7 கி.மீ. தூரம்தான். போகும் வழியெல்லாம் நெடு நெடுவென உயர்ந்த மரங்கள் இருந்தன. ‘மூன்றாம் பிறை’ படத்தில் கமலஹாசன் பேசும் வசனம்போல் வானத்தை துடைக்கும் ஒட்டடை குச்சிகளாக மரங்கள் காட்சியளிக்கின்றன. அங்கேயிருந்து கீழேப் பார்த்தால் தலை சுற்ற வைக்கும் படுபயங்கரமான பள்ளத்தாக்குகளும் உள்ளன. சினிமா ஷூட்டிங் எடுப்பதற்கு சரியான லொகேஷன்!

காலை வேளை என்பதால் சில்லென குளிர்ந்த காற்று நம்மேனியைத் தழுவிச் சென்றது. அந்த பரவச உணர்வை நேரில் உணர்ந்தவர்களுக்குத்தான் தெரியும்.

பள்ளங்கி போன்ற அருமையான, அழகான சுற்றுலாத் தலத்தை சாதாரண நாட்களில், கொரோனா கட்டுப்பாடு இல்லாத நேரத்தில் காணச் செல்பவர்கள் எண்ணிக்கை குறைவுதான்! எங்களுக்கு கொடைக்கானலில் சில இடங்களை மட்டுமே பார்க்க முடியாத காரணத்தால், இங்கே செல்லும் நிலை ஏற்பட்டது. அதுவே அரியதொரு நல்வாய்ப்பாகவும் அமைந்தது. அதோடு எங்களை மிகவும் கவர்ந்த இடமாகவும் பள்ளங்கி அமைந்துவிட்டது.

## வேலைவாய்ப்பு கார்னர்

### என்எல்சி-ல் சுகாதார ஆய்வாளர் வேலை வேண்டுமா?

கடலூர் மாவட்டம், நெய்வேலியில் செயல்பட்டு வரும் ஒரு முன்னணி ‘நவரத்னா’ பொதுத்துறை நிறுவனமான நெய்வேலி பழுப்பு நிலக்கரி(என்எல்சி) நிறுவனத்தில் நிரப்பப்பட உள்ள 16 சுகாதார ஆய்வாளர் பணியிடங்களுக்கான வேலைவாய்ப்பு அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

3 ஆண்டுகள் ஒப்பந்த அடிப்படையில் நிரப்பப்பட உள்ள இந்த பணியிடங்களுக்கு தகுதியானவர்களிடம் இருந்து வரும் ஏப்ரல் 2 ஆம் தேதிக்குள் ஆன்லைன் மூலம் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

அறிவிப்பு எண்.02/ 2026

பணி: Health Inspector

காலியிடங்கள்: 16

சம்பளம்: மாதம் ரூ.38,000

தகுதி: பிளஸ் 2 தேர்ச்சியுடன் Sanitary Inspector, Health Inspector போன்ற ஏதாவதொன்றில் டிப்ளமோ முடித்திருப்பதுடன் ஒரு ஆண்டு பணி அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

வயதுவரம்பு: 1.2.2026 தேதியின்படி 30-க்குள் இருக்க வேண்டும். உச்ச வயதுவரம்பில் எஸ்சி, எஸ்டி பிரிவினருக்கு 5 ஆண்டுகளும், ஓபிசி பிரிவினருக்கு 3 ஆண்டுகளும் சலுகைகள் வழங்கப்படும்.

தேர்வு செய்யப்படும் முறை: எழுத்துத் தேர்வு, நேர்முகத் தேர்வு மற்றும் சான்றிதழ்கள் சரிபார்ப்பு அடிப்படையில் தகுதியானவர்கள் தேர்வு செய்யப்படுவர்.

விண்ணப்பக் கட்டணம்: பொது, ஓபிசி, இடபுள்யுஎஸ் பிரிவினருக்கு ரூ.450, எஸ்சி, எஸ்டி, முன்னாள் ரானுவத்தினர், மாற்றுத்திறனாளி பிரிவினர்களுக்கு ரூ.200. கட்டணத்தை ஆன்லைன் மூலம் செலுத்த வேண்டும்.

விண்ணப்பிக்கும் முறை: http://www.nlcindia.in என்ற இணையதளத்தின் மூலம் ஆன்லைனில் விண்ணப்பிக்க வேண்டும்.

ஆன்லைனில் விண்ணப்பிப்பதற்கான கடைசி நாள்: 2.4.2026

## விஜய் படங்களுக்கு தடை கோரிய காங்கிரஸ் கட்சி




**மதுரை, மார்ச் 27:**

காங்கிரஸ் மதுரை தெற்குத்தொகுதி பொறுப்பாளர் செய்யது பாபு தலைமையிலான கட்சியினர் நேற்று மதுரை மாவட்ட தேர்தல் அலுவலரிடம் தமிழக தலைமை தேர்தல் அதிகாரிக்கு அனுப்பக்கோரி அளித்த கடிதம்: தேர்தலில் நடிகர் விஜய்யின் தவெக சார்பில் வேட்பாளர்கள் போட்டியிட உள்ளனர்.

தற்போது தேர்தல் நடத்தை விதிகள் அமலில் இருப்பதால், நடிகர் விஜய் நடித்த ஜனநாயகன் பட டிரைலர்களை தியேட்டர்களிலும், டிவியிலும் வெளியிட தடை விதிக்க வேண்டும்.

அவர் நடித்த படங்களை திரையரங்கம், டிவிக்களில் திரையிட தடை விதிக்க வேண்டும்.

இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

## ராமேசுவரம் மீனவர்கள் 7 பேர் இலங்கைக் கடற்படையினரால் கைது!

**ராமேசுவரம், மார்ச் 27:**

நெடுந்தீவு அருகே புதன்கிழமை நள்ளிரவு மீன்பிடித்துக் கொண்டிருந்த ராமேசுவரம் மீனவர்கள் 7 பேரை இலங்கைக் கடற்படையினர் கைது செய்தனர். இரண்டு விசைப் படகு பறிமுதல் செய்யப்பட்டது.

ராமநாதபுரம் மாவட்டம், ராமேசுவரம் மீன்பிடி துறைமுகத்திலிருந்து இரண்டு விசைப் படகுகளில் 7 மீனவர்கள் மீன்வளத் துறை அனுமதி பெற்று புதன்கிழமை கடலுக்குள் மீன்பிடிக்கச் சென்றனர்.

இவர்கள் புதன்கிழமை நள்ளிரவு நெடுந்தீவு அருகே மீன்பிடித்துக் கொண்டிருந்த போது ரோந்துப் படகுகளில் வந்த இலங்கைக் கடற்படையினர் எல்லை தாண்டி மீன்பிடித்ததாக ஏழு பேரையும் கைது செய்தனர். இரண்டு விசைப் படகுகளையும் பறிமுதல் செய்தனர்.



இதனிடையே, விசைப் படகுடன் ஏழு மீனவர்களையும் காங்கேசன் கடற்படை முகாமுக்கு இலங்கைக் கடற்படையினர் கொண்டு சென்று, அந்த நாட்டு மீன்வளத்துறை அதிகாரிகளிடம் வியாழக்கிழமை ஒப்படைத்தனர்.

எல்லை தாண்டி மீன்பிடித்ததாகவும், தடை செய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்தியதாகவும் 2 மீனவர்கள் மீது வழக்குப் பதிந்து, நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைக்கப்பட உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது

இலங்கை கடற்படையினர் கைது நடவடிக்கையால் மீனவர்கள் மிகுந்த கவலை அடைந்துள்ளனர்.

இலங்கைக்கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 7 மீனவர்களையும், பறிமுதல் செய்யப்பட்ட விசைப் படகையும் உடனடியாக விடுவிக்க மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## தமிழ் எழுத்தாளர்களுக்கு புதிய விருது, ரூ.1 கோடி பரிசு: எழுத்தாளர் ஜெயமோகன் அறிவிப்பு

**சென்னை, மார்ச் 27:**

“உலக இலக்கியத்துக்கான வாழும் தமிழ் விருதை’ அறிமுகப்படுத்தும் விழா புது தில்லியில் உள்ள நட்சத்திர விடுதியில் புதன்கிழமை நடைபெற்றது. விழாவில் எழுத்தாளர் ஜெயமோகன் பேசியதாவது:

நமது இலக்கிய மதிப்புகளை தேசிய மற்றும் உலக அரங்கில் நிலைநிறுத்தும் பொருட்டு, வாழும் தமிழ் அறக்கட்டளையாகிய நாங்கள், “உலக இலக்கியத்துக்கான வாழும் தமிழ் விருது’ என்ற விருதை நிறுவுகிறோம். இந்த விருதின் மூலம் அழகியலை முன்னிறுத்தும் ஓர் இலக்கியப் பார்வையை நாங்கள் வெளிப்படுத்துவோம். அதை சர்வதேச மற்றும் தேசிய அளவிலான எழுத்தாளர்களுக்கு வழங்க உத்தேசித்துள்ளோம்.

இந்த விருதின் மூலம், இலக்கியத்திற்கான சில மதிப்பீட்டு அளவுகோல்களை நிறுவ நாங்கள் முயல்கிறோம். எளிமையான அரசியல் நிலைப்பாடுகளை வெளிப்படுத்துவதே சிறந்த இலக்கியம் என்று நம்பப்படும் ஒரு சூழலில் நாம் வாழ்கிறோம். இலக்கிய உணர்வு இல்லாதவர்கள், பல்வேறு அமைப்புகள் மூலம் இந்தக் கண்ணோட்டத்தை நிறுவனமயமாக்கி, அதன்மூலம் இலக்கியத் துறையில் தங்கள் அதிகாரத்தை நிலைநாட்டுகின்றனர். எழுத்தாளர்களாகவும் வாசகர்களாகவும், இந்தப் போக்கிற்கு எதிராகக் குரல் எழுப்ப நாங்கள் விரும்புகிறோம்.

சுமார் 6 நாடுகளைச் சேர்ந்த தமிழ் இலக்கிய வாசகர்களின் ஆதரவுடன் இந்த விருதை நாங்கள் நிறுவுகிறோம். இந்த விருதுக்கான நடுவர் குழுவில் தமிழ் வாசகர்களும் எழுத்தாளர்களும் இடம்பெறுவார்கள்.

இந்திய மற்றும் உலக அளவில் படைப்பிலக்கியத் துறையின் முன்னணிப் படைப்பாளிகளை அடையாளம் கண்டு, முன்னிலைப்படுத்தி, கௌரவிப்பதே இந்த விருதின் நோக்கம். இது ஏதோ ஒரு தனி அமைப்பால் வழங்கப்படும் விருது மட்டுமல்ல; இதன் பின்னணியில், நூற்றாண்டு கால பாரம்பரியம் கொண்ட ஓர் அறிவுசார் இயக்கம் உள்ளது.

புதுமைப்பித்தன், க.நா. சுப்ரமணியம், சுந்தர ராமசாமி, வெங்கட் சாமிநாதன், எம். வேதசகாயகுமார் போன்ற ஆளுமைகள் வழியாகத் தொடரும் ஒரு செழுமையான நவீன இலக்கியப் பாரம்பரியம் தமிழுக்கு உண்டு. அந்த அறிவுசார் சூழலிலிருந்தே இவ்விருது உருப்பெற்று வருகிறது. மேலும், ஏப்ரல் 3, 4 தேதிகளில் அமெரிக்காவின் நியூயார்க் நகரில் “வாழும் தமிழ் இலக்கிய விழா’ நடைபெறும் என்றார் ஜெயமோகன்.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com
இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புபவர்கள்.
"welcome Tamilnadu” என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழ்உள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்
94452 65389

## மெரினா கடற்கரையில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றக்கோரிய வழக்கு வாபஸ் பெறப்பட்டதால் தள்ளுபடி

**சென்னை, மார்ச் 27:**

சென்னை, மெரினா கடற்கரையின் கலங்கரை விளக்கம் முதல் பட்டினப்பாக்கம் வரை உள்ள லூப் சாலை ஆக்கிரமிப்புகளை அகற்றும்படி சென்னை உயர்நீதிமன்றம் கடந்த 2023 மற்றும் 2025-ம் ஆண்டுகளில் உத்தரவிட்டது.

இருப்பினும் அப்பகுதியில் ஆக்கிரமிப்புகள் அகற்றப் படவில்லை எனக் கோரி, ஆனந்த் என்பவர் உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார்.அதில், லூப் சாலையை ஆக்கிரமித்து சாலையோரங்களில் உணவகங்கள் அனுமதியின்றி வணிக நோக்கில் நடத்தப்படுவதாகவும், இந்த ஆக்கிரமிப்புகளை அதிகாரிகள் கண்டுகொள்வதில்லை என கூறியிருந்தார்.இந்த வழக்கு தலைமை நீதிபதி எஸ்.ஏ.தர்மாதிகாரி மற்றும் நீதிபதி ஜி.அருள்முருகன் ஆகியோர் அடங்கிய அமர்வில் நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது, அப்பகுதியில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டுமென ஏற்கெனவே உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ள நிலையில் மீண்டும் எப்படி உத்தரவு பிறப்பிக்க முடியும் எனக்கேள்வி எழுப்பிய நீதிபதிகள், ஒருவேளை உயர் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை அதிகாரிகள் அமல்படுத்தவில்லை என்றால் அதை எதிர்த்து நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தானே தொடர முடியும், என்றனர். அதையடுத்து, மனுதாரர் தரப்பில், இந்த மனுவை வாபஸ் பெற்றுக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது. அதையடுத்து நீதிபதிகள் இந்த மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டனர்.

## அண்டை மாநிலங்களிலிருந்து போதைப் பொருள் கடத்தல்: எல்லையில் போலீஸ் கண்காணிப்பு தீவிரம்

**சென்னை, மார்ச் 27:**

அண்டை மாநிலங்களிலிருந்து தமிழகத்துக்கு போதைப் பொருள் கடத்தப்படுவதாக கிடைத்த தகவலையடுத்து, தமிழக எல்லையில் போலீஸார் கண்காணிப்பை தீவிரப் படுத்தியுள்ளனர்.

தமிழகத்தில் அடுத்த மாதம் 23-ம் தேதி சட்டப்பேரவை தேர்தல் வாக்குப் பதிவு ஒரே கட்டமாக நடைபெற உள்ளது. இதற்கான ஏற்பாடுகளை தேர்தல் ஆணையம் முழு வீச்சில் செய்து வருகிறது.

மேலும் காவல் துறை உட்பட அனைத்து அரசு துறைகளும் தேர்தல் ஆணையத்தின் மேற்பார்வையில் இயங்கி வருகின்றன. போலீஸாரும் தேர்தல் தொடர்பான பணிகளில் அதிகளவில் கவனம் செலுத்தி வருகின்றனர்.

இதைப் பயன்படுத்தி அண்டை மாநிலங்களான ஆந்திரா, கர்நாடகா, கேரளா உள்ளிட்ட மாநிலங்களிலிருந்து தமிழகத்துக்கு சட்ட விரோதமாக போதைப் பொருட்கள் மற்றும் கள்ளச் சாராயத்தை சிலர் கடத்தி வருவதாக குற்றச்சாட்டு எழுந்தது. இதையறிந்த போலீஸ் அதிகாரிகள் மாநில எல்லையில் கண்காணிப்பை தீவிரப்படுத்த உத்தரவிட்டனர். அதன்படி, கண்காணிப்பு மற்றும் ரோந்துப் பணி முடுக்கிவிடப்பட்டுள்ளது. மேலும் அண்டை மாநிலங்களிலிருந்து தமிழகம் வரும் ரயில், பேருந்து களையும் போலீஸார் உன்னிப்பாக கண்காணித்து வருகின்றனர். கடத்தல் தொடர்பாக தகவல் கிடைத்தால் அதுகுறித்து காவல் துறைக்கு தகவல் தெரிவிக்க பொதுமக்களை காவல் துறையினர் கேட்டுக் கொண்டுள்ளனர்.

# பிஎன்ஜி-க்கு மாற மறுத்தால் எல்பிஜி விநியோகம் நிறுத்தம்: மத்திய அரசு புதிய உத்தரவு



**புதுடெல்லி, மார்ச் 27:**

குழாய் வழி இயற்கை எரிவாயு (பிஎன்ஜி) இணைப்புக்கான வசதியுள்ள இடங்களில் வசிக்கும் நுகர்வோர், அந்த எரிவாயு பயன்பாட்டுக்கு மாற மறுத்தால், எல்பிஜி சிலிண்டர் விநியோகம் நிறுத்தப்படும் என்று மத்திய அரசு புதிய உத்தரவை வெளியிட்டுள்ளது.

மேற்காசிய போரால் எல்பிஜி-க்கு தட்டுப்பாடு நிலவும் சூழலில், பிஎன்ஜி கட்டமைப்பை விரிவாக்கவும், ஒரே வகையான எரிபொருளை சார்ந்திருப்பதைக் குறைக்கவும் மேற்கண்ட உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மேற்காசிய போரின் எதிரொலியாக, அந்தப் பிராந்தியத்தில் இருந்து இந்தியா உள்ளிட்ட பல்வேறு நாடுகளுக்கான எரிவாயு ஏற்றுமதி தடைபட்டுள்ளது. எரிபொருள் தேவையில் பெருமளவில் இறக்குமதியைச் சார்ந்துள்ள இந்தியா கடும் இடர்ப்பாட்டை எதிர்கொண்டுள்ளது. இதுபோன்ற சூழலில், உள்நாட்டு தயாரிப்பை தீவிரப்படுத்துவதுடன், பலதரப்பட்ட நாடுகளில் இருந்தும் கொள்முதல் செய்யக் கூடிய மிக வசதியான மாற்று எரிபொருளான பிஎன்ஜி-க்கு மாறும்படி வீடுகள் மற்றும் வாத்தகப் பயன்பாட்டாளர்களை மத்திய அரசு வலியுறுத்தி வருகிறது. குழாய் மூலம் இந்த எரிவாயு தொடர்ச்சியாக விநியோகிக்கப்படுவதால், எல்பிஜி சிலிண்டர்களைப் போல எரிவாயு நிரப்ப முன்பதிவு செய்ய வேண்டிய தேவையில்லை.

மத்திய அரசு முக்கிய உத்தரவு: இந்நிலையில், அத்தியாவசிய பொருள்கள் சட்டத்தின்கீழ் 'இயற்கை எரிவாயு மற்றும் பெட்ரோலியப் பொருள்கள் விநியோகம் (எரிவாயு குழாய் மற்றும் பிற வசதிகளைக் கட்டமைத்தல், செயல்படுத்துதல், விரிவாக்கம்) தொடர்பான ஆணை-2026'-ஐ மத்திய பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகம் வெளியிட்டுள்ளது. இது, பிஎன்ஜி உள்கட்டமைப்பை விரைந்து விரிவுபடுத்துதல், தேவையான ஒப்புதல்களை எளிதாக்குதல், எரிசக்தி பாதுகாப்பை வலுப்படுத்தும் வகையில் எல்பிஜி-யில் இருந்து பிஎன்ஜி-க்கு மாறுவதை ஊக்குவித்தல் ஆகிய முக்கிய இலக்குகளைக் கொண்டதாகும். பிஎன்ஜி-க்கு மாறாவிட்டால்...: மேற்கண்ட உத்தரவின்படி, தங்கள் பகுதியில் பிஎன்ஜி இணைப்புக்கான வசதி இருந்தும், அதைத் தேர்வு செய்யாவிட்டால் சம்பந்தப்பட்ட வீட்டுக்கு மூன்று மாதங்களுக்குப் பிறகு எல்பிஜி விநியோகம் நிறுத்தப்படும். அதேநேரம், தற்போதைய சூழலில் குழாய் மூலம் எரிவாயு இணைப்பை வழங்குவதில் தொழில்நுட்ப ரீதியில் சாத்தியமற்ற வீடுகளுக்கு 'தடையில்லாச் சான்றிதழுக்கு' உள்பட்டு, எல்பிஜி விநியோகத்தை தொடர்ந்து அனுமதிக்கும் பிரிவும் இடம்பெற்றுள்ளது.

பிஎன்ஜி வசதியுள்ள இடங்களில் எல்பிஜி விநியோகத்தை தக்குறைத்து, பிற இடங்களுக்கு மடைமாற்றும் நோக்கில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் வாயிலாக ஒரு நெருக்கடியான சூழல், நல்ல வாய்ப்பாக மாறியுள்ளது என்று மத்திய பெட்ரோலிய அமைச்சக செயலா நீரஜ் மிட்டல் எக்ஸ் பதிவில் குறிப்பிட்டார்.

## க்ரைம் கார்னர்

### ஆன்லைன் சூதாட்டத்தால் மருத்துவ மாணவர் தூக்குப்போட்டு தற்கொலை

**பெங்களூரு, மார்ச் 27:**

கர்நாடக மாநிலம் கலபுரகி மாவட்டம் சிஞ்சோலி தாலுகா சாலகர் பகுதியை சேர்ந்தவர் அனிஷ்கர் (வயது 21). இவர் பீதர் மாவட்டத்தில் உள்ள பிரிம்ஸ் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் இறுதி ஆண்டு எம்.பி.பி.எஸ். படித்து வந்தார். இந்தநி லையில் அனிஷ்கருக்கு ஆன்லைனில் சூதாடும் பழக்கம் இருந்ததாக தெரிகிறது. இதனால் அவர் அடிக்கடி ஆன்லைனில் சூதாட்டம் விளையாடி வந்துள்ளார். இந்த சூதாட்டத்தில் சமீபத்தில் அனிஷ்கர் ரூ.80 ஆயிரம் இழந்துள்ளார். இதிலும் திருந்தாத அனிஷ்கர் தனது நண்பர்கள் மற்றும் தெரிந்த நபர்களிடம் இருந்து கடனாக பணம் வாங்கி மீண்டும் ஆன்லைன் சூதாட்டத்தில் ஈடுபட்டு உள்ளார். இதில் கடன் வாங்கிய பணத்தையும் இழந்த அனிஷ்கர் கடனை திரும்ப கொடுக்க முடியாமல் தவித்து வந்துள்ளார். மேலும் கடன் கொடுத்தவர்கள் பணத்தை திரும்ப கேட்டு நெருக்கடி கொடுத்து உள்ளனர். இதனால் அனிஷ்கர் மனம் உடைந்து காணப்பட்டு வந்தார். இந்த நிலையில் அனிஷ்கர் தனது விடுதி அறையில் யாரும் இல்லாதபோது, மின்விசிறியில் தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டார். பின்னர் விடுதி அறைக்கு வந்த சக மாணவர்கள் அனிஷ்கர் தூக் கில் பிணமாக தொங்குவதை பார்த்து அதிர்ச்சி அடைந்தனர். மேலும் இதுகுறித்து விடுதி வார்டனுக்கும், பீதர் மாவட்ட போலீசாருக்கும் தகவல் தெரிவித்தனர். போலீசார் வழக்குப்பதிவு செய்து தீவிரமாக விசாரித்து வருகின்றனர்.

### காவல் ஆணையர் அலுவலகம் முன்பு தற்கொலைக்கு முயன்ற இளம்பெண்

**சென்னை, மார்ச் 27:**

வேப்பேரியில் உள்ள சென்னை காவல் ஆணையர் அலுவலகத்துக்கு நேற்று இளம் பெண் ஒருவர் வந்தார். அவர் மறைத்து வைத்திருந்த விஷ பாட்டிலை எடுத்து அதில் இருந்த விஷத்தை குடிக்க முயன்றார். இதைக் கண்டு அங்கு பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த போலீஸார் அதிர்ச்சி அடைந்தனர். உடனடியாக, விஷப்பாட்டிலை பறிமுதல் செய்து, அந்த பெண்ணை காப்பாற்றினர். பின்னர், போலீஸாரின் விசாரணையில், தற்கொலைக்கு முயன்றவர் விருகம்பாக்கத்தைச் சேர்ந்த விஜயலட்சுமி (38) என்பது தெரியவந்தது. காதலன் வேறு ஒரு பெண்ணை திருமணம் செய்து கொண்டு தன்னை ஏமாற்றி விட்டார். இந்த விரக்தியில் தற்கொலை செய்து கொள்ள வந்தேன். என்னை ஏமாற்றிய காதலன் மீது போலீஸார் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என போலீஸாரிடம் அவர் முறையிட்டார். இந்த விவகாரம் தொடர்பாக வேப்பேரி போலீஸார் விசாரித்து வருகின்றனர்.

### கோவாவில் பாலியல் கொடூரம்: பாஜக கவுன்சிலர் மகன் மீது 2 சிறுமிகள் புகார்

**பனாஜி, மார்ச் 27:**

கோவா மாநிலத்தின் குஷாவதி மாவட்டத்தை சேர்ந்த காக்கோராவில் மாதேகல் பகுதியை சேர்ந்தவர் சோகம் நாயக் (20), அவரின் தந்தை சுஷாந்த் நாயக், அப்பகுதி நகராட்சி பா.ஜ.க. கவுன்சிலராக உள்ளார். இந்தநிலையில் சோகம் நாயக் சில வீடியோக்களை சமுக வலைதளத்திலும் பதிவு செய்திருந்ததாக கூறப்படுகிறது. அந்த ஆபாசமான வீடியோக்களில் உள்ளூர் சிறுமிகள் இருப்பதும் தெரிய வந்தது. இந்த வீடியோ சமூக வலைதளத்தில் காட்டு தீயென பரவியது. இதனை அறிந்த பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் அதிர்ச்சியடைந்தனர். இதனை தொடர்ந்து ஆத்திரமடைந்த பொதுமக்கள் காவல் நிலையத்தை முற்றுகையிட்டனார். முதலில் சோகம் நாயக் மீது முறையான புகார் இல்லாததால், போலீசார் நாயக்கை கைது செய்யவில்லை. பாதிக்கப்பட்ட இரண்டு சிறுமிகள் புகார் அளித்தை தொடர்ந்து போலீசார் குற்றவாளி மீது போக்சோ மற்றும் சில கடுமையான சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்து உடனடியாக கைது செய்தனர். மேலும் இந்த விவகாரத்தில் பாதிக்கப்பட்ட மைனர் சிறுமிகள் போலீசாரிடம் நேரடி வாக்குமூலம் அளித்தனர். அதில் கடந்த மூன்று ஆண்டுகளாக சோகம் நாயக் தங்களை மிரட்டி வந்ததாகவும், தங்களின் ஆபாச வீடியோக்களை சமூக வலைதளங்களில் வெளிவிடுவேன் என பயமுறுத்தி பாலியல் சீண்டலில் ஈடுபட்டதாகவும் அந்த சிறுமிகள் தெரிவித்தனர்.

## விளையாட்டு செய்திகள்

### வில்வித்தையில் இந்தியாவுக்கு 2 பதக்கங்கள்




**பாங்காக், மார்ச் 27:**

ஆசிய கோப்பை உலக ரேங்கிங் வில்வித்தை ஸ்டேஜ் 1 போட்டி தாய்லாந்தின் பாங்காக் நகரில் நடைபெற்று வருகிறது. இதன் 2-வது நாளான நேற்று மகளிருக்கான காம்பவுண்ட் அணிகள் பிரிவு அரை இறுதியில் சிக்கதா தனி பார்த்தி, ராஜ் கவுர், தேஜல் சால்வே ஆகியோரை உள்ளடக்கிய இந்திய அணி 229-226 என்ற கணக்கில் தாய்லாந்து அணியை வீழ்த்தியது.

இறுதிப் போட்டியில் இந்திய மகளிர் அணியானது போட்டித் தரவரிசையில் 3-வது இடத்தில் உள்ள கஜகஸ்தான் அணியை எதிர்கொள்கிறது. ஆடவருக்கான காம்பவுண்ட் அணிகள் பிரிவு அரை இறுதியில் ரஜத் சவுகான், ரிஷப் யாதவ், உதய் கம்போஜ் ஆகியோரை உள்ளடக்கிய இந்திய அணி 233-234 என்ற கணக்கில் வியட்நாம் அணியிடம் தோல்வி அடைந்தது. இதைத் தொடர்ந்து நடைபெற்ற வெண்கலப் பதக்கத்துக்கான ஆட்டத்தில் இந்திய ஆடவர் அணி 234-232 என்ற கணக்கில் பூட்டான் அணியை வீழ்த்தியது. ஆடவருக்கான ரீகர்வ் அணிகள் பிரிவு அரை இறுதியில் தேவாங் குப்தா, சுக்செயின் சிங், ஜுயெல் சர்க்கார் ஆகியோரை உள்ளடக்கிய இந்திய அணி 5-1 என்ற கணக்கில் மலேசியாவை வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு முன்னேறியது. மகளிருக்கான ரீகர்வ் அணிகள் பிரிவில் வெண்கலப் பதக்கத்துக்கான ஆட்டத்தில் ரூமா பிஸ்வாஸ், கீர்த்தி, ரிதி போர் ஆகியோரை உள்ளடக்கிய இந்திய அணி 5-1 என்ற கணக்கில் மலேசியாவை வீழ்த்தியது.

### தொடரை வென்றது தென் ஆப்பிரிக்கா

**கிறைஸ்ட்சர்ச், மார்ச் 27:**

நியூஸிலாந்து - தென் ஆப்பிரிக்கா அணிகள் இடையிலான கடைசி மற்றும் 5-வது டி 20 கிரிக்கெட் போட்டி நேற்று கிறைஸ்ட்சர்ச்சில் நடைபெற்றது. முதலில் பேட் செய்த தென் ஆப்பிரிக்க அணி 20 ஓவர்களில் 4 விக்கெட்கள் இழப்புக்கு 187 ரன்கள் குவித்தது. அதிகபட்சமாக கானர் எஸ்டர்ஹுய்சன் 33 பந்துகளில், 6 சிக்ஸர்கள், 5 பவுண்டரிகளுடன் 75 ரன்கள் விளாசினார். ரூபின் ஹெர்மான் 39, வியான் முல்டர் 39, தியான் பாரஸ்டர் 21 ரன்கள் சேர்த்தனர். நியூஸிலாந்து அணி தரப்பில் பென் சீயர்ஸ் 2 விக்கெட்கள் கைப்பற்றினார். 188 ரன்கள் இலக்குடன் பேட் செய்த நியூஸிலாந்து அணியால் 20 ஓவர்களில் 8 விக்கெட்கள் இழப்புக்கு 154 ரன்கள் மட்டுமே எடுக்க முடிந்தது. அதிகபட்சமாக பெவன் ஜேக்கப்ஸ் 36, டிம் ராபின்சன் 25, ஜேம்ஸ் நீஷம் 24, டேன் கிளீவர் 22 ரன்கள் சேர்த்தனர். தென் ஆப்பிரிக்க அணி தரப்பில் ஜெரால்டு கோட்ஸி, வியான் முல்டர், ஒட்னீல் பார்ட்மேன் ஆகியோர் தலா 2 விக்கெட்கள் கைப்பற்றினர். 33 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற தென் ஆப்பிக்க அணி 5 ஆட்டங்கள் கொண்ட டி 20 கிரிக்கெட் தொடரை 3-2 என கைப்பற்றி கோப்பையை வென்றது.

## டிரம்ப், மேக்ரானை பின்னுக்கு தள்ளி... உலகின் புகழ் பெற்ற தலைவராக பிரதமர் மோடி தேர்வு; அமெரிக்க ஆய்வில் தகவல்

**புதுடெல்லி, மார்ச் 27:**



அமெரிக்காவை அடிப்படையாக கொண்டு செயல்படும் தரவு பகுப்பாய்வு நிறுவனம் ஒன்று உலகளவில் புகழ் பெற்ற தலைவர்கள் பற்றி சமீபத்தில் ஆய்வு ஒன்றை மேற்கொண்டது. அதில், அதிக பிரபலம் வாய்ந்த உலகளாவிய ஜனநாயக தலைவராக பிரதமர் மோடி மீண்டும் உருவாகியுள்ளார் என தகவல் தெரிவிக்கின்றது.

இதன்படி, அவர் 68 சதவீத ஆதரவை பெற்று முதல் இடத்தில் உள்ளார். சுவிட்சர்லாந்து ஜனாதிபதி கய் பார்மலின் மற்றும் தென்கொரிய ஜனாதிபதி லீ ஜே-மியுங் இருவரும் தலா 62 சதவீதத்துடன் 2-வது இடம் பிடித்துள்ளனர்.

ஒவ்வொரு நாட்டிலுள்ள வயதுக்கு வந்தவர்களிடம் மார்ச் 2 முதல் 8 வரையிலான 7 நாட்களில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, அதில் கிடைத்த சராசரியான பார்வைகளின் அடிப்படையில் இந்த விகிதங்கள் கணக்கிடப்பட்டு உள்ளன.

தொடர்ச்சியாக பிரதமர் மோடிக்கு, உள்நாட்டில் கிடைத்து வரும் பிரபலம் மற்றும் சர்வதேச அளவில் வளர்ந்து வரும் அங்கீகாரம் ஆகியவை பிற பெரிய பொருளாதார நாடுகளின் தலைவர்களை விட அவர் முன்னுக்கு வந்துள்ள விசயங்களாக குறிப்பிடப்படுகின்றன.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்டு டிரம்ப் 39 சதவீத ஆதரவையும், இங்கிலாந்து பிரதமர் கீர் ஸ்டார்மர் 24 சதவீத ஆதரவையும் பெற்றிருக்கின்றனர். தர வரிசையின்படி, குறைந்த ஆதரவை பெற்ற தலைவர்களில் ஒருவராக பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவேல் மேக்ரான் (17 சதவீத ஆதரவு) உள்ளார். அவருக்கான எதிர்ப்பு விகிதம் 75 சதவீதம் என்ற அளவில் உள்ளது.

## மூடநம்பிக்கைகள் கிடையாது; சிவராத்திரியிலும் அசைவம் சாப்பிடுவேன்: சித்தராமையா

**பெங்களூரு, மார்ச் 27:**

கர்நாடக முதல் -மந்திரி சித்தராமையா, சமீபத்தில் மாநில பட்ஜெட்டை கர்நாடக சட்டமன்றத்தில் தாக்கல் செய்தார். இதனிடையே, சித்தராமையா நல்ல நேரம் பார்த்து பட்ஜெட் தாக்கல் செய்ததாக எதிர்க்கட்சி தலைவர் ஆர்.அசோக் கூறியிருந்தார்.

இது குறித்து ஆர்.அசோக் கூறுகையில், "கடந்த காலங்களில் சித்தராமையா நல்ல நேரத்தை பார்க்காமல் இருந்திருக்கலாம். ஆனால் இந்த முறை அவர் நல்ல நேரம் பார்த்து பட்ஜெட் தாக்கல் செய்துள்ளார். ஏனெனில் அடுத்த முறை பட்ஜெட் தாக்கல் செய்வோமா? என்ற கவலை அவருக்கு எழுந்துள்ளது" என்று விமர்சித்திருந்தார்.

இந்நிலையில், இந்த விமர்சனத்திற்கு பதிலளிக்கும் வகையில் சட்டமன்றத்தில் இன்று பேசிய சித்தராமையா, "அரசாங்கத்தின் செயல்பாடுகள் மூடநம்பிக்கைகளை சார்ந்து இருக்கக் கூடாது. ராகு காலம், குளிகை காலம், எமகண்டம் உள்ளிட்ட நேரங்கள் குறித்த நம்பிக்கைகளை நான் தொடர்ந்து மறுத்து வந்திருக்கிறேன்.

நான் கடந்த காலங்களில் பலமுறை ராகு காலத்தில் பட்ஜெட் தாக்கல் செய்திருக்கிறேன். இந்த முறை அதனை தவிர்க்குமாறு எனது குடும்பத்தினர் மற்றும் அதிகாரிகள் கேட்டுக் கொண்டனர். ஜனநாயகத்தின் மீது எனக்கு நம்பிக்கை இருப்பதால், அவர்களின் வேண்டுகோளை மதித்து நடந்து கொண்டேன்.

ஆனால் தனிப்பட்ட முறையில் நல்ல நேரம், கெட்ட நேரம் குறித்தோ, கிரகணத்தை பற்றிய மூடநம்பிக்கைகள் குறித்தோ எனக்கு எந்த கவலையும் இருந்ததில்லை. உகாதி, சிவராத்தி போன்ற பண்டிகை தினங்களில் அசைவம் சாப்பிடுவதை பலர் தவிர்க்கின்றனர். ஆனால் அந்த பண்டிகை நாட்களிலும் நான் அசைவம் சாப்பிடுவேன்.

நாம் சில நாட்களை பண்டிகைகள் என்று குறிப்பிட்டு வைத்திருக்கிறோம். என்னைப் பொறுத்தவரை எல்லா நாட்களும் ஒன்றுதான்" என்று தெரிவித்தார்.

## 'அரசு நிகழ்ச்சிகளில் வந்தே மாதரம் பாடுவது கட்டாயமல்ல' - உச்சநீதிமன்றம்

**புதுடெல்லி, மார்ச் 27:**

அரசு நிகழ்ச்சிகளில் 'வந்தே மாதரம்' பாடுவது கட்டாயமல்ல, அது ஒரு நெறிமுறை அல்லது அறிவுறுத்தல் மட்டுமே என சுப்ரீம் கோர்ட்டு தெளிவுபடுத்தியுள்ளது.

அரசு நிகழ்ச்சிகளில் 'வந்தே மாதரம்' பாட வேண்டும் என்ற ஒன்றிய அரசின் வழிகாட்டுதலை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட மனுவை விசாரித்த சுப்ரீம் கோர்ட்டு, அந்த மனுவை தள்ளுபடி செய்து உத்தரவு பிறப்பித்தது. நீதிமன்றம் இந்த சுற்றறிக்கை ஒரு "அறிவுறுத்தல்" மட்டுமே என்றும், அதில் பாடலை கட்டாயமாக்கவில்லை என்றும் தெரிவித்தது. மேலும், அதை பின்பற்றாதவர்களுக்கு எந்தவித தண்டனையும் குறிப்பிடப்படவில்லை என்றும் கூறியது. மத்திய அரசு சமீபத்தில் வெளியிட்ட புதிய விதிமுறைகளில், அரசு நிகழ்ச்சிகளில் தேசிய கீதத்திற்கு முன்பாக வந்தே மாதரம் பாடப்பட வேண்டும் என்றும், அப்போது அனைவரும் எழுந்து நின்று மரியாதை செலுத்த வேண்டும் என்றும் குறிப்பிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

## ஐ.ஆர்.சி.டி.சி. வலைதளத்தில் இருந்து 3 கோடி போலி கணக்குகள் நீக்கம்: மத்திய அரசு தகவல்

**புதுடெல்லி, மார்ச் 27:**



நாடாளுமன்ற மக்களவையில் கேள்வி நேரத்தின்போது, நீண்ட தூர ரெயில்களில் கூட்ட நெரிசல் ஏற்படுவது தொடர்பான துணைநிலை கேள்வி ஒன்றுக்கு மத்திய ரெயில்வே துறை மந்திரி அஷ்வினி வைஷ்ணவ் பதிலளித்து பேசினார்.

அவர் கூறும்போது, ரெயில்களில் 70 சதவீதம் அளவுக்கு பொது பெட்டிகளும், படுக்கை வசதி பெட்டிகளும் உள்ளன. ஏ.சி. இல்லாத பிரிவுகளில் 78 சதவீத இருக்கைகள் உள்ளன. மக்களின் சவுகரியம் மற்றும் போதிய வசதிகளை உறுதி செய்வதில் அரசு அதிக கவனம் செலுத்தி வருகிறது என உறுதிபடுத்திய அவர் நடப்பு ஆண்டில் இதுவரை 75 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிறப்பு ரெயில்கள் இயக்கப்பட்டு உள்ளன என கூறினார்.

ரெயில் டிக்கெட்டுகளை அதிக விலைக்கு விற்பனை செய்வதை தடுக்கும் வகையிலான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

ஐ.ஆர்.சி.டி.சி. வலைதளத்தில் இருந்து 3 கோடி போலி கணக்குகள் நீக்கப்பட்டு உள்ளன என அவர் கூறினார்.

ரெயில்வேயின் பாதுகாப்பில் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. இதனால், தொடர் விபத்துகள் 90 சதவீதம் அளவுக்கு குறைந்துள்ளன என்றும் அவர் கூறினார்.

அதற்கு முன், இந்த மாதத்தில் மறைந்த முன்னாள் எம்.பி.க்களான விஷ்ணு மோடி மற்றும் தத்த மேகி ஆகியோருக்கு அவையில் அஞ்சலி செலுத்தப்பட்டது. அப்போது உறுப்பினர்களும், சபாநாயகர் ஓம் பிர்லாவும் அமைதியாக எழுந்து நின்றனர்.

## வணிகச் செய்திகள்

### கேரளாவில் உணவகங்கள் மூடல்: சொந்த ஊர் திரும்பிய தொழிலாளர்கள்

**புதுடெல்லி, மார்ச் 27:**

பிளாக்ராக் முதலீட்டு நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரிலாரி ஃபிங்க் கூறியுள்ளதாவது: ஈரான் விவகாரத்தில் அச்சுறுத்தல் நீடித்து, எண்ணெய் விலை உச்சத்தில் இருந்தால் அது உலகப் பொருளாதாரத்தில் ஆழமான மற்றும் மோசமான விளைவுகளை ஏற்படுத்தும். மேலும், இது ஒரு கடுமையான பொருளாதாரப் பின்னடைவுக்கு வழிவகுக்கும். உலகப் பொருளாதாரத்தின் அச்சாணியாக எரிசக்தி திகழ்கிறது. போக்குவரத்து, தொழிற்சாலை உற்பத்தி மட்டுமின்றி உணவுப் பொருட்களின் விலையையும் கச்சா எண்ணெய் விலையே மறைமுகமாகத் தீர்மானிக்கிறது. எண்ணெய் விலை 150 டாலரை எட்டும்போது, அது ஒரு மிதமான மாற்றமாக இருக்காது; மாறாக அது உலகப் பொருளாதாரத்திற்குப் பெரும் அதிர்ச்சியாக அமையும். பணவீக்க பாதிப்பு எண்ணெய் விலை உயர்வால் எரிபொருட்கள் விலை உடனடியாக அதிகரிக்கும்.

வரலாற்று ரீதியாக, கச்சா எண்ணெய் விலை உச்சத்தைத் தொட்டபோதெல் லாம் பொருளாதார மந்தநிலை ஏற்பட்டுள்ளது. பேரல் விலை 150 டாலர் என்ற நிலையில் விமான நிறுவனங்கள் தங்கள் சேவைகளைக் குறைக்கும் அல்லது கட்டணத்தை உயர்த்தும்.

எரிபொருள் விலை உயர்வால் வாகனங்களுக்கான தேவை குறையும். சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில்களின் லாப வரம்பு சரியும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# சமையல் காஸ் சிலிண்டர் முன்பதிவு அவகாசம் நீட்டிப்பா? - மத்திய அரசு புதிய விளக்கம்

**புதுடெல்லி, மார்ச் 27:**

சமையல் காஸ் சிலிண்டர் முன்பதிவில் கட்டுப்பாடு எதுவும் விதிக்கவில்லை என்றும், நகரப் பகுதிகளில் 25 நாட்களும் ஊரகப் பகுதிகளில் 45 நாட்களும் காஸ் சிலிண்டர் முன்பதிவுக்கு அவகாசம் அளிக்கப்பட்டுள்ளது என்றும் மத்திய அரசு விளக்கம் அளித்துள்ளது.



இது குறித்து பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகம் வெளியிட்ட செய்திக் குறிப்பில், 'சமையல் எரிவாயு சிலிண்டர் முன்பதிவுக்கான காலக்கெடு மாற்றியமைக்கப்பட்டுள்ளதாக சில செய்தி அறிக்கைகளும், சமூக ஊடகப் பதிவுகளும் வெளியாகியுள்ளதாக மத்திய அரசின் கவனத்துக்கு வந்துள்ளது.

அதன்படி, பிரதமரின் உஜ்வாலா திட்டத்தின் கீழ், சமையல் எரிவாயு சிலிண்டர் இணைப்புகளுக்கு 45 நாட்கள், ஒற்றை சிலிண்டர் இணைப்புகளுக்கு 25 நாட்கள் மற்றும் இரட்டை சிலிண்டர் இணைப்புகளுக்கு 35 நாட்கள் என முன்பதிவு செய்வதற்கான புதிய காலக்கெடு நிர்ணயிக்கப்பட்டு உள்ளதாக அந்த செய்திகள் தெரிவிக்கின்றன. ஆனால், அத்தகைய காலக்கெடு எதுவும் விதிக்கப்படவில்லை என்று இதன்மூலம் மத்திய அரசு தெளிவுபடுத்துகிறது. தற்போது நடைமுறையில் உள்ள சிலிண்டருக்கான முன்பதிவு செய்வதற்கான காலக்கெடுவில் எவ்வித மாற்றமும் இல்லை என்றும், அவை, நகர்ப்புறங்களில் 25 நாட்கள் என்றும், கிராமப்புறங்களில் 45 நாட்கள் என்றும் (இணைப்பு வகை எதுவாக இருப்பினும்) ஏற்கெனவே இருக்கும் நடைமுறை தொடர்வதாகவும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

# வாகன ஓட்டிகள் பீதி அடைய வேண்டாம்: பெட்ரோல், டீசல் தட்டுப்பாடு இல்லை- மத்திய அரசு விளக்கம்

**புதுடெல்லி, மார்ச் 27:**

பெட்ரோலிய அமைச்சக இணைச் செயலாளர் சுஜாதா சர்மா செய்தியாளர்களிடம் கூறுகையில், 'அனைத்து சுத்திகரிப்பு நிலையங்களும் போதுமான கச்சா எண்ணெயுடன் இயங்கி வருகின்றன. நாட்டில் போதுமான அளவு பெட்ரோல்-டீசல் இருப்பு உள்ளது. எந்தவித தட்டுப்பாடும் இல்லை. நாடு முழுவதும் சில்லறை விற்பனை நிலையங்கள் இயல்பாக இயங்கி வருகின்றன' எனக் கூறினார். இந்த விவகாரத்தில் வதந்திகளை நம்ப வேண்டாம் எனக் கூறிய அவர், நுகர்வோரை எரிபொருள் சென்றடைய அனைத்து நடவடிக்கைகளையும் அரசு எடுத்து வருவதாகவும் தெரிவித்தார். வதந்திகளை நம்பி சில பகுதிகளில் மக்கள் அவசரப்பட்டு பெட்ரோல், டீசல் வாங்குவதாகவும், அது தேவையில்லை என்றும் சுஜாதா சர்மா கூறினார். கியாஸ் சிலிண்டர் விநியோகத்தைப் பொறுத்தவரை, புவிசார் அரசியல் சூழ்நிலை காரணமாக இந்தியாவுக்கு வருவது தொடர்ந்து பாதிக்கப்பட்டு வருகிறது எனக் கூறிய அவர், இருப்பினும் உள்நாட்டில் தட்டுப்பாடு எதுவும் பதிவாகவில்லை எனவும், சிலிண்டர் விநியோகம் வழக்கம்போல் தொடர்வதாகவும் தெரிவித்தார்.

# "பாகிஸ்தானைப் போல இந்தியா தரகர் நாடு அல்ல.." - வெளியுறவு மந்திரி ஜெய்சங்கர்

**புதுடெல்லி, மார்ச் 27:**

மேற்காசிய பகுதியில் அமைந்த ஈரான் நாட்டை அமெரிக்காவும், இஸ்ரேலும் கூட்டாக இணைந்து வான்வழியாக ஏவுகணைகளை கொண்டு, கடந்த பிப்ரவரி 28-ந்தேதி கடுமையாக தாக்கின. தொடர்ந்து நடந்த தாக்குதலில் பெண்கள், குழந்தைகள் என ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பலியாகி உள்ளனர். ஈரானும் இதற்கு பதிலடி கொடுத்து வருகிறது. அமெரிக்கா, இஸ்ரேல் மற்றும் அதன் தளங்கள் அமைந்த பகுதிகள் மீது கடுமையாக தாக்குதல் நடத்தி வருகிறது. இதனால், மேற்காசியாவில் தொடர்ந்து பதற்ற நிலை நீடித்து வருகிறது. இதன் ஒரு பகுதியாக, உலக நாடுகளுக்கு சரக்கு கப்பல் செல்ல கூடிய முக்கிய ஹார்மூஸ் ஜலசந்தியை ஈரான் மூடியது. மீறி செல்லும் கப்பல்கள் தாக்கப்படும் சூழல் காணப்படுகிறது. எனினும், நட்பு நாடுகளுக்கு அனுமதி அளிக்கப்பட்டு வருகிறது. இந்த சூழலில் ஈரான் – அமெரிக்கா இடையே மத்தியஸ்தம் செய்ய முயற்சிக்கும் பாகிஸ்தானை 'தரகர் நாடு' என வெளியுறவு மந்திரி ஜெய்சங்கர் விமர்சனம் செய்துள்ளார்.

இதுதொடர்பாக மத்திய கிழக்குப் போர் குறித்த அனைத்து கட்சிக் கூட்டத்தில் பேசிய அவர், "இந்தியா ஒருபோதும் பாகிஸ்தானைப் போல தரகர் நாடாக செயல்படாது. நமது வெளியுறவுக் கொள்கை தன்னாட்சி உடையது. நாங்கள் யாருக்காகவும் மத்தியஸ்தம் செய்வதில்லை. பாகிஸ்தானுக்கு இடைத்தரகர் வேலை ஒன்றும் புதிதல்ல. 1981 முதலே அமெரிக்கா தனது தேவைகளுக்கு பாகிஸ்தானைப் பயன்படுத்தி வருகிறது" என்று ஜெய்சங்கர் கூறினார்.

முன்னதாக நாடாளும ன்றத்தில் நடைபெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்தில், பாகிஸ்தான் ஒரு மத்தியஸ்தரின் பங்கை வகிக்கிறது என்றும், இந்தியா ஒரு மவுன சாட்சியாக மாறிவிட்டது என்றும் காங்கிரஸ் தலைவர் தாரிக் அன்வர் விமர்சித்திருந்தார். இந்தக் கூட்டத்தில் பாதுகாப்பு மந்திரி ராஜ்நாத் சிங், உள்துறை மந்திரி அமித்ஷா, வெளியுறவு மந்திரி ஜெய்சங்கர், நிதி மந்திரி நிர்மலா சீதாராமன் மற்றும் பல மத்திய மந்திரிகள் கலந்து கொண்டனர்.

# 32 திருத்தங்களுடன் 2026 நிதி மசோதா மக்களவையில் நிறைவேற்றம்


**புதுடெல்லி, மார்ச் 27:**

நாடாளுமன்ற மக்களவையில் 2026-ம் ஆண்டுக்கான நிதி மசோதா 32 அரசுத் திருத்தங்களுடன் நிறைவேற்றப்பட்டது. இதன் மூலம், மக்களவையில் நிதிநிலை அறிக்கை ஒப்புதலுக்கான நடைமுறை நிறைவு செய்யப்பட்டது. இனி நாடாளுமன்ற மேலவையான மாநிலங்களவைக்கு இந்த மசோதா பரிசீலனைக்காக அனுப்பப்படும். மாநிலங்களவை இந்த மசோதாவிற்கு ஒப்புதல் அளித்த பிறகு, 2026-27ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை செயல்முறை நிறைவடையும். மத்திய நிதிநிலை அறிக்கையில், 2026-27ம் நிதியாண்டிற்கான மொத்த செலவினம் ரூ.53.47 லட்சம் கோடியாக இருக்கும் என்று கூறப்பட்டுள்ளது. இது, வரும் மார்ச் 31-ந்தேதியோடு முடிவடையும் நடப்பு நிதியாண்டை விட 7.7 சதவீதம் அதிகமாகும். அதே போல், மத்திய நிதிநிலை அறிக்கையில், அடுத்த நிதியாண்டிற்கான மொத்த மூலதனச் செலவு ரூ.12.2 லட்சம் கோடி என்று முன்மொழியப்பட்டுள்ளது. மேலும், அடுத்த நிதியாண்டில் மொத்த வரி வருவாய் வசூல் ரூ.44.04 லட்சம் கோடி, கடனாக வாங்கும் தொகை ரூ.17.2 லட்சம் கோடியாக இருக்கும் என்றும் கூறப்பட்டுள்ளது. 2027-ம் நிதியாண்டிற்கான நிதிப் பற்றாக்குறை, மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4.3 சதவீதமாக இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது. இது நடப்பு நிதியாண்டில் இருந்த 4.4 சதவீதத்தை விட குறைவு என்பது குறிப்பிடத்தக்கது.

# துருக்கி குகையில் இருந்து கிடைத்த அரிய வகை என ஏமாற்றி ரூ.15 லட்சத்துக்கு தேன் விற்ற சாமியார் கைது

**நாசிக், மார்ச் 27:**

துருக்கி குகையிலிருந்து கிடைக்கும் அரிய வகை தேன் என்று கூறி ரூ.15 லட்சத்துக்கு விற்ற சாமியார் கைது செய்யப்பட்டார். மேலும், அவர் மீது பாலியல் வன்கொடுமை புகாரும் கூறப்பட்டுள்ளது.



மகாராஷ்டிர மாநிலம் நாசிக்கை சேர்ந்தவர் ஜோதிடர் அசோக் காரத். கடற்படையில் பணியாற்றி ஓய்வுபெற்ற அசோக், சாமியார் என்றும் ஜோதிடர் என்றும் கூறிக் கொண்டு மக்களிடம் பணத்தை ஏமாற்றி வந்துள்ளார். இந்நிலையில், ஒரு பெண் கடந்த வாரம் நாசிக் போலீஸில் அசோக் மீது பாலியல் வன்கொடுமை புகார் செய்தார். இதன் அடிப்படையில் போலீஸார் அசோக்கை கைது செய்தனர்.

இது குறித்து போலீஸ் உயர் அதிகாரி ஒருவர் கூறும்போது, "அவர் துருக்கியிலிருந்து கிடைக்கும் அரிய வகை 'எல்விஷ்' வகை தேன் என்று கூறி ஒரு கிலோவை ரூ.15 லட்சத்துக்கு விற்பனை செய்து வந்துள்ளார். இது ஒரு மாயாஜால தேன் என்றும், இதைச் சாப்பிட்டால் இளமையாக மாறிவிடலாம் என்றும் கூறியுள்ளார்.

நானும் இதைக் குடித்துப் பார்த்தேன். நீங்களும் இதைக் குடித்து பலன் பெறுங்கள் என்று தன்னிடம் வந்தவர்களிடம் கூறி அவர் ஏமாற்றியுள்ளார்.

மேலும், மகாராஷ்டிர அரசியல்வாதிகளும் இவருடைய வாடிக்கையாளர்களாக இருந்துள்ளனர். இந்த எல்விஷ் வகை தேன் ஒரு கிலோ ரூ.9 லட்சத்துக்கு விற்பனையாகிறது. இது துருக்கியின் ஆர்ட்வின் நகரிலுள்ள 1,800 மீட்டர் ஆழத்திலுள்ள குகையிலிருந்து எடுக்கப்படுகிறது.

அந்தப் பெயரைக் கூறி இவர் ஏராளமான தேன் வகைகளை இங்கு விற்று பலரை ஏமாற்றியுள்ளார்.

அவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி 5 நாள் போலீஸ் காவலில் எடுத்துள்ளோம். அவரது வீடு அருகே துப்பாக்கி, தோட்டாக்கள் உள்ளிட்டவற்றை பறிமுதல் செய்துள்ளோம்.

# மகாதேவ் சூதாட்ட செயலி வழக்கு: துபை புர்ஜ் கலீஃபா வீடுகள் உள்பட ரூ.1,700 கோடி சொத்துகள் முடக்கம்

**புதுடெல்லி, மார்ச் 27:**

மகாதேவ் இணையவழி சூதாட்ட செயலி தொடர்பான வழக்கில், துபையில் உள்ள புகழ்பெற்ற புர்ஜ் கலீஃபா கட்டடத்தில் உள்ள விலையுயர்ந்த சில வீடுகள் உள்பட ரூ.1,700 கோடி மதிப்பிலான சொத்துகளை அமலாக்கத் துறை முடக்கியுள்ளது.



சத்தீஸ்கரில் முக்கிய அரசியல்வாதிகள் மற்றும் உயரதிகாரிகள் தொடர்புடைய மகாதேவ் சூதாட்ட செயலி வழக்கில், பண முறைகேடு தடுப்புச் சட்டத்தின்கீழ் அமலாக்கத் துறை விசாரணை மேற்கொண்டு வருகிறது. இந்தச் செயலியின் உரிமையாளர்களான செளரவ் சந்திரகர், ரவிஉப்பல் ஆகியோர், சூதாட்ட வலைதளங்கள் மற்றும் விளையாட்டுகளுக்கு வாடிக்கையாளர்களைப் பெற்றுதரவும், அந்தத் தளங்களின் நிதிசார் செயல்பாடுகளைக் கையாளவும் மகாதேவ் செயலி மூலம் சட்டவிரோத செயல்பாடுகளில் ஈடுபட்டு, பொதுமக்களை ஏமாற்றியதாகக் குற்றஞ்சாட்டப்படுகிறது. தற்போது ஐக்கிய அரபு அமீரகத்தில் வீட்டுச் சிறையில் உள்ள செளரவ் சந்திரகரை நாடுகடத்தி கொண்டுவர இந்தியா நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. மற்றொரு உரிமையாளரான ரவி உப்பல், ஐக்கிய அரபு அமீரகத்தில் இருந்து வனாட்டு தீவுக்கு தப்பிவிட்டதாகக் கூறப்படுகிறது. இந்தச் சூழலில், சந்திரகர், அவரது கூட்டாளிகள் மற்றும் அவர் தொடர்புடைய நிறுவனங்களுக்குச் சொந்தமாக இந்தியா மற்றும் துபையில் உள்ள ரூ.1,700 கோடி மதிப்பிலான சொத்துகளை அமலாக்கத் துறை முடக்கியுள்ளது. துபையில் உள்ள உலகின் மிக உயரமான கட்டடமான புர்ஜ் கலீஃபாவில் உள்ள விலையுயர்ந்த சில வீடுகள் உள்பட பல்வேறு வீடுகள் மற்றும் பங்களாக்கள் இதில் அடங்கும்.

# சாலையின் நடுவே மின்கம்பம்... வாகன ஓட்டிகள் அதிர்ச்சி – வைரல் வீடியோ



**லக்னோ, மார்ச் 27:**

உத்திரபிரதேச மாநிலத்தில் ஆபத்தை விளைவிக்கும் விதமாக சாலையின் நடுவே மின்கம்பம் அமைக்கப்பட்டுள்ளது அதிர்ச்சியை ஏற்படுத்தி இருக்கிறது. இந்த தொடர்பான வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாக பரவி வருகிறது. வாகனங்கள் இந்த மின்கம்பத்தில் மோதி விபத்துக்குள்ளாகும் அபாயம் இருப்பதால், உடனடியாக அகற்ற கோரி பொது மக்களும், வாகன ஓட்டிகளும் கோரிக்கை விடுத்துள்ளனர். இதுகுறித்து இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் (NHAI) விளக்கம் அளித்துள்ளது. மின்கம்பத்தை மாற்றுவதற்கான நிலம் உடனடியாக கிடைக்காததால், அதை அகற்ற முடியவில்லை என தெரிவித்துள்ளது. மேலும், நிலம் கையகப்படுத்தும் பணிகள் தற்போது நடைபெற்று வருவதாகவும், தேவையான நிலம் கிடைத்தவுடன் மின்கம்பம் மாற்றப்படும் என்றும் லக்னோ பிராந்திய அலுவலகம் தெரிவித்துள்ளது.

# 'அரசு நிகழ்ச்சிகளில் வந்தே மாதரம் பாடுவது கட்டாயமல்ல' – சுப்ரீம் கோர்ட்டு



**புதுடெல்லி, மார்ச் 27:**

அரசு நிகழ்ச்சிகளில் 'வந்தே மாதரம்' பாட வேண்டும் என்ற ஒன்றிய அரசின் வழிகாட்டுதலை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட மனுவை விசாரித்த சுப்ரீம் கோர்ட்டு, அந்த மனுவை தள்ளுபடி செய்து உத்தரவு பிறப்பித்தது. நீதிமன்றம் இந்த சுற்றறிக்கை ஒரு "அறிவுறுத்தல்" மட்டுமே என்றும், அதில் பாடலை கட்டாயமாக்கவில்லை என்றும் தெரிவித்தது. மேலும், அதை பின்பற்றாதவர்களுக்கு எந்தவித தண்டனையும் குறிப்பிடப்படவில்லை என்றும் கூறியது. மத்திய அரசு சமீபத்தில் வெளியிட்ட புதிய விதிமுறைகளில், அரசு நிகழ்ச்சிகளில் தேசிய கீதத்திற்கு முன்பாக வந்தே மாதரம் பாடப்பட வேண்டும் என்றும், அப்போது அனைவரும் எழுந்து நின்று மரியாதை செலுத்த வேண்டும் என்றும் குறிப்பிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. 'வந்தே மாதரம்' பாடல் 1875ஆம் ஆண்டு பங்கிம் சந்திர சட்டர்ஜி எழுதியது.

# ஹோட்டல்களில் "எல்பிஜி கட்டணங்கள்' விதிக்கக் கூடாது: மத்திய நுகர்வோர் பாதுகாப்பு ஆணையம் அறிவுரை

**புதுடெல்லி, மார்ச் 27:**

உணவகங்களில் "எல்பிஜி கட்டணங்கள்' மற்றும் அது போன்றவற்றை விதிப்பது தொடர்பான நியாயமற்ற வர்த்தக நடைமுறைகளைத் தடுக்கும் வகையில் மத்திய நுகர்வோர் பாதுகாப்பு ஆணையம் (சிசிபிஏ) அறிவுரை வழங்கியுள்ளது.




இந்த நடைமுறை நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 2019-இன் கீழ் நியாயமற்ற வர்த்தகமாகக் கருதப்படுகிறது என்றும் ஆணையம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக மத்திய நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோக அமைச்சக அதிகாரிகள் புதன்கிழமை தெரிவித்திருப்பதாவது: நுகர்வோர் கட்டணப் பட்டியல்களில் (பில்) எல்பிஜி கட்டணங்கள், எரிவாயு கூடுதல் கட்டணம் மற்றும் எரிபொருள் செலவு மீட்பு போன்ற கூடுதல் கட்டணங்களை ஹோட்டல்கள் மற்றும் உணவகங்கள் விதிப்பதை மத்திய நுகர்வோர் பாதுகாப்பு ஆணையம் தீவிரமாகக் கவனத்தில் கொண்டுள்ளது.

இதுபோன்ற கட்டணங்கள் தானாகவே விதிக்கப்படக்கூடாது. அதை மீறுவது கடுமையான நடவடிக்கைகளுக்கு வழிவகுக்கும்.

எரிபொருள், எல்பிஜி, மின்சாரம் மற்றும் பிற செயல்பாட்டுச் செலவுகள் போன்ற உள்ளீட்டுச் செலவுகள் ஒரு வணிகத்தை நடத்துவதற்கான செலவின் ஒரு பகுதியாகும்.

அவை உணவுப் பட்டியலிலுள்ள பொருள்களின் விலையில் சேர்க்கப்பட வேண்டும் என்றும் சிசிபிஏ தெளிவுபடுத்தியுள்ளது.

அத்தகைய செலவுகளைத் தனித்தனியான கட்டாயக் கட்டணங்கள் மூலம் வசூலிப்பது, நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 2019-இன் பிரிவு 2(47) இன் கீழ், நியாயமற்ற வர்த்தக நடைமுறையாகும்.

இதுபோன்ற கூடுதல் கட்டணத்தால் பாதிக்கப்படும் நுகர்வோர், 1915 என்ற எண்ணைத்தொடர்புகொண்டோ அல்லது தேசிய நுகர்வோர் ஹெல்ப்லைன் கைப்பேசி செயலி மூலமோ தேசிய நுகர்வோர் உதவி மையத்தில் புகார் பதிவு செய்யலாம். இணையதளத்திலும் புகாரைப் பதிவு செய்யலாம்.

மாவட்ட ஆட்சியரிடமோ அல்லது நேரடியாக சிசிபிஏவிடமோ புகார் அளிக்கலாம். அந்தப் புகாரின் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வங்கிகளில் உரிமை கோரப்படாத ரூ.60 ஆயிரம் கோடி ரிசர்வ் வங்கிக்கு மாற்றம்

**புதுடெல்லி, மார்ச் 27:**




கடந்த ஜனவரி மாத இறுதி நிலவரப்படி, பொதுத்துறை வங்கிகளில் இருந்து உரிமை கோரப்படாமல் இருந்த மொத்த வைப்புத்தொகை ரூ.60,518 கோடி அளவாக உயர்ந்துள்ளது என்று மத்திய அரசு கூறியுள்ளது. இது தொடர்பாக மாநிலங்களவையில் எழுப்பப்பட்ட கேள்விக்கு மத்திய நிதித்துறை இணை மந்திரி பங்கஜ் சவுத்ரி அளித்த எழுத்துபூர்வ பதிலில் கூறப்பட்டுள்ளதாவது: 2026, ஜனவரி இறுதி வரையிலான நிலவரப்படி, பொதுத் துறை வங்கிகளில் இருந்து ரிசர்வ் வங்கியின் வாடிக்கையாளர்கள் விழிப்புணர்வு நிதிக்கு மாற்றப்பட்ட உரிமை கோரப்படாத வைப்புத்தொகை ரூ.60,518 கோடியாகும். பிப்ரவரி இறுதி வரையிலான நிலவரப்படி, காப்பீடுதாரர்களால் உரிமை கோரப்படாத காப்பீட்டுத் தொகை ரூ.8,973.89 கோடி. இதேபோல், செபி ஒழுங்குமுறைகளின்கீழ், பரஸ்பர நிதியில் முதலீட்டாளர்களால் உரிமை கோரப்படாத தொகையின் மதிப்பு ரூ.3,749.34 கோடியாக உள்ளது. என்றார்.

## உலக அளவில் காற்று மாசு இந்தியாவுக்கு 6 ஆவது இடம்

**வாஷிங்டன், மார்ச் 27:**

2025 ஆம் ஆண்டிற்கான 'உலகக் காற்றுத் தர அறிக்கையை' (WORLD AIR QUALITY REPORT) சுவிஸ் நிறுவனமான IQAIR வெளியிட்டுள்ளது. அதில் உலக அளவில் மிகவும் மாசுபட்ட நாடுகளின் பட்டியலில் இந்தியா 6 ஆவது இடத்தைப் பிடித்துள்ளது. இந்தியாவின் சராசரி PM2.5 (நுண் துகள்கள்) அளவு கடந்த மூன்று ஆண்டுகளில் இல்லாத அளவுக்குக் குறைந்துள்ளது. 2023 இல் 54.4 G/M ஆக இருந்த அளவு, 2025-ல் 48.9 G/M ஆகக் குறைந்துள்ளது (3% சரிவு). இது உலக சுகாதார நிறுவனம் (WHO) நிர்ண யித்துள்ள அளவை விட இது மிக அதிகம். அதேபோல உலகின் மிக மோசமான 20 மாசுபட்ட நகரங்களில் 17 நகரங் கள் இந்தியா மற்றும் பாகிஸ்தான் உள்ளிட்ட மத்திய மற்றும் தெற்காசியப் பிராந்தியத்திலேயே உள்ளன.

## அரசின் மெத்தனம்: பலியாகும் குழந்தைகளின் எதிர்காலம்

'கன்ஜெனிட்டல் ஹைப்போ தைராய்டிசம்' (CH) பாதிப்பால், ஆண்டுதோறும் சுமார் 10,000-க்கும் மேற்பட்ட குழந்தைகள் நிரந்தர மூளை வளர்ச்சிக் குறைபாட்டிற்குத் தள்ளப்படுகின்றனர். குழந்தை பிறந்த 14 நாட்களுக்குள் 'யுனிவர்சல் ஸ்கிரீனிங்' (UNIVERSAL NEWBORN SCREENING) எனப்படும் ரூ.50 மட்டுமே செலவாகும் பரிசோதனையை செய்தால் இதனை எளிதில் குணப்படுத்தி குழந்தைகளின் எதிர்காலத்தை பாதுகாத்து விடலாம்.

வளர்ந்த நாடுகள் கடந்த 60 ஆண்டுகளாக இந்த எளிய மருத்துவ முறையை பின்பற்றி வருகின்றன. ஆனால் இந்தியா போன்ற வளர்ந்து வரும் நாடுகளில் இந்த மருத்துவ சோதனை இன்னும் கட்டாயமாக்கவில்லை. அரசு மருத்துவமனைகளில் பிறக்கும் லட்சக்கணக்கான குழந்தைகளுக்கு இலவசமாக வழங்கத் தேவையான நிதி மற்றும் கொள்கை முடிவுகளை எடுப்பதில் அரசு சுணக்கம் காட்டி வருகிறது.

உரிய நடவடிக்கை இல்லாததால் பாதிக் கப்பட்ட குழந்தைகளின் குடும்பங்கள் வாழ்நாள் முழுவதும் மருத்துவச் செலவுகளுக்கும், பராமரிப்புச் செலவுகளுக்கும் ஆளாகின்றனர். இது ஏற்கெனவே பொருளாதார ரீதியாகப் பின் தங்கியுள்ள குடும்பங்களை மேலும் வறுமைக்குத் தள்ளுகிறது.

## இந்தியா உள்பட 5 நட்பு நாடுகளுக்கு மட்டும் ஹோர்முஸ் நீரிணை திறப்பு! - ஈரான்

மத்திய கிழக்கில் நடைபெற்று வரும் ஈரான் - அமெரிக்கா - இஸ்ரேல் இடையேயான போர் காரணமாக உலக வர்த்தகத்தில் 70 சதவிகிதத்துக்கும் அதிகமான பங்களிப்பை அளித்துவரும் கடல்வழிப்பாதையான ஹோர்முஸ் நீரிணையை ஈரான் நிரந்தரமாக மூடியது.

அதனைத் தொடர்ந்து அமெரிக்கா பேச்சுவார்த்தை நடத்திவருவதாகவும், ஹோர்முஸ் நீரிணை திறக்கப்பட்டு அதனை அமெரிக்காவும் ஈரானும் நிர்வகிக்கும் என்றும் தெரிவித்திருந்தார்.

அவரின் பேச்சை முற்றிலுமாக மறுத்த ஈரான், ஹோர்முஸ் நீரிணையை ஈரான் மட்டுமே நிர்வகிக்கும் என்று திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், இந்தியா உள்ளிட்ட நாடுகளில் நிலவும் எரிபொருள் தட்டுப்பாட்டை போக்கும் வகையில், இந்தியா, பாகிஸ்தான், சீனா உள்பட 5 நாடுகளுக்கு மட்டும் ஹோர்முஸ் நீரிணையில் அனுமதி வழங்கப்படும் என்று ஈரான் வெளியுறவுத் துறை அமைச்சர் அபாஸ் அராக்சி தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக ஈரானின் அரசு தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் அபாஸ் அராக்சி பேசுகையில், "நீரிணை வழியாகப் பயணிக்கும் கப்பல்களின் நாடுகளைச் சேர்ந்தவர்கள் எங்களை தொடர்பு கொண்டனர்.

செய்திகளில் பார்த்திருப்பீர்கள். இந்தியா, சீனா, ரஷ்யா, பாகிஸ்தான், இராக் உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த கப்பல்கள் நீரிணையைக் கடந்து சென்றன. நாம் ஒரு போர்ச் சூழலில் இருக்கிறோம்.

இந்தப் பகுதியில் போர் சூழ்ந்திருக்கிறது. நமது எதிரிகள் மற்றும் அவர்களின் நட்பு நாடுகளின் கப்பல்களை இதன் வழியே செல்ல அனுமதிக்க எந்தக் காரணமும் இல்லை. ஆனால், இது மற்ற நட்பு நாடுகளுக்குத் திறந்தே இருக்கிறது" என்றார்.

# அதிர்ச்சி சம்பவம்: ஆற்றில் கவிழ்ந்த தனியார் சொகுசு பஸ்: 23 பேர் பலியான சோகம் - பலர் காணவில்லை

**டாக்கா, மார்ச் 27:**



வங்காளதேச நாட்டின் தென்மேற்கு பகுதியான ராஜ்பாரி அருகே உள்ளது தவுலத்தியா படகு முனையம். பெருக்கெடுத்து ஓடும் பத்மா ஆறு தலைநகர் டாக்காவை தென்மேற்கு பகுதியில் இருந்து பிரிப்பதால் இந்த ஆற்றை கடக்க படகு போக்குவரத்துதான் பிரதானமாகும். மேலும் பஸ்கள் மற்றும் சிறிய ரக வாகனங்கள் கூட படகுகளின் மூலமாகவே ஆற்றைக் கடந்து சென்று மீண்டும் சாலை பயணத்தை தொடர்கின்றன.

அதுபோலவே 40 பயணிகளுடன் வந்த பஸ் ஒன்று நேற்று மாலை படகில் ஏற முயன்றபோது எதிர்பாராதவிதமாக ஆற்றில் கவிழ்ந்தது. உடனே சுதாரித்துக் கொண்ட சில பயணிகள் ஆற்றில் நீந்தி கரை சேர்ந்தனர். சிலர் பஸ்சுக்குள் சிக்கிக் கொண்டனர். அவர்களில் தற்போது வரை 23 பயணிகள் இறந்த நிலையில் மீட்கப்பட்டதாக தகவல் வெளியானது. மேலும் பலர் மாயமாகி உள்ளதால் பலி எண்ணிக்கை அதிகரிக்கும் என்று அஞ்சப்படுகிறது.

முன்னதாக பஸ்சை மிதவைப் பாலத்தின் வழியாக படகில் ஏற்ற முயன்றபோது, மற்றொரு சிறிய படகு மிதவைப் பாலத்தில் மோதியதால், பஸ் கட்டுப்பாட்டை இழந்து ஆற்றில் கவிழ்ந்ததாக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். பஸ் விழுந்த இடத்தில் ஆறு 30 அடி ஆழம் இருக்கும் என்று கூறப்படுகிறது. காணாமல் போன பயணிகளை தேடும் பணி முழு வீச்சில் நடைபெற்று வருகிறது.

இதனிடையே நேறு இரவு நேரம் என்பதால் மீட்புப் பணிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டதாகவும், பின்னர் மீண்டும் தொடங்கி நடைபெற்று வருவதாக போலீஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

முன்னதாக நேற்று இரவு சுமார் 11:15 மணியளவில், பஸ்சின் ஒரு பகுதி தெரிய ஆரம்பித்தது, மேலும் இரவு 11:30 மணியளவில், கப்பலின் கிரேனைப் பயன்படுத்தி முழுபஸ்சும் மேலே தூக்கப்பட்டது.

இந்தநிலையில் இந்த சம்பவத்தில் உயிர் பிழைத்த ஒருவர், தான் நீந்தி கரைக்கு வந்ததாகவும், ஆனால் பஸ் மூழ்கியபோது தனது மனைவியும் குழந்தையும் தண்ணீருக்குள் மூழ்கியதைப் பார்த்ததாகவும் கதறியபடி கூறியது சோகத்தை ஏற்படுத்தியது.

# ஜப்பானில் சீன தூதரகத்துக்குள் கத்தியுடன் நுழைந்த ராணுவ வீரர்

**டோக்கியோ, மார்ச் 27:**



ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் உள்ள சீன தூதரகத்துக்குள், ஜப்பான் ராணுவ வீரர் ஒருவர் கத்தியுடன் அத்துமீறி நுழைந்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஜப்பான் பாதுகாப்புப் படையின் 2-ஆம் நிலை லெஃப்டினன்ட் கோடாய் முரடா (23), தூதரக ஊழியர்களால் பிடிக்கப்பட்டு, காவல்துறையிடம் ஒப்படைக்கப்பட்டார். அவரிடமிருந்த கத்தி பறிமுதல் செய்யப்பட்ட நிலையில், தூதரக அதிகாரிகளை அவர் கொலை செய்யப்போவதாக மிரட்டியதாக சீனா குற்றஞ்சாட்டியது.

இருப்பினும், தூதரக அதிகாரிகளிடம் தனது கருத்துகளைத் தெரிவிக்க வந்ததாகவும், அவை நிராகரிக்கப்பட்டால் தற்கொலை செய்துகொள்ளத் திட்டமிட்டிருந்ததாகவும் முரடா விசாரணையில் தெரிவித்தார்.

இச்சம்பவத்தைக் கண்டித்த சீன வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் லின் ஜியான், வியன்னா உடன்படிக்கையின்கீழ் தூதரகங்களுக்குப் பாதுகாப்பு வழங்குவதில் ஜப்பான் கடமை தவறிவிட்டதாக சாடினார்.

இது தொடர்பாக ஜப்பான் அரசு வருத்தம் தெரிவித்ததோடு, உரிய விசாரணை நடத்தி குற்றவாளிக்குத் தண்டனை வழங்கவும், எதிர்காலத்தில் இத்தகைய ஊடுருவல்கள் நிகழாமல் தடுக்கவும் நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தது.

தைவான் விவகாரத்தில் சீனாவுக்கு எதிராக ஜப்பான் பிரதமர் சனே தகாய்ச்சி பேசியது முதல் இருநாட்டு உறவில் பெரும் விரிசல் ஏற்பட்டுள்ளது.

# அமெரிக்காவின் எஃப்-18 விமானத்தை சுட்டு வீழ்த்தியது ஈரான்!

**தெஹ்ரான், மார்ச் 27:**



அமெரிக்கா உயர்திறன் கொண்ட ராணுவ விமானங்களில் ஒன்றான எஃப்-18 போர் விமானத்தை ஈரானின் புரட்சிக்கர காவல்படை தாக்கி அழித்ததாக ஈரானின் தொலைக்காட்சி நிறுவனம் ஒன்று விடியோ வெளியிட்டுள்ளது. இந்த விடியோ வேகமாகப் பகிரப்பட்டு வரும் நிலையில், இந்த விடியோ போலியானது என்று அமெரிக்க தலைமை ராணுவக் கட்டுப்பாட்டு மையம் தெரிவித்துள்ளது.

மேலும், ஈரானின் நவீன வான் பாதுகாப்பு அமைப்புகளைப் பயன்படுத்தி, சாபஹார் பகுதிக்கு மேலே பறந்த எஃப்-18 ரக போர் விமானம் தாக்கப்பட்டதாக இஸ்லாமியப் புரட்சிகரப் பாதுகாப்புப் படை அறிவித்துள்ளது. இது முற்றிலும் உண்மைக்குப் புறம்பானது என்று குறிப்பிட்டுள்ளது.

அமெரிக்காவின் ஆயுதப்படைக்கு ஈரான் அடிபணியும் என்ற நோக்கி, கடந்த பிப். 28 ஆம் தேதி தொடங்கிய போர் ஒரு மாதத்தை எட்டும் வரையில் முடிவுக்கு வராமல் தொடர்ந்து வருகிறது.

பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருவதாக டிரம்ப் மீண்டும் மீண்டும் கூறிவந்தாலும், போர் தொடர்ந்து நடைபெறுவதாகவும் அமெரிக்காவை பழித்தீர்ப்போம் என்றும் ஈரான் சூளுரைத்துள்ளது.

இதற்கு மத்தியில் கடந்த வாரங்களில் அமெரிக்காவின் எஃப் 15 ரக போர் விமானம், எதிரிகளால் தாக்க முடியாத மின்னல் வேகத்தில் பயணிக்கக் கூடிய அமெரிக்க விமானப் படையின் அதிநவீன 5 ஆம் தலைமுறை போர் விமானமான எஃப் - 35 லைட்னிங் 2 ரக போர் விமானம் உள்ளிட்டவைகளையும் தாக்கி அழித்த விடியோக்களையும் வெளியிட்டிருந்தது.

## ஈரானுக்கு எதிரான போர்: அமெரிக்காவில் டிரம்பின் செல்வாக்கு சரிவு

**வாஷிங்டன், மார்ச் 27:**

அமெரிக்க அதிபராக கடந்த (2025) ஆண்டு ஜனவரி 20-ந் தேதி டொனால்டு டிரம்ப் 2-வது முறையாக பதவி ஏற்றார். அவருடைய ஆட்சி காலத்தில், அரசின் செலவுகளை குறைக்க பல்வேறு சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொண்டார். ஆனால், ஈரான் - இஸ்ரேல் போரில் தலையிட்டு, இஸ்ரேலுக்கு ஆதரவாக ஈரான் மீது தாக்குதல் நடவடிக்கையில் ஈடுபட்டதால், அமெரிக்காவுக்கு பாதுகாப்பு தளவாடங்களுக்கான செலவு அதிகரித்தது. மேலும், பெட்ரோல், டீசல் தட்டுப்பாடு ஏற்பட்டு, அதன் விலையும் அதிகரித்தது, அமெரிக்கர்கள் மத்தியில் டிரம்ப் மீது கடும் கோபத்தை ஏற்படுத்தியது.

இந்த நிலையில், கடந்த வாரம் அதிபர் டிரம்பின் பணி செயல்பாடு, மக்களிடம் உள்ள செல்வாக்கு குறித்து ராய்ட்டர்ஸ் மற்றும் இப்சாஸ் அமைப்புகள் கருத்து கணிப்பு நடத்தின. அப்போது, டிரம்புக்கான செல்வாக்கு 40 சதவீதம் என்ற அளவில் இருந்தது.

இந்த நிலையில், நேற்று மீண்டும் எடுக்கப்பட்ட கருத்து கணிப்பில், அவரது செல்வாக்கு 36 சதவீதமாக குறைந்தது. இதற்கு, ஈரான் மீதான அமெரிக்க தாக்குதல் தேவையில்லாத ஒன்று என மக்கள் நினைப்பதே காரணமாக சொல்லப்படுகிறது.

அமெரிக்க அதிபராக 2-வது முறை டிரம்ப் பதவியேற்ற காலத்தில், முதல் முறையாக அவருடைய செல்வாக்கு மக்கள் மத்தியில் கடுமையாக சரிந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

## 2030 -க்குள் நிலவில் நிரந்தர ஆராய்ச்சி மையம்: நாசா திட்டம்

**வாஷிங்டன், மார்ச் 27:**

பூமியின் ஒரே துணைக்கோளான நிலவில் தண்ணீர் உள்ளதா? மனிதர்கள் வாழ சாத்தியம் உள்ளதா? என பல்வேறு ஆய்வுகளை விஞ்ஞானிகள் மேற்கொண்டு வருகிறார்கள். குறிப்பாக நிலவு குறித்த ஆய்வில் அமெரிக்க விண்வெளி ஆய்வுமையமான நாசா தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

1970-க்குப் பிறகு நிலவுக்கு மனிதர்களை அனுப்பும் ஆர்டெமிஸ்-2 திட்டத்தை அமெரிக்காவைச் சேர்ந்த விண்வெளி ஆய்வு மையமான நாசா முன்னெடுத்து வந்தது. இதற்கான அனைத்து பணிகளும் கிட்டத்தட்ட முடிவுக்கு வந்தநிலையில் விண்கலத்தில் ஏற்பட்டுள்ள தொழில்நுட்ப கோளாறு காரணமாக தள்ளி வைக்கப்பட்டுள்ளது.

மேலும் நிலவை சுற்றி விண்வெளி நிலையம் ஒன்றை அமைக்க நாசா திட்டமிட்டிருந்தது. தற்போது அந்த திட்டத்தை கைவிடுவதாக நாசா அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது. அதற்கு பதிலாக நிலவில் நாசாவுக்கான நிரந்தரமான ஆராய்ச்சிமையத்தை அமைக்க இலக்கு நிர்ணயித்துள்ளது. இதற்காக அரசு சார்பில் ரூ.1 லட்சத்து 86 ஆயிரம் கோடி (20 பில்லியன் டாலர்கள்) நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் 2030-க்குள் இதனை அமைக்கவுள்ளதாக அதன் தலைவர் ஜேரட் ஐசன்மேன் தெரிவித்துள்ளார்.

## மேற்கு ஆசியாவுக்கு மேலும் 2,000 வீரர்கள் அனுப்பும் அமெரிக்கா



**வாஷிங்டன், மார்ச் 27:**

மேற்காசிய நாடான ஈரானுடன் அமெரிக்காவும் இஸ்ரேலும் போரிட்டு வருகின்றன. இதனால் உலக நாடுகளில் கச்சா எண்ணெய் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இந்த நெருக்கடிக்கு தீர்வு காண அமெரிக்கா தனது கடற்படையை வளைகுடா நோக்கி அனுப்பியுள்ளது. இதில் சுமார் 4,500 வீரர்கள் இடம்பெற்றுள்ளனர். இந்நிலையில் ஈரானுடன் புதிய ராஜதந்திர முயற்சியை அதிபர் டொனால்டு ட்ரம்ப் பரிசீலித்து வரும் நிலையில், அவருக்குக் கூடுதல் ராணுவ வாய்ப்புகளை வழங்கும் விதமாக, அமெரிக்க ராணுவத்தின் 82-வது விமானப் படையை சேர்ந்த சுமார் 2,000 வீரர்களை மேற்கு ஆசியா செல்லுமாறு பென்டகன் உத்தரவிட்டுள்ளது. இவர்கள் 18 மணி நேரத்துக்குள் உலகின் எந்தப் பகுதிக்கும் செல்லக் கூடிய திறன் கொண்ட, சுமார் 3,000 வீரர்களை கொண்ட ஒரு படைப்பிரிவில் இடம்பெற்றுள்ள வீரர்கள் ஆவர்.

# அனுமதி பெறாமல் ஹார்முஸ் ஜலசந்தி வழியாக சென்ற பாகிஸ்தான் கப்பலை திருப்பி அனுப்பிய ஈரான்

**தெஹ்ரான், மார்ச் 27:**



அனுமதி பெறாமல் ஹார்முஸ் ஜலசந்தி வழியாக பாகிஸ்தான் செல்ல முயன்ற கன்டெய்னர் கப்பலை ஈரான் திருப்பி அனுப்பியுள்ளது. அமெரிக்கா, இஸ்ரேல் கூட்டுப் படைகள் மற்றும் ஈரான் இடையிலான போர் 3 வாரங்களைக் கடந்து நடைபெறுகிறது.

இதனால், ஹார்முஸ் ஜலசந்தி வழியாக சரக்குக் கப்பல் செல்ல ஈரான் தடை விதித்துள்ளது. இந்தியா உள்ளிட்ட சில நாடுகள் பேச்சுவார்த்தை நடத்தியதால் சில கப்பல்களுக்கு ஈரான் அனுமதி வழங்கியது. இந்நிலையில், அனுமதி பெறாமல் ஹார்முஸ் ஜலசந்தி வழியாக பாகிஸ்தான் செல்ல முயன்ற கன்டெய்னர் கப்பலை ஈரான் திருப்பி அனுப்பியுள்ளது.

இதுகுறித்து ஈரானின் இஸ்லாமிய புரட்சிகர பாதுகாப்புப் படையின் (ஐஆர்ஜிசி) கடற்படைத் தளபதி அலிரேசா தாங்சிரி கூறும்போது, "சட்ட நெறிமுறைகளுக்கு இணங்கத் தவறியதாலும், ஹார்முஸ் ஜலசந்தி வழியாகச் செல்ல அனுமதி பெறாததாலும், பாகிஸ்தான் நோக்கி செல்ல முயன்ற செலன் என்ற கன்டெய்னர் கப்பலை கடற்படை வீரர்கள் தடுத்து நிறுத்தி திருப்பி அனுப்பி உள்ளனர்.

இந்த குறுகிய நீர்வழிப்பாதை வழியாக கப்பல்கள் செல்வதற்கு ஈரானின் கடல்சார் ஆணையத்தின் முழுமையான ஒருங்கிணைப்பு அவசியம். இது நாட்டின் இறையாண்மையைப் பாதுகாக்கும் நடவடிக்கை" என்றார். உலகளாவிய கச்சா எண்ணெய் விநியோகத்தில் 5-ல் ஒரு பங்கு செல்லும் இந்த முக்கிய பாதையில் ஈரான் தனது கட்டுப் பாட்டைத் தீவிரப் படுத்தியுள்ளது.

"நட்பு நாடுகளின் கப்பல்கள் பாதுகாப்பு விதிமுறைகளுக்கு உட்பட்டு செல்லலாம்" என ஈரான் எச்சரித்துள்ளது. அமெரிக்கா இப்பகுதிக்கு கூடுதல் படைகளை அனுப்பி வரும் வேளையில், பாகிஸ்தான் உள்ளிட்ட இடைத்தரகர்கள் மூலம் 15 அம்ச போர் நிறுத்த திட்டத்தை முன்மொழிந்துள்ளது. இருப்பினும், ஈரான் பேச்சுவார்த்தைக்கான வாய்ப்புகளை நிராகரித்துள்ளது.



# ஏப்ரல் 2ம்தேதி முதல் பிரசாரத்தை தொடங்குகிறார் மு.க.ஸ்டாலின்

# உலகின் புகழ் பெற்ற தலைவராக பிரதமர் மோடி தேர்வு



# ஆந்திராவில் டிப்பர் லாரி மோதி தனியார் பேருந்து தீப்பிடித்து எரிந்தது: 13 பேர் உயிரிழப்பு

# ராமேசுவரம் மீனவர்கள் 7 பேர் இலங்கைக் கடற்படையினரால் கைது!

# ரயிலில் ரூ.4 கோடி பணம் பறிமுதல் விவகாரம்: நயினார் மீது வழக்குப் பதியக் கோரி திமுக மனு

# மணிப்பூரில் இந்திய ராணுவ முகாமின் மீது குகி தீவிரவாதிகள் துப்பாக்கிச் சூடு!

தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com

Tamilnaduepaper

சென்னை 27.03.2026 வெள்ளிக்கிழமை இலவச இ-பேப்பர்